தமிழ்ப் பொழில்

# ஞான சம்பந்தம்

32. ஏப்ரல் - ஜூன் 1,3

இந்திராஜித், 1956

ஞ211, N25TP
N56-32-1,3
209457

540
2-58

வாழ்க தமிழ்!

678

# தமிழ்ப் பொழில்

துணர் ௩௨. மலர் ௧.

20 APR 1958

துன்முகி — சித்திரை.
(1956)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சை.

பொழிற்றொண்டர் :

இராவ்சாகேப், S. சுயம்பிரகாசம், B.A., B.L., M.L.A.,

# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௭, | மலர் |
|---|---|---|
| ௩௨ | துன்முகி, சித்திரை, | ௧. |
| | 1956 ஏப்ரல், மே. | |


## பொழிற்றொண்டர் கருத்துரைகள்.

செய்யுளுக்கும், உரைநடைக்கும் உள்ள வேறுபாட்டைப் போலவே எழுத்திற்கும் பேச்சிற்கும் வேறுபாடுண்டு. கடுமையும் திரிபும் பல பொருள்படும் புணர்ச்சியும் குறைத்துக்கொள்ளலா மாயினும், இலக்கண வரம்பையும் சான்றோர் மரபையும் விட்டுவிடுவ தென்பது மொழி வளர்ச்சிக்கிழுக்காகும். கன்னித் தமிழைக் கையாள்வோர் வரம்பு மீறினால் என்னாவதென்று கருதியே தொல் காப்பியர் முதல் ஆறுமுக நாவலர் வரை மரபாக இலக்கணத்தைப் போற்றியும் வலியுறுத்தியும் வந்துள்ளனர். அதனாற்றான் இரண்டா யிரம் ஆண்டுகட்கு முற்பட்ட நூலை இப்பொழுதும் தெளிவாக நாம் அறிகிறோம். யாழ்ப்பாணத் தமிழன் எழுதிய உரைநடையைச் சென்னைத் தமிழன் செம்மையாகப் புரிந்துகொள்ளுகிறான். அவ் வளவு காப்பு இலக்கணத்தில் அமைந்துள்ளது. இதைவிட்டு 'நீ வீட்டிற்குப்போய் வா' என்பதனை 'நீ ஊட்டுக்குப் பூட்டுவா' எனப் பேசுவது போன்றே எழுதினால் 'நீ உண்ணாமல் வாயைப் பூட்டிவை' என்ற பொருளைத் தானே தரும். சொல்லுவோனும் கேட்போனும் எதிரெதிர் இருப்பதாலும் காலம், இடம், கருத்து முதலிய சூழ்நிலை களாலும் எவ்வளவு கொச்சையாகப் பேசினாலும் புரிந்துகொள்ள வியலும். பேச்சு அழிந்து விடும். ஆனால் அதனை அப்படியே எழுதினால் அ க ர ா தி வைத்துக்கொண்டாலும் புரிந்துகொள்ள வியலாது. எனவே பேசுவதுபோன்றே எழுதுதல் பிழையாகும்.

திரு. சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் அண்மையில் பெரியார் டி. கே. சி. அவர்களின் படத்திறப்பின்போது "கரடுமுரடான சொற்களை உபயோகிக்காமல் எல்லாருக்கும் புரிகிற

209457



முறையில் எழுத வேண்டியது அவசியந்தான். ஆனால் தமிழ் மரபி லிருந்து பிசகாமல் இலக்கணப் பிழைகள் இல்லாத திருத்தமான நடையில் எழுத வேண்டும். அகத்திய முனிவர் வந்து இன்றைய தமிழைப் படித்தாலும் குற்றங் காணமுடியாத முறையில் இருக்க வேண்டும்" (15–4–56 கல்கி) என்று கூறியுள்ள கருத்துக்களை எழுத்தாளர்கள் நினைவுகூர வேண்டுகிறோம்.

## சங்க நிகழ்ச்சிகள்.

21—3—56 சங்கச் சார்பில் திருவாளர், திருவாசகமணி, K. M. பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல்., அவர்கள் தமிழ்ப்பெரு மன்றத்தில் "திருக்குறளும், ஐந்தாண்டுத் திட்டமும்" என்ற தலைப்பில் இப்பொழுது இந்திய அரசியலார் வகுத்துள்ள திட்டங்கள் யாவும் வள்ளுவரால் தெளிவாக ஆனால் சுருக்கமாக 2000 ஆண்டு கட்கு முன்னரே சொல்லப்பட்டவற்றுள் சிலவே என்பதனை ஒரு சில குறள்கள்மூலம் அழகாக விளக்கி ஓர்சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மேலத்தஞ்சை மாவட்ட நடுவர், (District Judge) திரு. J. அப்துர் இரகீம், பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையேற்றருளினார்கள்.

14—4—56 உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி மாணவர் இலக்கிய மன்றம் 15-ஆம் ஆண்டு விழாச் சிறப்பாக நடந்தது. அது போது தஞ்சை, சரபோஜிக் கல்லூரி முதல்வர், திரு. Captain, T. முருகையன், எம். ஏ., அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

குடந்தை, அரசினர் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைமைப் பேராசிரியர், திரு. அ. கிருட்டினமூர்த்தி, எம்.ஏ. பி.எல்., எம்.ஓ.எல்., (ஹானர்ஸ்) அவர்கள், "மொழியும் உணர்வும்" என்ற தலைப்பில் சிறந்ததோர் சொற்பெருக்காற்றினார்கள். பள்ளி மாணவ, மாணவி களால் சிறந்த கலை நிகழ்ச்சிகளும், மாணவர்களால் "சிவமும் செந்தமிழும்" என்னும் இலக்கிய நாடகமும் நிகழ்ந்தன. பள்ளித் தலைவர், திருவாளர், K. M. சுந்தரம், பி. ஏ., எல். டி., அவர்கள் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

பொழிற்றொண்டர்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# கரந்தைக் கோவை.

[ வித்துவான், ச. பாலசுந்தரம். ]

## 15. வரைதல் வேட்கை.

*தலைவியைப் பாங்கி பருவரல் வினாதல்.*

209 ஆலமுண் டோன்வரை விந்தமும் போய்த்தமிழ் அன்னையின்று
ஞாலமுண் டோன்வரை யும்மிழந் தாளென நைந்தனையோ?
மூலமுண் டோபிற நின்றுயர்க் கன்னை முனிந்தனளோ?
மேலுமுண் டோகரந் தைத்தமிழ் போற்கமழ் மெல்லியலே?

*தலைமகள் அருமறை செவிலி அறிந்தமை கூறல்.*

210 செல்லா உணவுமென் கொள்ளா உறக்கமும் செப்புமொழி
ஒல்லா நிலையுமோர்ந் தன்னைக் கரந்தையைப் போலொளிரும்
நல்லாய்! உளத்திலென் நாடினை? என்றனள் நாக்குழற
எல்லா! மறைத்தொரு வில்லா விடையை யியம்பினனே.

*இதுவுமது.*

பண்பட்ட செந்தமிழ்ப் பாநலம் பார்த்துப் பயில்கரந்தைத்
தண்பட்ட மேவிய சாரற் குறுகுந் தலைவரின்பால்
எண்பட்ட நெஞ்சொடும் யானிருக் கும்போ தெனைவளர்த்தாள்
கண்பட்ட தாலுளம் புண்பட்ட தேவுயிர்க் காரிகையே.

*தலைமகள் தலைவன் வருந்தொழிற் கருமை சாற்றல்.*

211 தரையொடுங் காத தமிழ்சேர் கரந்தைத் தலைவர்வரின்
உரையொடுங் காத செவிலியும் ஊருமூர்க் காவலரும்
குரையொடுங் காத ஞமலியும் கூகையும் கோழியும்வான்
வரையொடுங் காத மதியும் பகைசெயும் வாணுதலே.

*தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்.*

212 அருந்தமிழ் வேலையில் ஆரமு துண்ணற் கறிஞர்புகழ்க்
கரந்தையின் பாலணை வாமெனச் சொல்வர் கமழ்குழலாய்!
மருந்தனை யார்மனம் போல்வலி கொள்ளுமொர் மாட்சியிலேம்
தெரிந்தனை வோமவர் சீர்பதி நந்துயர் தீர்வதற்கே.

---

*209 ஆலமுண்டோன்—சிவபெருமான். வரை—இமயமலை. விந்தம்—விந்தியமலை. ஞாலமுண்டோன்—திருமால். வரை—திருப்பதி. பிறமூலமுண்டோ என மாறுக—துயர்வேறுமுண்டோ என்க. 210 ஒல்லாநிலை—பொருந்தாமை. ஓர்ந்து—ஆய்ந்து. எல்லா!—தோழியே. இல்லாவிடை — பொய்ம்மை. தண்பட்டம்—குளிரோடை. எண்பட்ட—சிந்தனையுடைய. கண்பட்டது—கண்டனள் என்றபடி. 211 தரையொடுங்காத—தரையின்கண்ணே பிறமொழிகள்போல மறையாத. உரை—இடித்துரை. ஞமலி—நாய். வான்வரை—ஆகாயத்திடத்து. 212 தமிழ்வேலை—தமிழாகிய கடல்.*

### பாங்கி இறைவனைப் பழித்துரைத்தல்.

213 நெறிமர பாயவை நீங்ககி லாத்தமிழ் நேர்கரந்தைக்
குறிமர பானமைக் கூடிய கோனுளங் கொண்டதெலாம்
பொறிமர பாயின வோவுயி ரென்றுபு கன்றதுபொய்ச்
செறிமர பாயின தாடவர் யாவரும் தீயவரே.

### இறைவி இயற்பட மொழிதல்.

214 வளிநிலை வான்பரி ணுமம் ஒளியொலி மாட்சியெலாம்
தெளிவுடன் செப்புந் திறந்தமிழ்க் குண்டெனத் தேர்ந்திருந்தும்
இளிவரல் நம்மவ ராற்பெறக் கண்டனம் ஏர்கரந்தைக்
களிதமி ழார்மறந் தாரெனின் நம்வினை காரிகையே.

### கனவு நலிபுரைத்தல்.

215 மொழித்தேன் பிழிபவர் வாழ்கரந் தைப்பதி வள்ளலுடன்
சுழித்தே னிரவினிற் றூக்கமென் றேர்ந்திலன் றுண்ணெனவே
விழித்தே னியற்கையை வெஞ்சுடர் தன்னை வெறுத்திறையைப்
பழித்தேன் நினைவென வோர்நிலை யீண்டுப் படைத்ததற்கே.

### கவினழி புரைத்தல்.

216 பீடுறு செந்தமிழ்ப் பெட்பார் கரந்தையைப் பேணகிலார்
நாடொறு நூனய மாயகி லார்மதி நைவதென
வாடுறு மென்னெழில் மங்கைநல் லாயிந்த, மண்ணுலகிற்
கோடுறு தேன்மகிழ்ந் தாரதைச் சேற்றிடைக் கொட்டுவரே?

### தன்றுயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்.

217 ஒன்றே இறையென ஓதுந் தமிழ்நெறி யோர்கரந்தை
நின்றே பயின்றநெஞ் சத்தவர்க் கென்றன் நெடுந்துயரைச்
சென்றே உரைப்பவர் நன்றே பெருதவென் தீவினையைக்
கொன்றே புகழ்பெறு வாரெனக் கும்முயிர் கூட்டுவரே.

---

213 நெறி—இலக்கணம். மரபு—சான்றோர் வழக்கு. குறிமரபால்—குறியினிடத்து முறைமையாலே. பொறி மரபு—ஐம்பொறியால் நுகரும் இன்புச்செயல். செறிந்த பொய் என மாறுக. 214 வளிநிலை—காற்றின் இயக்கமும் செறிவும். ஒளி—வானிடத்துள்ள கோள்கள் கதிர்மதி முதலியன. ஒலி—கடலொலி இடி அருகரண ஓசை முதலியனவும் எழுத்தொலி முதலியனவும். 215 சுழித்தல்—திளைத்தல் தூக்கமும் விழிப்புமாகிய இருநிலைமையுடைய இயற்கையையும் அதனை இயற்றும் கதிரவனையும் காரணமாகிய கடவுளையும் வெறுத்தேன் என்றுள் தூங்கிக்கொண்டேயிருந்தால் கனவு நிலை நீடிக்குமென்ற கருத்தால். 216 கோடுறு தேன்—கொம்புத்தேன். பிறபொருள்வைம்பணி. 217 சென்றுரைப்பவரைப் பெருத தீவினையைச் கொல்லுதலாவது சென்றுரைப்பவரை நேரச் செய்தல் அதைச் செய்தார் புகழ் பெறுதலோடு தனக்கும் உயிரளித்தாராவர் என்று கூறினுள் தலைவி.



### துன்புறு பாங்கிநீ சொல்லெனச் சொல்லல்.

218 தும்பியி டத்தினிற் றேனிருக் கும்மிடம் சொல்லுவரோ?
அம்பிய லும்விழி யாய்கரந் தைத்தமிழ் ஆளளர்போல்
வெம்பியி ருந்தெழில் வாடுமுன் மேனி மெலிவையெலாம்
நம்பிய கப்பொருள் தேறினர்க் கென்யான் நவிலுவதே.

### அலர்பார்த் துற்ற அச்சக் கிளவி.

219 வீயலர் நன்மணம் மேவுங் கரந்தை வியன்றமிழைத்
தோயலர் வாயுரை போற்றுயர் செய்யுமித் தோகையரின்
வாயலர் நாணுதும் வார்குழல்! முன்னம் மதன்சிலையில்
சாயலர் ஆற்றகில் லேனிவை வேறெனைச் சார்கின்றதே.

### ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி

220 செல்லுறு காரெனச் செந்தமிழ்க் காவியம் செய்தகம்பன்
சொல்லுறு நற்கரந் தைமகிழ் தோன்றல் துணிந்துவரும்
கல்லுறு கான்வரைக் கைம்மலை தேடிக் கடும்புலியூர்
அல்லுறு புன்னெறிக் கேயுளம் போயின தாயிழையே.

### காமமிக்க கழிபடர் கிளவி.

221 சங்கந் திகழ்கரந் தைத்தமிழ் ஒப்பத் தருமமிழ்து
பொங்குங் கடற்கழி காற்பொழில் காளெழிற் புள்ளினங்காள்!
இங்குற் றழுவதென் னேயெனக் கேளலிர் என்னுயிரிற்
பங்குற் றவர்வரப் பார்த்துரை யீரென்ன பாவமிதே?

### தன்னுட் கையா றெய்திடு கிளவி.

222 உடல்வெளுத் தாயுறங் காயுண வுண்ணுய் உயர்குருகே!
மடல்விடு செந்தமிழ் மன்றல்மிக் கோங்க மகிழ்கரந்தைக்
கடல்வழி நோக்கிநின் றேங்குமென் போலும் கலந்தவரை
அடல்புரி யாணினத் தாற்றுயர் நீயும் அடைந்தனையே ?

### நெறி விலக்குவித்தல்.

223 கணங்கொளுஞ் செந்தமிழ்க் காவலர் துன்னுங் கரந்தையின்பாற்
குணங்கொளும் நூலறி கோமகன் தன்னைக் குறுகியவர்
மணங்கொளும் நாளினல் லாலிருள் வாயரி மாவிலங்கின்
நிணங்கொளும் நீணெறி வாரலென் பார்க்கிசை நீடுமன்றே.

---

218 தும்பி—வண்டு. தலைவனே நின் துயர் அறிவான் நான் சொல்வது மிகை என்று தோழி கூறினள் என்பது கருத்து. 219 வீஅலர்-விரியும் மலர்கள் அலரும். தோயலர்—பொருந்ாதவர். வாயலர்—வாயாற் கூறும் பழிமொழி சிலையில் சாய்அலர்—வில்லிற் பொருந்தும் மலரம்புகள். 220 செல்—இடி. உறுதல்—பொருந்துதல். கைம்மலை—யானை. அல்—இருள். 221 கழிபடர்—மிக்க துன்பம். 222 மன்றல்—புகழ் மணம். அடல்புரிதல்—கொல்லுதல். 223 கணம்—குழு. அரிமா—சிங்கம். நிணம்—கொழுப்பு.

*குறிவிலக்குவித்தல்.*

224 நெறிவரு செந்தமிழ் நீடுங் கரந்தையை நேரணங்கே
கறிவளர் சாரல்நம் காவிடை முன்னங் கலந்துயரும்
குறிவரு வாரிடம் கூறுக அன்னையக் கொல்லையிலே
மறிதரு வாள்பகல் ஆரிருள் சேரலம் வாரலென்றே.

*வெறி விலக்குவித்தல்.*

225 தேடும் பொருள்களெ லாந்தருந் தெய்வத் தமிழினிசை
பாடும் கரந்தையைப் பற்றலர் போலுளம் பைங்கணுற
ஆடும் வெறியினை ஆய்ந்தனள் அன்னைநம் அண்ணலினுற்
கூடும் பசப்பைய ணங்கணங் கிற்றெனக் கொண்டனளே.

*பிறர் வரைவு விலக்குவித்தல்.*

226 பெற்றோர் அறிகிலர் என்மனம் நன்மணம் பேசிமனை
உற்றோர்க் குரைவிடுத் தாலுடன் யானும் உயிர்விடுவேன்
மற்றோர் பிறப்பினி லேயெனை முன்னம் மணந்துகொளக்
கற்றோர் மகிழ்கரந் தைவரை யாரிடம் கண்டுசொல்லே!

*குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல்,*

227 பார்கொண்ட வாழ்வினைப் பாடுந் தமிழ்வளர் பைங்கரந்தை
ஊர்கொண்ட வேலவர் உற்று ருடன்களி றூர்ந்துமணச்
சீர்கொண்ட னைந்திடிற் செந்திரு வேநமைச் சேர்ந்தவர்கள்
கார்கண்ட தோகையைப் போலெதிர் ஏற்றுக் களிகொள்வரே.

## 16. வரைவு கடாதல்.

*வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல்.*

228 ஈரைந் தொலியிரு நான்கிடம் மேவி எழுந்தமிழின்
சீரைந் துரைப்பவர் சேர்கரந் தைப்பதி செம்மல்! விழி
நீருந்து கண்ணியைக் கண்டவெந் தாயெனை நேர்வினவ.
ஊருந் திரையவள் வண்டல் அழித்ததென் றேதினனே.

*அலரறிவுறுத்தல்.*

229 காவுற் றெழுந்தநுங் காதல் முகையைக் களவெனுமோர்
நாவற்ற வண்டலர்த் தாநிற்ப விந்நகர் நங்கையர்வாய்
மேவுற் றலர்ந்தத னுற்கரந் தைப்பயில் வேளனையாய்!
நோவுற் றினைந்தனள் பாவையென் னேயினி நோற்பதுவே?

---

224 *கறிவளர் கானம் - மிளகுக்கொடி படரும் மலைச்சாரல். குறி— பகற்குறி இரவுக்குறி. மறிதருதல்—வந்துவந்துபோதல். சேரலம்—வரமாட்டோம். 225 பைங்கண்—துன்பம். வெறி—வேலனுடும் வெறியாடல். அணங்கு—சூர்மகள். 226 உரைவிடுத்தல்— மண உறுதி கூறுதல். 227 உலகில் வாழ்வதெப்படி என்ற அறநெறியை விரித்துக்கூறும் தமிழ் என்றபடி. 228 ஐ-ஔ—கூட்டொலியாதலின் உயிரொலிபத்தென்றபடி. இடப் பிறப்பும் முயற்சிப் பிறப்பும் ஆயஎட்டு. எழுத்து, சொல், பொருள், யாப்புஅணி என்ற ஐந்திலக்கணம். வண்டல்—ஓர் மகளிர் விளையாட்டு. 229 கா—சோலை. நோற்பது—மணநாளை எதிர்பார்த்தடங்கியிருத்தல்.*



*தாயறிவுறுத்தல்.*

230 ஒலியும் வடிவும் உருமாறினும்வேர் உறுபொருளால்
மலியும் தமிழ்ச்சொலிஃ தாரிய மன்றென மாண்கரந்தைப்
பொலியும் புலவோ ரறிவராங் கன்னைநம் பூங்கொடியாள்
மெலியும் உருமறை யின்வினை யென்று வெதும்பினளே.

*வெறியச் சுறுத்தல்.*

231 உள்ளத் தெளிவுரைக் குந்தமிழ் நூல்கள் உணர்வுடையோர்
கொள்ளத் தருங்கரந் தையெங் குரிசினீ கொண்டநலம்
எள்ளத் தனையறி யாளணங் கிற்றென எண்ணிமறி
துள்ளத் துணிக்கும் வெறியாட லன்னை தொடங்கினளே.

*பிறர்வரை வுரைத்தல்.*

232 எண்மை உணர்வழ காழும் இசையோ டியன்றுசுவைத்
தண்மை தருந்தமிழ் சேர்கரந் தைமலர்த் தாருடையோய்!
பெண்மை மிளிருமென் பேதைக் குருகினர் பேசும்ணம்
உண்மை தெரிந்திடின் உண்டாம் விளைவையும் உன்னுகவே.

*வரைவெதிர் வுரைத்தல்.*

233 குழைத்தமு தூட்டிய குன்றை முனித்தமிழ் கொள்கரந்தைத்
தழைத்தரு ளோங்கிய சான்றவர் முன்வரத் தானுமொளி
இழைத்தெழில் மேவுமென் நங்கைநல் லாள்மணம் ஏற்கவரின்
மழைத்துளி கண்டச கோரமொப் பார்மலை வாணர்களே.

*வரையுநாளுணர்த்தல்.*

234 கார்கொண்ட காவினிற் கள்வாய் மலர்ந்து கணியுரைக்க
ஊர்கொண்ட திங்களும் ஓதிடு மாலினி ஒண்கரந்தைச்
சீர்கொண்ட செந்தமிழ் தேர்ந்தாய்! மணங்கொளும்செவ்வியினை
யார்கண்டு ரைப்பவர் நானிலத் தேபிற நாளுமுண்டே?

*பாங்கி தலைமகளறிவறிவுறுத்தல்.*

235 அருங்குணத் தாற்புகழ் வேண்டா கணபதி ஆற்றியதொண்
டொருங்கெழு சீர்கரந் தைத்தமிழ் ஓதிய ஒண்மையினுல்
மருங்கெழு தோழியர் போலெனக் குந்தன் மனத்துயரைப்
பெருங்குணத் தோய்!மறைத் தாளவள் பெற்றியென்பேசுவனே?

---

230 *சில தமிழ்ச் சொற்கள் வடமொழிபோன்றிசைப்பினும் அடியையும் பொருளையும் ஆய்ந்தால் தமிழே என்பதுறுதியாம் என்பது முன்னிரண்டடிகளின் கருத்து. மறை—களவு. 231 குரிசில்—தலைவன். மறி—ஆடு. 232 உருகினர்—அழகில் மயங்கினர். மணம் பேசும் உண்மை என மாறுக. உன்னுக—எண்ணிப்பார். 233 குன்றைமுனி—சேக்கிழார்—தமிழ் பெரிய புராணம். சகோரம்—மழையை விரும்பி வான்பார்த்திருக்கும் ஒரு பறவை இனம். 234 கள்—தேன்—கணிவேங்கை. ஊர்கொண்ட திங்கள்-பரிவேடமமைந்தமதி. (சோதிடன் கூற ஊரார் ஒத்துக்கொண்ட மாதம் என்பது வேறு பொருள்.) வேங்கை மலர்தல் திங்கள் பரிவேடஞ் சூழ்தல் ஆய நாளில் மலை வாணர் மணம் முடித்தல் பண்டை வழக்கு.*

*குறிபெயர்த்திடுதல்.*

236 புயல்சேர் பொழிலிடைப் பூவைக் கணிந்தநின் பூத்தொடையை
அயில்சேர் மொழியன்னை கண்டுமுன் னையம் அடைந்தனள்நீர்
குயில்சேர் குறியிடம் கூடுதல் நீங்குக! கோவையுறப்
பயில்வார்க் கருள்தரு பைங்கரந் தைத்தமிழ்ப் பாவலனே!

*பகல் வருவானை இரவு வருகென்றல்.*

237 இருள்கெடுப் பான்மதி வான்புகுந் திப்புவி; ஏந்திழையாள்
மருள்கெடுப் போன்மலர்க் கான்புகுந் தையநீ; வன்மனத்துச்
சுருள்விரிப் பான்வளர் சங்கக் கரந்தையின் தூய்தமிழ்ப்போல்
அருள்!சிரித் தல்லிய ழைத்திடும் போதுவந் தாண்டகையே.

*இரவு வருவானைப் பகல் வருகென்றல்.*

238 உரையோ டிலக்கணத் துண்மை பரப்பும் உயர்ந்தபரம்
பரையோ டிலங்குநற் பண்பார் கரந்தையிற் பாவலனே
மரையோ டெமது மனைக்கத வைமதி யும்மனையும்
நிரையோ டடைப்பர்நீ ரெங்ஙனம் நேர்வதந் நீளிரவே.

*பகலினும் இரவினும் பயின்று வருகென்றல்.*

239 நடையூறு செந்தமிழ் நாவீறு கொண்டவர் நற்றமிழ்நூற்
புடையூறு பூங்கரந் தைப்பதி யாய்வரப் போதிரண்டும்
இடையூறு செய்யும தாலினி வாரலை ஏற்றவர்க்குக்
கொடையூறு கையுடை யாய்!குலத் தாரொடுங் கூடுகவே.

*உரவோனூடும் ஊருங்குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறல்*

240 புலந்திகழ் நூற்றுறை போற்றுநல் லோர்கள் புகழ்கரந்தைத்
தலந்திகழ் நாடுமுன் னூருங் குலனும் உயர்மரபும்
நிலந்திகழ்சீர்த்தியும் வாய்மையும் மாசு நிகழ்வதற்கோ
பொலந்திகழ் மார்பஇப் பொல்லா ஒழுங்கினைப் பூண்டதுவே.

*ஆறுபார்த்துற்ற அச்சங் கூறல்.*

241 முழுதறங் காத்தமூ வேந்தர் வளர்க்க முகிழ்த்ததமிழ்
விழுதிறங் குங்கரந் தைக்கவி போன்றவள் விம்முமனம்
கழுதுறங் கும்மிருட் காதலி னல்வருங் கானெறியின்
பழுதுணர்ந் துன்னடி தாங்குதற் கேவரும் பார்த்திபனே.

---

*235 புகழை விரும்பாத அரிய குணத்தை உடைய கணபதி. பெற்றி—தன்மை. 236 புயல்—கார்மேகம். பூவை—தலைவி. கோவையுற—நெறிமுறையாக. 237 மதிகண்டு மலரும் அல்லியைச் சிரித்து வரவேற்குமென்றது நயம். 238 மரை—தாமரை. மதியும் அன்னையும் முறையே தாமரை மலரையும் வீட்டையும் அடைத்தலினால் இரவில் வரவியலாதென்றார். 239 போதிரண்டு-பகல் இரவு 230 புலம்—அறிவு. 241 அறம்முழுதும் எனமாறுக. விழுதிறங்குதல்—தாங்குதல். கழுது—பேய். பழுது—நெறியின் தீங்கு. 242 உருக்கும்—மெலிவிக்கும்.* (தொடரும்.)

# எல்லாராய்ச்சியும் சொல்லாராய்ச்சியா?

ஞா. தேவநேயன்
நகராண்மைக் கலைக் கல்லூரி, சேலம்.

மக்கள் அறிவடையும் வழிகள், கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, துய்ப்பு என நால் வகைப்படும். ஒருவர் பிறர் எழுதி வைத்ததைத் தாமாய்க் கற்றறிவது கல்வி; அங்ஙனமன்றி அறிஞரையடுத்துத் தமக்கு வேண்டியவற்றைக் கேட்டறிவது கேள்வி; இவ்விரண்டுமன்றி, ஒன்றைப் புதுவதாகத் துருவியாய்ந்தறிவது ஆராய்ச்சி; இனி, வாழ்நாளில் பற்பல வகையில் தாமே துய்த்து அறிவது துய்ப்பு (அனுபவம்). இவற்றில் கல்வி என்பது இக்காலத்தில் கேள்வியையுந் தழுவும்.

ஆராய்ச்சி ஆராயப்பெறும் பொருள் நோக்கிப் பலதிறப்படும். அவற்றுள் சொல்லாராய்ச்சியும் ஒன்று. அது மொழியாராய்ச்சியுட்பட்டது. ஒரு மொழிக்குட்பட்ட சொல்லின் அல்லது சொற்களின் வரலாற்றை ஆய்வது சொல்லாராய்ச்சி; ஒரு மொழிக்குப் பிற மொழியோடு அல்லது மொழிகளோடு உள்ள தொடர்பை ஆய்வது மொழியாராய்ச்சி. மொழிகளெல்லாம் பெரும்பாலும், சிலவும் பலவுமாய்த் தம்முட் டொடர்பு கொண்டிருப்பதால், மொழியாராய்ச்சி யில்லாதார் செய்யும் சொல்லாராய்ச்சி கட்டுப்படுவதே.

சொல்லாராய்ச்சி செய்ய விரும்பும் ஒருவர், முதற்கண், ஏதேனுமொரு மேலை மொழியில், சிறப்பாக ஆங்கிலத்தில், உள்ள மொழி நூல்களையும் சொல்லாராய்ச்சி நூல்களையும் சொல்லியலகராதிகளையும் கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்கும் போதே, மொழியொலியியல் (Phonology), சொல் வடிவியல் (Morphology), பொருட் பாட்டியல் (semasiology) முதலிய மொழி நூற்றுறைகளைச் செவ்வன் உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். அதன்பின், சொல்லாராய்ச்சி செய்ய விரும்பும் மொழியின் இலக்கணத்தைக் கற்பதுடன், அதிலுள்ள சொற்குடும்பங்களையெல்லாம் தனித் தனியாகவும் தொகுதி தொகுதியாகவும் நோக்கி, அவற்றின் தொடர்புகளை அறிந்துகொள்ளுதல் வேண்டும். பின்னர், அம்மொழிச் சொற்களை அம்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த பிற மொழிச் சொற்களோடும் அக்குடும்பத்தையடுத்த அயற் குடும்ப மொழிச் சொற்களோடும் ஒப்பு நோக்கிக் காண்டல் வேண்டும். சொல்லாராய்ச்சிக்குச் சொல் வரிசைகளை ஒப்பு நோக்குவதினும், இலக்கண நெறி முறைகளை ஒப்பு நோக்குவதே மிகுதியும் வேண்டப்பெறுவதாம்.

மொழி நூல் அல்லது சொல்லியல் நூல், கணிதம்போலத் தற்சார்புக் கலையன்று. அதற்குப் பிறகலையறிவும் இன்றியமையாது வேண்டப்பெறும். உளநூல் (Psychology), வரலாற்று நூல் (History), ஞாலநூல் (Geography), மாந்தனூல் (Anthropology), என்பன மொழி நூற்குப் பெரிதுந் துணை செய்யும். வணிகம்பற்றி ஒரு மொழியினின்று இன்னொரு மொழிக்குச் சென்று வழங்குஞ் சொற்கட்கெல்லாம் வரலாற்றறிவும் ஞால நூலறிவும் இன்றியமையாதன.

எ. டு: துகி (தோகை), teak (தேக்கு).

மேற்கூறியவாறு கருவி நூல்களுங் கலைகளும் கைவரப் பெற்றபின், எல்லா மொழிகட்கும் பொதுவான சொல்லியல் நெறி முறைகளையும், ஆராய்வான் எடுத்துக்கொண்ட ஒரு மொழிக்கேயுரிய சொல்லாக்க நெறி முறைகளையும் அறிந்து கொள்ளல் வேண்டும். "எல்லாச் சொல்லும் பொருள் குறித் தன"வாயினும் "பல சொற்கு, "மொழிப் பொருட் காரணம் விழிப்பத்தோன்று". ஆதலின், அவை இடுகுறியெனக் கொள்ளுதல் கூடாது. சற்று ஆழ்ந்து நோக்கின், அவற்றின் வேர்ப்பொருள் மெல்ல மெல்ல மிளிர்ந்து தோன்றும். சில சொற்கள் காலக்கடப்பில் மிகமிகத் திரிந்தும் இனச் சொற்களை இழந்தும் வேர்ச் சொல் வழக்கற்றும் போனதினால், அவற்றின் வேர்ப்பொருள் எத்துணை ஆழ்ந்து நோக்கினும் தோன்றுவதில்லை. அவற்றுள் ஒரு சிலவற்றிற்கு, அயன் மொழியிலுள்ள இனச் சொற்கள் வேர் காட்டினுங் காட்டும்.

சுடலை, கொடுக்கு முதலிய பல சொற்களின் வேர்ப் பொருள் நோக்கிய மட்டில் தோன்றும். மரம், பொன் முதலிய சொற்களின் வேர்ப் பொருள் ஆழ்ந்து நோக்கினாலன்றித் தோன்றா. தமிழ், கருவி முதலிய சில சொற்களின் வேர்ப் பொருள் ஆழ்ந்து நோக்கினும் தோன்றுவதில்லை. பொருந்தப் புகலலாக ஒரு சொற்கு பொருட் காரணங் காட்டுவது பொருந் தாது. ஒரு சொற்குக் காட்டும் வேர் எல்லாத் தடைகட்கும் விடையமையுமாறு உலகத்தோடும், கலைகளோடும் மலையா திருத்தல் வேண்டும். அம்பு (வளைவல்) என்னும் சொல்லின் வேர்ப் பொருள், amphi (around) என்னும் கிரேக்கச் சொல்லால் அறியப்படுகின்றது. தமிழுக்கும் கிரேக்க மொழிக்கும் உள்ள தொடர்பு, என் 'Origin of Culture' என்னும் ஆங்கில நூலில் விளக்கப்பெற்றுள்ளது. ஆண்டுக் காண்க.

ஒரு சொல்லின் பொருட் காரணங் காணுதற்கு, முதற்கண், அச் சொல்லின் திருந்திய வடிவைக் கண்டுகொள்ளல் வேண்டும். மணத்தக்காளி என்பதன் திருந்திய வடிவு மணித் தக்காளி என்பது. தக்காளி இனத்திற் சிறியது என்பது அதன் பொருள். மணி என்பது ஒரு குறுமைப் பொருள் முன்னொட்டு. மணத்தக்காளி என்னும் தவற்று வடிவிற்கு, மணமுள்ள தக்காளி என்றுதான் பொருள்கூற முடியும். இங்ஙனமே சென்னைப் பல்கலைக் கழக அகராதியிற் கூறப்பட்டுள்ளது.



ஒரு சொல்லின் திருந்திய வடிவைக் கண்டபின், அச்சொல்லாற் குறிக்கப்படும் பொருளின் சிறப்பியல்பை நோக்கவேண்டும். ஒரு பொருளின் சிறப்பியல்பு, அப்பொருள் முழுமையுந் தழுவியதாகவோ அதன் ஒரு மருங்கு பற்றியதாகவோ இருக்கலாம். பரிதி (வட்டமானது) என்பது முழுதுந் தழுவியது. வாழை (வழவழப்பானது) என்பது ஒரு மருங்கு (அடிமரம்) பற்றியது. வாழையினுஞ் சிறப்பாகத் தொடர்ந்து வாழ்வது மூங்கிலாதலால், வாழ்வது வாழை என்பது பொருந்தாது.

பல குணங்கள் பல பொருட்கும் பொதுவாயிருத்தலின், சிறப்பியல் பென்றது, பெரும்பாலும் ஒரு சார் பொருள்கட்குச் சிறப்பாயிருப்பதே. எ. டு:— வள்ளம், வள்ளி, வளை, வளையம், வளையல், வண்டு, வண்டி, வணர், வணக்கம், வட்டு, வட்டி, வட்டில், வட்டை. இவையெல்லாம் வளைந்தது அல்லது வளையமாயிருப்பது என்னும் பொருள் கொண்டவையே.

குணம் என்பது தொழிலையும் தழுவும். எ. டு: கேழல் (நிலத்தைக் கிளைப்பது). ஒப்புமையும் ஒரு குணமே. எ. டு: நுணா (நுணல் போலுங்காயையுடையது).

ஒரு சொல்லான் பல கருத்துக்கள் எழுப்பப் பெறலாம். அவற்றின் முன்மை பின்மைத் தொடர்பு அறியப்பட்ட பின்னரே, மொழிப் பொருட் காரணம் துணியப் பெறல்வேண்டும். சிலவிடத்துப் பல காரணங்கள் ஒத்த பொருத்தமுடையனவாகத் தோன்றும். அவற்றுள் மிகப் பொருத்தமானதை வரண முறையிலும் ஒப்பு நோக்கியுமே துணிதல் கூடும். எ. டு: விழா என்னுஞ் சொற்கு, விழுத்தல், விழைதல் என்னும் இரண்டும் பொருட் காரணமாகத் தோன்றலாம். விழுத்தல் சிறத்தல். விழைதல் விரும்புதல். விரும்பிச் செய்வது என்னுங் காரணத்தினும், சிறப்புச் செய்வது என்னுங் காரணமே பொருத்தமாம். "சிறப்பொடு பூசனை" என்று வள்ளுவர் கூறியிருப்பதாலும் 'சிறப்புச் செய்தல்' என்னும் வழக்குண்மையாலும், பின்னதன் மிகுபொருத்தம் அறியப்படும். விழு — விழா. வேள்வியே விரும்பிச் செய்யப்படுவது. வேள்வியொடு செய்யப்படும் விழாக்கள், ஆகுபெயர் முறையில் வேள்வியெனப்பெறும்.

இனி, சொற்றிரிவு முறைகளையும் முற்பட அறிந்துகொள்ளல் வேண்டும். எ. டு: இரு குறில் ஒரு நெடிலாகத் திரியும் என்னும் திரிவு முறையால், அகல்—ஆல் (விழுதூன்றிப் படரும் ஆலமரம்), வணங்கு—வாங்கு முதலியனவும்; டகரம் ரகரமாகத் திரியும் என்னும் திரிவு முறையால், படவர்-பரவர், விடிச்சி-விரிச்சி (மறை பொருளை வெளிப்படுத்தலான பாக்கத்து விரிச்சி) முதலியனவும்; ழகரம் டகரமாகத் திரியும் என்னும் திரிவு முறையால், புழல்—புடல் (புழலை—புடலை), குழல்—குடல் முதலியனவும்; 'இல்' ஈறு ஒரு குறுமைப் பொருட்பின்னொட்டு என்பதால், தொட்டி—தொட்டில்: குடி—குடில் முவலியனவும்; 'அம்' ஈறு ஒரு பெருமைப் பொருட்பின்னொட்டு என்பதால், மதி—மதியம் (முழுமதி), நிலை—நிலையம் முதலியனவும்; உகரம் அகரமாகத் திரியும் திரிவு முறையால், குடும்பு—கடும்பு, நுரை—நரை (வெண்மை) முதலியனவும்; உகர ஊகாரம் முறையே இகர ஈகாரமாகத் திரியும் திரிவு முறையால், புரண்டை—பிரண்டை, தூண்டு—தீண்டு முதலியனவும்; விளங்குதல் காண்க.

செந்தமிழ்ச் சொல்லியல் நெறி முறைகளும் (Principles of Etymology) சொற்றிரிவு முறைகளும் (Modes of Derivation) எத்துணையோ பல. அவையும் அவற்றின் வகைகளும் எனது 'சொல்லாக்க நெறிமுறைகள்' என்னும் நூலிற் கூறப்பெறும்.

சொல்லாராய்ச்சி செய்வார் மேற்கூறியவாறெல்லாங் கற்றிருப்பதுடன், இறைவனால் இதற்கென அழைப்பும் (call) பெற்றிருத்தல் வேண்டும். அல்லாக்கால் உழைப்பெல்லாம் விழலுக்கிறைத்த நீராய்விடும். தமிழ்ச் சொல்லாராய்ச்சித் துறையில் தலைமையான அழைப்புப் பெற்றவர் **கால்டுவெல்** கண்காணியாராவர்.

இக்காலத்திற் சிலர், மொழியாராய்ச்சி செய்யாதும் மொழியாராய்ச்சிக்கும் சொல்லாராய்ச்சிக்கும் வேறுபாடு தெரியாதும், சொல்லியல் நெறி முறைகளையும், சொற்றிரிவு முறைகளையும் அறியாதும், தாம் தலைமைப் பதவி பெற்றிருப்பது காரணமாகத் தருக்கி, எல்லாம் வல்ல சித்தரும் அனைத்து நூலுங்கற்ற அறிஞரும்போல் நடித்து, பொய்யும் வழுவும் மலியச் சில சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் வரைந்திருப்பதுடன், கால்டுவெல் ஐயர் காட்டிய வழி நின்று உண்மையாக ஆராய்ச்சி செய்த பிறரை, நெறிப்பட ஆராயாதவர் என்று குறிப்பாகவும் வெளிப்படையாகவும் கூறியும் வருகின்றனர். எளிய சொற்கட்கு எவரும்



வேர்ச்சொல் காட்டுவர். அரிய சொற்கட்குக் காட்டுவதே அரிது. சொல்லியல் நெறிமுறைகளை அறியாதார் கூறும் போலிச் சொல்லியல், பின்வருமாறு எழுதிறப்படும்.

(1) **ஒலிமுறைச் சொல்லியல்** (Sound Etymology)

எ. டு:— பாராளுமன்று—Parliament. பாராளுமன்று என்பது பார் ஆளும் மன்று என்னும் முச்சொற்றொடர் Parliament என்பது parler (speak) என்னும் பிரெஞ்சுச் சொல்லும் ment என்னும் ஆங்கில விகுதியும் சேர்ந்த ஒரே சொல்.

(2) **உன்னிப்புச் சொல்லியல்** (Guessing Etymology)

எ. டு:— அணில் = அழகு (அழகிய வரிகள்) உடையது.
அணி = அழகு கலம் = கல்லாற் செய்யப்பட்டது, வேந்தன் = வெம்மையாய், அதிகாரஞ் செலுத்துபவன். வேம் = வேந்தன்.

(3) **அறிவாகுலச் சொல்லியல்** (Pedantic Etymology)

எ. டு:— கிளி = கிளைப்பது (பேசும் பறவை)
மண் = மணப்பது (நாற்றமுடையது)

(4) **அடிப்பட்ட சொல்லியல்** (Popular Etymology)

எ. டு:— நூல் (புத்தகம்) = இழைநூலும் எற்று நூலும் போல்வது.

(5) **குறிக்கோட் சொல்லியல்** (Tendentious Etymology.)

எ. டு:— ஐயன் < ஆரியன் (ஆர்ய)
அச்சன் < அஜ்ஜ (பிராகிருதம்) < ஆர்ய
வெறுக்கை (செல்வம்) = வெறுக்கப்படுவது.

(6) **வழூஉப் பகுப்புச் சொல்லியல்** (Malanalytic Etymelogy)

எ. டு:— சாப்பாடு = சாவதற்கு ஏதுவானது (சா + பாடு)

(7) **நகையாட்டுச் சொல்லியல்** (Playful Etymology)

எ. டு:— தோசை = இருமுறை 'சை' என்று ஒலிப்பது
தோ (உருது) = இரண்டு.

இங்கு காட்டப்பட்டுள்ள எடுத்துக்காட்டுக்களையெல்லாம் மறுக்கவும், விளக்கவும் புகின் விரியுமாதலின் அவற்றுள் நான்கை மட்டும் ஈண்டாராய்ச்சிக்கெடுத்துக்கொள்வல்,

(1) **அணில்.** அணி = வரி, வரிசை.
அணி— அணில் = முதுகில் மூவரிகளையுடையது.

(2) **வேந்தன்** : வேய்தல் = மேலணிதல், முடிசூடுதல். வேய் = வேய்ந்தோன் — வேந்தன் = முடியணியும் உரிமையுள்ள சேர, சோழ, பாண்டியருள் ஒருவன். வேள், மன்னன், கோ, வேந்தன் என்னும் நால்வகையரசர் பெயருள், வேந்தன் என்பது முடியணியும் உரிமையுள்ள மூவேந்தர்க்கே பொதுவாகவுரியதாம். இவ்வுரிமை கிறித்துவுக்கு முற்பட்ட காலமெல்லாம் கையாளப்பெற்று வந்தது.

கொன்றை வேந்தன் (சிவன்) என்பது கொன்றை வேய்ந்தோன் என்றே பொருள் படுதல் காண்க.

வேந்து என்னும் பாலீறில்லாப் பழவடிவமும் வேந்தன் என்று பொருள்படுவதே; செய்து என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் ஆதல் போன்று.

(3) **கிளி கிள்ளை** :- கிள் — கிள்ளி — கிளி, கிள் — கிள்ளை. கிள்ளுதல் = கூறிய மூக்கால் கொத்துதல். மரங்களிலுள்ள காய் கனிகளைக் கிள்ளி வைப்பது கிளியின் இயல்பு. பழகாத கிளியை ஒருவன் பிடிப்பானாயின், உடனே அகப்பட்ட உறுப்பைக் காயப்பட வலிதாய்க் கொத்திவிடும். 'கிளி கொத்தின பழம்' என்பது வழக்கு. பேசும் இயல்பு கிளிக்கில்லை, சொல்லிக் கொடுத்ததைச் சொல்லும் இயல்பே அதற்குண்டு. "சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை" என்பது பழமொழி. சொன்னதைச் சொல்லும் திறத்தில், கிளியினுஞ் சிறந்தது பூவையென அறிக.

(4) **அச்சன்**. அத்தன் — அச்சன் (ஆண்பால்) = தந்தை. அத்தி — அச்சி (பெண்பால்) = தாய், அக்கை.

இவை தூய தமிழ்ச் சொற்கள். த — ச : போலி.

ஒப்பு நோக்க : பித்தன் — பிச்சன்.

அத்தன், அச்சன் என்பன முறைப் பெயர்.

ஆரியன் என்பது ஒரு மக்களினப் பெயர்; அஃதுடன் ஓர் ஆரியச் சொல்.

அத்தன், அச்சன் என்பனவும்: அத்தி, அச்சி, என்பனவும்; முறையே ஆண்பாலீறாகவும் பெண்பாலீறாகவும் எண்ணிறந்த தமிழ்ப் பெயர்களில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றன.

எ. கு :- தட்டாத்தி, வண்ணாத்தி, கிள்ளிச்சி, வேட்டுவச்சி } பெ. பா.

அரசன் என்னும் சொல்லே, வடநாட்டில் அஜ்ஜ என்னும் பிராகிருதச் சொல்லாக வழங்கி வருகின்றதென்க.



(1) பல மொழிகள் தம்முள் தொடர்பு கொண்டிருப்பதால் சொல்லாராய்ச்சிக்கு மொழியாராய்ச்சியும் வேண்டும்;

(2) சொற்கள் குடும்பம் குடும்பமாய் இயல்வதால், அவற்றைத் தொகுத்து நோக்கியே மூலங்காணுதல் வேண்டும்; என்னும் இரு நெறி முறைகளையுணர்த்துதற்கு, ஒரு சொற்றொகுதியை ஈண்டெடுத்துக் காட்டுவாம்.

**மேலையாரிய மொழிகளிலுள்ள தமிழ்ச் சொற்களுள் ஒரு சில :**

குலவு — L. *Curvo*, to bend; E. *Curve*.

குரங்கு (வளைவு கொக்கி) குறங்கு (கொக்கி) D. *Kring*, *Krink*, a Curl, bend, crook.

E. *Crank*, to bend, wind, and turn.

E. *Cringe* A. S. *Cringan*, *Crincan*, to bend with servility.

கறங்கு (வளைவு, வட்டம், காற்றாடி, சுழல்)— A. S. *hring* O. H. G. *hing*, Icel. *hringr*, G. *ring*, D. *ring*, sw. *ring*, E. *ring*.

sw. *Kring*, about, around; Icel, Kringer, a circle, Prov G. *Krink*, Kring, a ring, circle.

குரவை—Gr. *choros*, a dance in a ring, L. chorus, E. Chorus

குருள்— D. *Krullen*, Dan *Krolle*, E. *Crull*, *Curl*,

குருகு — A. S *Cran*, D. Kraan, G. Krahu, Kranich; Icel. *trans*, Dan. *trane*. Armor. *karan*, W. Garan, Gr. *Geranos*, L. *Grus*, E *Crane*.

கொக்கி — A. S. *hoc*, E. *hook*, D. *hock*, Icel. *haki*, G. *haken*, O. H. G. *hako*, L. G. hake.

கொடுக்கு — Icel. *Crokr*, sw. *krok*, Don *Crog*, O. E. *Crok*, E. Croog, Dan *Crog*, D. *Kruk*, W. Crwg, Gael. *Crocan*.

O. F. *Croc*. ட. ர. போலி ஒப்பு நோக்க : குடகு—Coorg, அடைக்காய்—areca.

கோணம் — Gr. *Gonia*, an angle.

கோட்டை — L. Castrum. E. Caster.

மேற்காட்டிய தென் சொற்களும், மேலையாரியச் சொற்களும், சொல்லளவில் மட்டுமன்றி அடிப் பகுதியிலும் ஒலியும் பொருளும் ஒத்திருப்பதைக் காணலாம். அவற்றுள் மூலம் எவை, திரிபு எவை என்று கண்டுபிடித்தற்கு, அச்சொற்களெல்லாம் எம்மொழியில் ஒருங்கே வழிமுறைத் தொடர்புற்ற ஒரு குடும்பமாக வழங்கி வருகின்றன என்று காணுதல் வேண்டும். அவை எம்மொழியில் எங்ஙனம் வழங்கி வருகின்றனவோ அம்மொழியே அவற்றுக்கெல்லாம் மூலம் என்பது முடிந்த முடிபாகும். பல இடங்களில் ஒரு மரத்தின் இலையும் பூவும் காயும் கனியுமாகிய சினைகளே சிதறிக் கிடக்குமாயின், அவை அண்மையிலோ, சேய்மையிலோ உள்ள ஒரு மரத்தினின்றே பறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதற்கு மாறாக, அச்சினைகளிலிருந்தே அம்மரம் வந்ததென்று வலிப்பது உத்திக்கும் உண்மைக்கும் பொருந்தாத இடும்புக் கூற்றாகும். ஓர் ஊரிலுள்ள மக்கள் வேற்றூர் சென்று வாழின், தொன்று தொட்டு அவ்வூராரே எனத் தம்மைச் சொல்லிக்கொள்ள முடியாது. அங்ஙனம் சொல்லுதற்குத் தொன்றுதொட்டுவரும் உறையுள் உறவு, நட்பு, அயல் முதலியவற்றைக் காட்டுதல் வேண்டும். மேற்காட்டிய ஆரியச் சொற்கள் மேலை மொழிகளில் ஆங்காங்கு ஒன்றிரண்டாகச் சிதறிக் கிடப்பனவேயன்றி, தமிழிற்போல் மரபுத் தொடர்புற்ற ஒரு குடும்பமாக அல்லது குலமாக வழங்கி வருவனவல்ல. ஆரிய மொழிகளில் நூற்றுக்கணக்கான அடிப்படைச் சொற்கள் சொல்லாலும், பொருளாலும் தென் சொற்களை ஒத்திருப்பதால், அவற்றைத் தற்செயலாக நேர்ந்த ஒப்புமைகளெனத் தள்ளிவிடவுமுடியாது. அவற்றின் உண்மைத் தொடர்பைக் காட்டுதற்கு, மொழி நூலொடு வரலாறு முதலிய பிற சான்றுகளுமுள.

மேற்காட்டிய சொற்கட்கெல்லாம் மூலம் தென்மொழியே என்பது, பின்வரும் சொற்றொகுதியால் அறியலாகும்.

குல் என்பது வளைவுப் பொருள் தரும் ஒரு வேர்ச்சொல். அதனின்று, வளைவு கோணல் வட்டம் வளையம் உருட்சி திரட்சி, குழற்சி, சுழற்சி, சுற்றல், சூழல் முதலிய பல உறவியற் கருத்துள்ள பற்பல சொற்கள் தொடர்ந்து கிளைத்துள்ளன. அவை வருமாறு :—

குல்—குலா-குலவு-குலாவு. குலவுதல் — வளைதல்.

குல்—குர்-குர-குரம் — வட்டமான குதிரைக் குளம்பு. குரல்—வளைந்த தினைக்கதிர். குரகம் – வளைந்த கழுத்துள்ள நீர்ப் பறவை. குரங்கு—வளைவு கொக்கி. குரங்குதல்—வளைதல். குரவை—வட்டமாக நின்றாடுங் கூத்து—குரங்கு. குறங்கு—



கொக்கி. குறங்கு—கறங்கு. கறங்குதல்—சுழலுதல். கறங்கு—காற்றாடி. கறங்கல்—வளைதடி. கூ—அ, திரிபு, ஒப்புநோக்க. முடங்கு—மடங்கு. குடும்பு—கடும்பு. குறகு—வளைந்த கழுத்துள்ள கருவி.

குல்-குன்—குன்னு. குன்னுத்தல்—உடம்பு கூனிப்போதல். குனி, குனிதல்—வளைதல், வணங்குதல். குனிப்பு—வளைந்தாடுங் கூத்து. குனுகு, குனுகுதல்—கடுஞ்சிரிப்பில் உடம்பு வளைதல் கூனல்—வளைவு முதுகுவளைவு. கூனி — வளைந்தசிற்றிறால், கூனை—கூனுள்ள தோற்சால்.

குல்·குளை—குளவி — கொடுக்குள்ள தேனீ. குளிகை — மருந்துருண்டை, வளைதடி, திரட்சி. குழல், குழலுதல்—சுருள்தல்.

குல்·குண்—குண்டு—உருண்டை, உருட்சி திரட்சி. குண்டம்—உருண்டு திரண்ட பன்றி. குண்டன்—உருண்டு திரண்டவன், வளைந்தது. குண்டுசட்டி—உருண்ட சட்டி. குண்டா—குண்டு சட்டி. குண்டை—உருண்டு திரண்ட காளை, குண்டுசட்டி. குண்டலம்—வட்டம், சுன்னம், குண்டான காதணி.

குண்—குண—குணகு. குணகுதல்—வளைதல். குணங்கு, குணங்குதல்—வளைதல். குணக்கு — வளைவு. குணலை—உடல் வளைவு, வளைந்தாடுங் கூத்து. குணி—முடமானது. குணுக்கு—காதிலணியும் உலோக வளையம். குணுக்குதல்—வளைத்தல்.

குள்-குட்டு—முட்டை (தெலுங்குச் சொல்லான திசைச் சொல்) குடம் — உருட்சியானது, வளைவு. குட — வளைந்த. குடவு. குடவுதல்—வளைதல். குடக்கம்—வளைவு. குடக்கி — வளைவானது. குடக்கியன்—கூனன். குடங்கு—குடங்குதல்—வளைதல். குடந்தம்—வளைவு, வணக்கம். வழிபாடு. குடந்தை—வளைவு. குடா—வளைவானது. குடி—(வளைந்த) புருவம்.

குள்-குய்-குயம்—வளைந்த அரிவாள்.

குள்-கூள்-கூளி — வளைந்த வாழைப்பழம்.

கூள்-கூடு—வட்டமான நெற் களஞ்சியம்.

கூள்-கொள்—வளைந்த காயிலுள்ள காணம். கொள்—கொட்பு—சுழற்சி, சுற்றுதல். கொட்கு-கொட்குதல்-சுற்றுதல். (கொட்கி) – கொக்கி — வளைந்த மாட்டுறுப்பு. (கொட்கு) – கொக்கு — வளைந்த கழுத்துள்ள ஒரு நீர்ப்பறவை வகை. கொக்கை—கொக்கி. கொட்டு — நெற்கூடு. கொட்டாரம் — களஞ்சியமுள்ள நிலம்.

கொட்டை—உருண்டை வடிவம். உருண்டு திரண்ட விதை, உருண்டைத் தலையணை.

கொடு—வளைந்த. கொடுமரம்—வில்;

# "ஒப்பில் வழியாற் பொருள் செய்குந"

திரு. அடிகளாசிரியர்,
(தமிழ் விரிவுரையாளர்; கரந்தைப் புலவர் கல்லூரி.)

ஒல்காப் புலமைத் தொல்காப்பினர் தாம் இயற்றிய தொல்காப்பியமென்னும் பழைய இலக்கண நூலுள்

> "அவைதாம்,
> புணரிய நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
> வினைசெயன் மருங்கிற் காலமொடு வருநவும்
> வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவும்
> அசைநிலைக் கிளவி யாகி வருநவும்
> இசைநிறைக் கிளவி யாகி வருநவும்
> தத்தங் குறிப்பிற் பொருள்செய் குநவும்
> ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவுமென்
> றப்பண் பினவே நுவலுங் காலை".
>
> (தொல். சொல். இடை. 2)

---

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கு—வளைந்த முள்ளுறுப்பு. கொடுக்கன்—தேள். கொடுக்கி—தேட்கொடுக்கி (ஒரு செடி.)

கொடி — வளைந்த தண்டுள்ள செடி.

கொடிறு—குறடு; குறடுபோன்ற வாயலகு.

குல்-(கூல்)-(கொல்)-கோல்—உருண்டு திரண்ட கொம்பு, கோற்றொடி—திரண்ட வளையல், கோலி—உருண்டை.

கொள்-கோள் —.உருண்டையான (அல்லது சுற்றிவரும்) விண்மீன். கோளம்—உருண்டை. கோளா—உருண்டையான சிற்றுண்டி வகை. கோளம் — கோரம்—வட்டில் (வட்டமான கலம்)

கோள்-கோண்-கோணுதல்-வளைதல், சாய்தல். கோணம்-சாய்வு, சாய்ந்த மூலை. கோணன்—கூனன். கோணல்—சாய்வு, நெளிவு. கோணை—சாய்வு, பிறழ்வு, கோணையன்—மதிபிறழ்ந்தவன், குதருக்கவாதி. கோண்—கோடு—வளைவு, கோடுதல்—வளைதல். கோடல்—வளைவு, வளைந்த இதழுள்ள காந்தட்பூ. கோடி — வளைவு. கோடை — காந்தள். கோட்டம் — வளைவு, மதிலாற் சூழப்பட்ட கோயில், நிலாவைச் சூழ்ந்த ஊர்கோள். கோட்டம்—கோட்டகம். கோட்டை—வட்டமான நெற் களஞ்சியம், மதிலாற் சூழப்பட்ட இடம், நிலாவைச் சூழ்ந்த ஒளி வட்டம்.

இக்குடும்பத்தைச் சேர்ந்த பிற சொற்களுமுள. விரிவஞ்சி இம்மட்டில் நிறுத்தப்பெற்றது.



என்னும் நூற்பாவுள் இடைச்சொல் ஏழு வகையினையுடைத்து என்று கூறியுள்ளனர். அவ் ஏழுள் ஒன்று ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகும். இவ் இடைச்சொல் எது என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இளம்பூரணர் கருத்து.

ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல் லாவது 'ஒப்பில் போலி' என்னும் இடைச்சொல்லே என்பது இளம்பூரணர் கருத்தாகும். அவர் இடையியல் முப்பதாம் நூற்பாவாகிய "ஒப்பில் போலியும் அப்பொருட்டாகும்" என்பதன் உரையுள் "இச்சூத்திரம் என்னுதலிற்றோவெனின், மேல் இடைச்சொல் எழுவகைய என்று நிறுத்தவற்றுள் 'ஒப்பில் போலி' என்னும் இடைச்சொல் உணர்த்துதல் நுதலிற்று" என்று கருத்துரைக்கொண்டு, "ஒப்பில் போலியாவது, ஒப்பில்லாத வழி ஒப்பித்த வாசகம் பட வருவது என்பது" என்று விளக்கம் கூறி, "மங்கலம் என்பதோர் ஊர் உண்டுபோலும் மழ நாட்டுள், என ஒப்பில்லாத வழிப்போலும் என்றும் இடைச் சொல் வந்தவாறு என்று எடுத்துக் காட்டும் காட்டியுள்ளனர், 'பவளம் போலும் வாய்' என்றதனுள் பவளமாகிய உவமையின் சிவப்புப்போல வாயாகிய உவமேயத்தின் சிவப்பு உள்ளது என்பதை உணர்த்தப் 'போல்' என்னுஞ் சொல் வந்துள்ளது. இப்போல் ஒப்பு உள்வழி வந்துள்ளதாகையால் ஒப்புள்ள போலியாகும். 'மங்கலம் என்பதோர் ஊர் உண்டுபோலும்' என்பதனுள் வந்துள்ள 'போல்' என்பது மேற்காட்டியதைப்போல் ஒப்புமை உணர்த்தாமையால் இதனை 'ஒப்பில் போலி' என்று வழங்கலாயினர்.

இவ் ஒப்பில் போலியை ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லென்று இளம்பூரணர் கருதுகின்றார் என்பது முன்னே கூறப்பட்டது. ஆனால், ஒப்பு உள் வழிவரும் போலப்புரைய முதலான உவம உருபுகள் இடைச் சொற்களா அன்றா என்பதை இளம்பூரணர் செய்த இடையியல் உரை கொண்டு அறிந்துகொள்ள இயலவில்லை.

உவமையியலில் உவமையுணர்த்தும் சொற்களைக் கூறும் பதினொன்றாம் நூற்பா வுரையுள் "பல் குறிப்பின' என்றதனான் இவ்வுவமையுணர்த்துஞ் சொற்கள் பெயரெச்ச நீர்மையவாய் வருவனவும், வினையெச்ச நீர்மையவாய் வருவனவும், முற்று நீர்மையவாய் வருவனவும், இடைச்சொல் நீர்மையவாய் வருவனவும் எனக்கொள்க" என்று இளம்பூரணர் கூறுவதால் உவமையுணர்த்துஞ் சொற்களை இடைச் சொல்லென்று கருதினார் என்

பதை நாம் அறிந்துகொள்கின்றோம். ஆனால் இவ் உவம இடைச் சொற்களை இடைச்சொல் ஏழு வகையுள் எந்த வகையுள் அடக்குகின்றார் என்பதை அறிந்துகொள்ள இயலவில்லை.

### நேமிநாதர் கூறிய இடைச்சொல் வகை,

'நேமி நாதம்' என்னும் இலக்கண நூலார் இடைச்சொற்களைக் கூறும்பொழுது

"சாரியையாய் ஒன்றல், உருபாதல், தங்குறிப்பின்
நேரும் பொருளாதல், நின்றசையாய்ப்—பேர்தல்,
வினைச்சொற்கீ ழுதல், இசைநிறைத்து மேவல்
அனைத்தே இடைச்சொல் அளவு" (நேமி. இடை. க)

என்று [I] ஆறுவகை இடைச் சொற்களையே கூறியுள்ளனர். ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல்லை அவர் கூறவில்லை. தொல்காப்பியர் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லைச் சேர்த்து இடைச்சொல் ஏழுவகை என்று கூறியிருக்க, நேமிநாத நூலார் அதனை ஒழித்து ஆறு வகையென்று கூறுவானேன் என்று வினா எழும்புகின்றது. இதற்கு விடை நேமிநாத உரையாசிரியர் கீழ் வருமாறு கூறியுள்ளார்.

"பிறர் இடைச்சொல் வரும் வழி ஏழென்று சொல்ல, இந்நூலுடையார் ஒப்பில் போலியை (இளம். கருத்து) நீக்கியது என்னையோவெனின்:— 'ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்' (தொல். சொல். இடை. ௩௦) என்றதனால் அஃது அசை நிலையுள்ளே அடங்குமாதலான் இங்குக்கொண்டதில்லை". (நேமி. இடை. க.) என்றனர்.

'ஒப்பில் போலியும் அப்பொருட்டு' என்றதனுள் அகரச் சுட்டு, மேல் நூற்பாவில் கூறிய பொருளைச் சுட்டுகின்றது. மேல் நூற்பா, 'ஆங்க உரையசை' என்பது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர், "ஆங்க என்னும் இடைச்சொல் ஓர் கட்டுரைத் தொடர்பினிடை, அசைப் பொருள் படவரும்" என்று உரை கூறியுள்ளனர். அதனால், ஒப்பில் போலி (ஆங்க) என்பதைப்போல் அசை நிலையாய் வரும் என்பது அறியப் பெறுகின்றது. அங்ஙனம் வருமேயானால் அது, இடைச்சொல் வகையினுள் ஒன்றாகிய 'அசை நிலைக் கிளவியாகி வருநவும்' என்பதனுள்ளே அடங்கப்பெறுமன்றே. அங்ஙனம் அடங்கும் பொழுது 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந, என்று ஓர் இடைச்சொல் வகையைக் கூறவேண்டுவதில்லை என்பது நேமிநாத நூலார்க்குக் கருத்து என்று அதன் உரையாசிரியர் கூறியுள்ளனர்.

---

I. நன்நூலார் எட்டு வகையாக இசைச்சொற்களை கூறியுள்ளார்.



### சேனாவரையர் கருத்து.

சொல்லதிகாரத்திற்கு நல்லுரை வகுத்த சேனாவரையர் இக்கருத்துக்களையெல்லாம் நன்கு நுணுகி ஆராய்ந்தார். ஒப்பில் வழியாற் பொருள் செய்குந 'ஒப்பில் போலி' என்னும் இடைச் சொல்லாயின் இவ் ஒப்பில் போலி அசை நிலையில் வரும் என்று கூறப்பட்டிருத்தலின் இது 'அசைநிலைக் கிளவியாகி வருநவும்' என்னும் இடைச்சொல் வகையிலேயே அடங்கப் பெறுமே! இது ஒப்பில்'போலியாயின் ஒப்பு உள்வழி வரும் 'போலப்புரைய அன்ன இன்ன' முதலிய இடைச் சொற்களெல்லாம் இடைச்சொல் வகை ஏழனுள் எதன்பாற்படும்? என்றெல்லாம் அவர் எண்ணத் தொடங்கினார்.

வேற்றுமை யியலுள் இரண்டாம் வேற்றுமை இன்ன இன்ன வாய்பாடுகளில் வரும் என்று கூறும்பொழுது 'ஒப்பு' என்னும் வாய்பாடொன்று தொல்காப்பியரால் கூறப்பெற்றுள்ளது. அதற்கு இளம்பூரணர் முதலான உரையாசிரியரெல்லாம் 'தாயை ஒக்கும்' 'தந்தையை ஒக்கும்' என்று எடுத்துக்காட்டுக் காட்டியுள்ளனர். இவற்றுள் தாயை, தந்தையை என்பவற்றிலுள்ள இரண்டாம் வேற்றுமைக்கு முடிக்குஞ் சொல் 'ஒக்கும்' என்பதாகும் நூற்பாவுள் 'ஒப்பு' என்று வாய்பாடு சொல்லப்பட்டிருப்பினும் உரையாசிரியர்கள் தாயை ஒக்கும், தந்தையை ஒக்கும் என்று எடுத்துக் காட்டுக் காட்டியுள்ளதால் இரண்டாம் வேற்றுமைக்குள்ள ஒப்புவாய்பாட்டில் ஒக்கும் முதலான சொற்களும் வழங்கப்பட்டுவரும். ஆகவே இவற்றையெல்லாம் நினைவில் வைத்துக்கொண்ட சேனாவரையர், 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குநவும்' என்ற தொடர்க்கு விளக்கவுரை எழுதும்பொழுது "ஒக்குமென்னுஞ் சொல்லன்றே (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒப்புமையை யுணர்த்துவது; அச்சொல் ஆண்டின்மையான். (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒப்புமை தோன்றாமையான், ஒப்பில் வழியால் என்றார்; உவமையொடு பொருட்கு ஒப்பில்லையென்றாரல்லரென்பது. ஒப்பில் வழியாற் பொருள் செய்குந வாவன, அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப என்பன முதலாகப் பொருளதிகாரத்துக் கூறப்பட்ட முப்பத்தாறனுள் (இரண்டாம் வேற்றுமைக்குரிய) ஒக்குமென்பதொழிய ஏனையவாம்" என்று தம் திரண்ட ஆராய்ச்சிக் கருத்தை மிக நுணுக்கமாய்க் கூறியுள்ளனர்.

பின்னும் அவர், எச்சவியலுள் 'உவமத் தொகையே உவம இயல்' என்னும் நூற்பாவுரையுள் 'புலிப்பாய்த் துள்'

என்னும் உவமத் தொகை 'புலிப்பாய்த்துள் அன்ன பாய்த்துள்' எனத் தம் விரிப் பொருள் உணர்த்தியவாறு கண்டுகொள்க" என்று கூறி, "புலிப்பாய்த்துள் என்னும் அத்தொகை 'புலிப் பாய்த்துளை ஒக்கும் பாய்த்துள்' என இரண்டாம் வேற்றுமை விரிப்பொருளை உணர்த்துதலின் வேற்றுமைத் தொகையெனப் படும்; அதனால், உவமத் தொகையென ஒன்றில்லையெனின்" என்று தடை வினவை எழுப்பிக்கொண்டு, அதற்கு விடையாக,

"அற்றன்று; சொல்லுவார்க்குப் புலிப்பாய்த் துளை ஒக்கும் பாய்த்துள்' என்னும் இரண்டாம் வேற்றுமை விரிப்பொருள் கருத்தாயின் வேற்றுமைத் தொகையுமாம். அக்கருத்தின்றி 'புலிப்பாய்த்துள் அன்ன பாய்த்துள்' என இரண்டாம் வேற்றுமையோடு இயைபில்லாத உவம உருபு விரிப்பொருள் மேற் கருத்தாயின் உவமத் தொகையாவதல்லது வேற்றுமைத் தொகையாமாறில்லையென்க. என்னெனின்? உவம உருபு ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொல்லாகாலான்' என்னும் பொருள்பட அவர் எழுதியுள்ள உரையை ஆராய்ந் தால், இரண்டாம் வேற்றுமைக்குரிய ஒப்புப் பொருளில் வாராது, உவமப் பொருளைக் காட்டிவரும் அன்ன, ஏய்ப்ப, உறழமுதலானவைகளே ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச் சொற்களாகும் என்பது நமக்குத் தெரியவருகின்றது.

## நச்சினார்க்கினியர் கருத்து.

'ஒப்பில் வழியாற் பொருள் செய்வன' உவமை உருபு களே என்று நச்சினார்க்கினியர் கருதினும், இச்சொற்றொ டர்க்கு அவர் வேறுவிதமாகப் பொருள் கருதியுள்ளார். அவர் பொருளியலிலுள்ள 'ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா' என்று தொடங்கும் நூற்பாவுள் 'காட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது காட்டலாகாப் பொருள வென்ப' என்னும் பகுதிக்கு "ஒப்பு முதலியனவெல்லாம் நாடக வழக்கத்தால் புலனெறி வழக்கஞ் செய்த முறைமையானே நெஞ்சு உணர்ந்து கொள்ளினன்றி, உலகியல் வழக்கால் ஒருவர்க்கொருவர் கட்புல னுகக் காட்டப்படாத பொருளைப் பொருளாகவுடையவென்று கூறுவர் புலவர்" என்றும் அந்நூற்பாவுள் 'ஒப்பு' என்பதற் குப் பொருள் எழுதும்பொழுது, "ஒப்பாவது ஒத்த கிழவனும் கிழத்தியுமென்ற வழி அவரொப்புமை மனனுணர்வா னுணர்வ தன்றி மெய் வேறுபாடுபற்றிப் பொறியா னுணரலாகாதென்றது; தந்தையரொப்பர் மக்களென்பதும் அது" என்றும் உரை கூறி யுள்ளனர். அக்கருத்துக்கிசைய 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந என்பதற்கு. "நாடக வழக்கினுன் உய்த்துணரினன்றி



உலகியல் வழக்கினால் காட்டப்படுவதோர் ஒப்பின்றி நின்ற ஒப் புமைப் பொருண்மையை உணர்த்திவரும் உவம உருபுகளும்" என்று உரை எழுதியுள்ளனர்.

## தெய்வச்சிலையார் கருத்து.

தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய தெய்வச் சிலையார் 'ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்' என்பது, தத்தங் குறிப்பினால் பொருள் உணர்த்தி வருதலின்றிப் பொருத் தம் இல்லாதவிடத்துப் பொருள் உணர்த்துவனவும்" என்று ஒரு உரை கூறி, "ஒப்பில் வழி என்பதனை ஒரு சொல்லோடு பொருத்தமின்றித் தனி வந்துழி எனவும் பொருள் உரைப் பினும் அமையும்" என்று மற்றொரு உரையுங் கூறியுள்ளார்.

பின்னர் அவர் "அச்சம் பயமிலி காலம் பெருமையென் றப்பால் நான்கே கொன்னைச் சொல்லே" (தொல். சொல். இடை. ௬) என்னும் நூற்பாவுரையுள் 'கொன்முனை இரவூர் போல' என்பது அச்சமுணர நின்றது. 'கொன்னே கழிந்தன் றிளமையும்' என்புழிப் பயனின்மை யுணர நின்றது. 'கொன் வரல் வாடை' என்ற வழிக் காலத்து வருகிற வாடை எனக் காலமுணர நின்றது. இம்மூன்று சொல்லும் பெயர் வினையை யொட்டி வாராது தனிவந்து தத்தம் குறிப்பில் வழியாற் பொரு ளுணர்த்தி வுமையான் ஒப்பில் வழியாற் பொருள் செய்தன. பிறவும் இவ்வாறு வருவன அறிந்துகொள்க" என்றனர். இவர் உவமை உருபுகளை இடைச்சொல் வகையுள் எதன்பால் அடக் கிக்கொள்கின்றனர் என்பது தெரியவில்லை.

## முடிப்புரை.

இளம்பூரணர், ஒப்புமை கருதாமல் அசை நிலையாய்வரும் 'போல்' என்னுஞ் சொல்லையும் தெய்வச்சிலையார் பெயர் வினையோடு ஒட்டி வாராது தனித்துவரும் கொன் முதலியன வற்றையும் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல் என்றனர்.

சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஒப்பில் வழியாற் பொருள் செய்குந உவம உருபுகளே என்று கூறினாலும், 'ஒப்பில் வழியாற் பொருள் செய்குந' என்பதற்குச் சேனா வரையர் கூறும் உரை நல்ல கருத்துடையதாய் அமைந்துள்ளது. இருவரும் ஒப்பில் வழியாற் பொருள் செய்யும் இடைச்சொல் வேறு ஒப்பில் போலி வேறு என்னும் கருத்தினராவர்.

# தமிழ் இலக்கிய மரபுகள்.

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

மக்கள் கூடிவாழும் இயல்புடையவர்கள். அதனால் ஒருவர் கருத்தை மற்றவர் தெரிந்துகொள்ள வேண்டிய இன்றியமையாமை ஏற்படுகின்றது. இதை நிறைவு செய்ய மொழி தோன்றியது. சில குறிப்பிட்ட ஒலிகளுக்குக் குறிப்பிட்ட சில பொருட்களைத் தருவதே மொழி. 'பழம்' என்னும் ஒலி 'பழம்' என்னும் ஒரு பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. பிறவும் இவ்வாறே; ஆனால் பழம் என்ற ஒலி ஏன் அந்தப் பொருளைக் குறிக்கவேண்டும் என்று யாரும் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தால் உலகில் மொழியே தோன்றியிருக்க இயலாது. ஒருவன் சொன்னான்; பிறர் அதனை அப்படியே ஏற்றுக்கொண்டனர்; அப்பொருளைக் குறிக்க அச்சொல்லையே தாங்களும் பயன்படுத்தினர். நாட்பட்ட பழக்கத்தால் சில ஒலிகள்—சொற்கள் சில பொருட்களைக் குறிப்பனவாக நிலைபெற்றன. வழிவழியாக வந்த மக்களும் அச்சொல்லை அப்பொருளைக் குறிக்கவே பயன்படுத்தலாயினர். இவ்வாறே சில நிகழ்ச்சிகளும் சில சொற்களால் குறிக்கப்பட்டன. இன்ன சொல் இன்ன பொருள் உடையது என்னும் இம்முறையே மரபு என்று சொல்லப்படுகின்றது.

'எந்தப் பொருளை எந்தச் சொல்லால் முன்னோர் வழங்கி வந்தார்களோ அம்முறையைப் பின்பற்றுதலே மரபு' ஆகும். இச்சொற்பொருள் மரபு ஒரு சமூகம் முழுவதற்கும் பொதுவாகிவிடுவதால் அதனைத் தனி ஒருவனோ சிலரோ மாற்ற இயலாது. மாற்ற முயன்றாலும் வெற்றிபெறாது. 'காயைக் 'கனி' என்றும் 'பாம்பைக் 'காடி' என்றும் கூறி, பிறரும் நாம் எண்ணும் கருத்தையே,—நாம் கூற விரும்பும் பொருளையே கருதச் செய்தல் இயலாததொன்று. எனவேதான் மரபுநிலை திரியாதிருக்கவேண்டும் என்ற கொள்கை எங்கும் எப்போதும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. ஆனால் இச்சொற்பொருள் மரபு என்றும் நிலைபெற்றியங்கும் ஒன்றன்று. சமூகத்தில் தோன்றும் கருத்து வளர்ச்சியாலும் பிறமொழிகளின் கலப்பாலும் மரபு நிலை மாறுபடும். **ஞாயிறு, கதிர்** என்னும் சொற்களால் குறிக்கப்பட்டு வந்த ஒரு பொருள் இப்போது '**சூரியன்**' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. இதுபோலவே ஒரு பொருளைக் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இருப்பின் அவை காலப்போக்கில் ஏற்பட்ட மரபு மாறுதலைக் குறிக்கும். எனினும் இம்மாறுதல்கள் ஓரிருவரால் வலிந்திற் புகுத்தப்படுதல் இல்லை. அவை தாமே தோன்றி வளர்ந்துவிடுகின்றன. கொள்கைகளின் கலப்புக்களாலும், அவற்றின் புதுமலர்ச்சிகளாலும் சமூகக் கலப்பினாலும் பல புதிய சொற்கள் பழைய மரபுச் சொற்களின் இடத்தைக் கைப்பற்றிக்கொள்ளுகின்றன. பின்னர் இலக்கியமும் அப்புதிய சொற்களையே மரபுச் சொற்களாகக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியங்களிலுள்ள **வழக்கிழந்த சொற்கள்** யாவும் நமக்கு இந்த நிகழ்ச்சிகளையே நினைவூட்டுகின்றன. அன்றியும் மரபு என்பது நிலையான ஒன்றன்று என்பதும், அதனை நிலைபேறடையச் செய்வதோ, மாற்றிவிடுவதோ சமூகத்தின் பொதுச் செயலேயன்றித் தனிப்பட்டோரின் செயல் அன்றென்பதும் விளங்காமலில்லை.



சொல் மரபு போன்றே இலக்கியத்தில் வேறுசில மரபுகளும் உள்ளன. இவற்றை இலக்கிய ஆசிரியர்களே படைத்துக் கூறுகின்றனர் என்பர் ஒரு சாரார். படைத்துக் கூறுபவர் ஆசிரியர்களே யாயினும் அவர்கட்கு அவற்றைப் படைக்கும் ஊக்கம் தந்து, அவர் படைத்தவற்றை ஏற்று ஆதரவு தருவது சமூகமேயாகும். எனவே, சமூக வாழ்க்கை முறைகளிலிருந்து அம்மரபுகள் முகிழ்க்கின்றன என்பதே பொருந்தும். சமூகத்தில் இல்லாதவை மரபுகளாகா. அவை சமூகத்தால் மரபுகளாக ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை.

இலக்கிய மரபுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று **பாத்திர மரபு** ஆகும். பழைய அகத்தமிழ் இலக்கியங்களில் தலைவன், தலைவி, பாணன், விறலி, தோழி, பாங்கன், செவிலி, தாய் முதலிய பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளமை நமக்கு வியப்பை ஊட்டுகின்றது; 'பாணனாவது செவிலியாவது; இவை வெறும் கற்பனைப் படைப்புக்கள் என்று முகந்திருப்பிக்கொள்ள நம்மில் சிலர் முற்பட்டிருக்கலாம். இவை இலக்கியப் பொதுத் தன்மை வழுவாதிருப்பதற்காகக் கையாளப்பட்ட மரபுகள் எனினும், இவற்றை ஆசிரியர்கள் வெறும் கற்பனையாகப் படைத்துவிடவில்லை என்பதையும் நாம் அறிதல் வேண்டும். **காதல்** என்னும் முக்கிய நிகழ்ச்சியில் இன்றியமையாத உறுப்பினர் இருவர். அவர்களே சிறப்புக் கருதித் '**தலைவன்**' '**தலைவி**' எனக் கொள்ளப்பட்டுள்ளனர். மற்றவர்களெல்லாம் இந்நிகழ்ச்சியின் வளர்ச்சிக்கு அவ்வப்போது துணை செய்பவர்கள். ஆதலால் அவர்கள் தத்தமக்குரிய பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளனர். 'பாணன்' 'விறலி' என்போர் பழந்தமிழ் மக்களின் வாழ்வில்

எந்த அளவுக்குத் தொடர்புகொண்டிருந்தனர் என்பதை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அந்நூல்களில் கூறப்படுவோர் அன்றைய வாழ்வில் இருந்தவர்களே. தமிழர் வாழ்க்கை என்னும் நாடகத்தில் இவர்கள் யாவருமே பங்குகொண்டிருந்தனர். சங்கத் தமிழ் இலக்கியங்களின் போக்கை நோக்க, அவை பெரிதும் செல்வரின் வாழ்வை அடிப்படையாகக் கொண்டிருப்பது தெரிகின்றது. 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்று கருதிய சமூகம், நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும் இகழ்ந்தொதுக்கவில்லை எனினும், மன்னர் அல்லது மன்னரின் ஒத்த நிலையிலுள்ள செல்வரின் வாழ்க்கையையே நிலைக்களமாகக் கொண்டு இலக்கியம் செய்யப்பட்டுள்ளது என்பது உண்மை; அவ்வாறு நோக்கின் செவிலியும், பாணர், விறலியரும் வெறும் கற்பனைப் படைப்புக்களல்லர் என்பது விளங்கும். இதற்கு மாறாக, பழந்தமிழ் இலக்கியங்கள் சமூக ஏற்றத் தாழ்வைக் காட்டவில்லை; அவை பொதுவான வாழ்க்கையையே காட்டிச் செல்லுகின்றன என்று கூறுவது, பேச்சுக்குப் பெருமை தருவதாக இருக்கலாம். ஆனால் அதே பேச்சு நம் இலக்கியத்தில் படிந்துள்ள வரலாற்று வண்ணத்தை அடியோடு மறைத்துவிடுகின்றது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எந்த நிலையிலுள்ள மக்களுக்கும் உள்ள பொதுவான சில உணர்ச்சிகளின்மேல் எழுந்த பாடல்கள் சங்க நூல்களில் உள்ளன என்பதை யாரும் மறுக்க ஒண்ணாது. எனினும் இலக்கிய மரபுகளாக அன்றைய சமூகம் வழங்கியுள்ள பாத்திரங்களையும் அவர்தம் செயல்களையும் இணைத்துப் பார்க்கும்போது செல்வ வாழ்வுடையோரைப்பற்றிய இலக்கியமே மிகுதியாகக் காணப்படுகின்றது. எனவே, "கட்டை வெட்டி விற்று வாழ்ந்த கந்தனுக்குப் பாணனும் பாங்கனும் எப்படி இருக்க இயலும்?"—ஓட்டைக் குடிசையில் ஒண்டிக் கிடந்து, காதலன் கந்தனின் வரவை எதிர் நோக்கியிருந்த செல்லியின் வாழ்விலே செவிலி எப்படி இடம்பெற இயலும்? —என்றெல்லாம் வினாக்களை எழுப்பி, 'அதனால் சங்க இலக்கியப் பாத்திரப் படைப்பு வெறும் இலக்கிய மரபே—அதற்கும் வாழ்க்கைக்கும் தொடர்பு இருந்ததில்லை' என்று கூறுதல் பொருந்தாது. அந்த இலக்கியம் எந்த வாழ்வைக் கூறுகின்றதோ அந்த வாழ்வில் இடம் பெற்றிருந்த பாத்திரங்களே **பொதுப் பெயரில்** அவ்விலக்கியத்தில் இடம்பெற்றுள்ளன. பொதுமை கருதிக் கொடுக்கப்பட்ட பொதுப் பெயர் ஒன்றுதான் இலக்கிய மரபு.

இனி, இப்பாத்திரங்கள் வெறும் இலக்கிய மரபேயானால் பின்னால் எழுந்த இலக்கியங்களுள்ளும் அவை அவ்வாறே இடம் பெற்றிருக்க வேண்டுமன்றோ? அப்படி இல்லாதபோது அவை வாழ்க்கையிலிருந்து எடுக்கப்பட்ட பாத்திரங்கள் என்பதுதானே உறுதியாகிறது? ஆனால் இன்று சங்க இலக்கியத்தைக் கற்கப் புகுவோர் இவற்றை அன்றைய மரபுகள் என்று தெளிந்துகொண்டே அவற்றைத் தொடங்கவேண்டும். இன்று அவை இல்லாததால் அவற்றைப் பழைய மரபுகள் என்று எண்ணியே பழம் இலக்கியங்களை ஆராய்தல் வேண்டும்.



தமிழ் இலக்கிய மரபுகள் என்று கருதப்படுவனவற்றுள் **முதற் பொருள், கருப் பொருள், உரிப் பொருள்** என்பனவும் அடங்கும். அவற்றுள் முதற் பொருள் என்பது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்துவகை நிலப்பாகுபாடுகளும், தனித்தனியே அவ்வாறு பகுத்துக் கூறப்படும் பெரும் பொழுதும் சிறுபொழுதுமாகும். உரிப்பொருள் என்பது ஐந்துவகை நிலங்களிலும் நடைபெறுவனவாகக் கூறப்படும் காதல் நிகழ்ச்சிகளைக் குறிக்கும். அவை புணர்தல், பிரிதல், ஊடல், இருத்தல், இரங்கல் என்பனவாகும். அவை முறையே குறிஞ்சி, பாலை, மருதம், முல்லை, நெய்தல் ஆகிய இடங்களில் நடைபெறும் என்பதும் மரபு. கருப்பொருள்களாவன அவ்வந் நிலங்களிலுள்ள விலங்குகள், மரங்கள், பறவைகள், பறை, தொழில், யாழ், ஊர், உணவுப் பொருட்கள், நீர், பூ முதலியனவாம். இவற்றுள் அவ்வந் நிலத்துக்குரிய ஒழுக்கமும், அவற்றுக்கெனக்கொள்ளப்பட்ட பொழுதுகளும், அங்குள்ள கருப்பொருள்களும் முறை பிறழாது கூறப்படுதல் அன்றைய வழக்கம்; மரபு.

இவற்றுள் வெறும் இலக்கிய மரபுகள் எவை என்பதை ஆராயின் அவை மிகச் சிலவாகவே உள்ளன. நிலத்தை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக்கொண்டது வெறும் மரபன்று. இயற்கையோடு முழுமையும் ஒத்து வருவதே அப்பகுப்பு முறை. இன்றிருப்பது போன்ற அறிவியல் வளர்ச்சியும், ஒரு பகுதி மக்களுக்கும் மற்றொரு பகுதி மக்களுக்கும் நெருங்கிய தொடர்பும் இல்லாத அக்காலத்தில் இத்தகு பகுப்பு முறைகள், மக்கள் வாழ்க்கையில் இயல்பாகவே இருந்தன. அம்முறையை அன்றைய இலக்கியமும் பின்பற்றியிருக்கின்றது.

இனி, கருப்பொருள், உரிப்பொருள், பொழுதுகள் எனும் இவை நெருங்கிய தொடர்பு உடையவை. ஐவகை நிலங்களுக்கும் உரிய ஐவகை ஒழுக்கங்களும் நிலத்தின் அடிப்படையிலேயே பெயர் பெற்றுள்ளன. எனினும் அப்பெயரீடு முறை இலக்கிய ஆசிரியன் கற்பித்துக்கொண்ட மரபேயாகும். தக்க

காரணங்களுடனேயே ஆசிரியன் அவ்வாறு கற்பித்துக்கொண்டுள்ளான். நம் பழைய இலக்கியங்கள் தோன்றிய காலத்தில் தமிழர்கள் நாடு நகரங்கள் அமைத்து வாழத் தொடங்கிவிட்டன ரெனினும் பழைய இயற்கை வாழ்வு, மணம்—அவ்வந் நிலங்களில் தங்கி அங்கங்குள்ள தொழில்களைச் செய்துவந்த வாழ்வின் இயல்பும் அடியோடு மாறிவிடவோ மறந்துவிடவோ இல்லை. பழைய புதிய வாழ்க்கை முறைகளை அடியொற்றி எழுந்த இலக்கியங்கள் பழைய வாழ்வின் இயல்புகளைப் பொருளாகவும் கொண்டு விளங்கலாயின. அவ்வாறு இலக்கியம் அமைப்பது எளிதாகவும் இருந்திருக்கலாம்.

ஐந்துவகை ஒழுக்கங்களும் ஒவ்வொரு நிலத்துக்கு ஒன்றாகக் கூறப்பட்டுள்ளன. இம்முறை மிகவும் செயற்கையாகக் காணப்படினும் ஆழ்ந்து நோக்கின் அதுவும் இயற்கையாதல் தெளிவு. புணர்தலும் புணர்தலுக்குரிய நிமித்தமும் குறிஞ்சி ஒழுக்கம் எனக் குறிக்கப்படுகின்றன. இதைக் கூறும்போது குறிஞ்சி நிலவருணனையும் அந்நிலப் பகுதியில் நடைபெறும் செயல்களுமே இணைத்துக் கூறப்படவேண்டும் என்ற வரையறை இருந்துள்ளது. குறிஞ்சி ஒழுக்கம் குறிஞ்சி நிலத்தில் நடப்பது சரியே என்பதை ஒத்துக்கொண்டால், குறிஞ்சியின் கருப்பொருட்களை கூறுவது முறையே என்பது மட்டுமன்றி இன்றியமையாததே என்றும் கூற நாம் முன்வருவோம். ஓரிடத்திய வாழ்வை முழுமைபடக் கூறவேண்டுமெனில் அங்குள்ள பொருட்களையும் நிகழ்ச்சிகளையும் முறைப்படி வருணித்தல் முறையே. அப்போதுதான் கூறப்படும் பொருளும் சிறக்கும்,

உருமேனிய நாடு மண்ணெண்ணெய்க்குப் பேர்பெற்றது; இங்கிலாந்து கடல் வாணிகத்திற் சிறந்தது; பிரேசில் நாடு காப்பிக்கொட்டையிற் பெயர்பெற்றது; சப்பானிய நாடு முயற்சிக்கு முதலிடம் தந்தது என்றெல்லாம் கூறுகின்றோம். இப்பண்புகள் பொருட்கள், செயல்களை நினைத்தவுடன் அவற்றால் பெயர்பெற்ற அந்தந்த நாடுகள் நம் நினைவில் தோன்றுகின்றன. ஆனால் குறிப்பிட்ட ஒரு நாட்டில் இங்குக் குறிப்பிட்ட ஒரு செயல்தவிர வேறு செயல்களே நடைபெறவில்லை என்பது பொருளன்று. இதுபோலவே ஐந்திணைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலத்திற்கு உரிமை செய்யப்பட்டிருப்பதனால், குறிஞ்சியில் பிரிவும், நெய்தலில் புணர்ச்சியும், மருதத்தில் இரங்கலும் நடைபெறுவதில்லை என்று கொள்ளுதல் ஆகாது. எல்லா ஒழுக்கங்களிலும் எல்லா நிலங்களிலும் நடைபெறுவது இயற்கை.

(அடுத்த இதழில் முடியும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

# புயல்.

ஆசிரியர்: செகப்பிரியர்.
மொழிபெயர்ப்பாளர்: புலவர். R. ஏகாம்பரநாதன்.

## அங்கம்—4. களம்—1.

**வீரராசேந்திரன்** :— நான் காண்பதெல்லாம் தெய்வக் காட்சி, கேட்பனவெல்லாம் நிறை மொழிகள். மாலினி, நும் போன்று ஒரு துணையும், நும் தந்தையார் போன்று ஒரு சக்தி வாய்ந்த மாமனாரும் கிடைத்தால் இந்திரலோகம், சத்தியலோகம், வைகுண்டம், கைலாயம் இன்னும் மனிதனின் கற்பனையில் தோன்றும் எந்த உலக உயர்ந்த இன்பமும் நமது இன்பத்துக்குக் கீழ்ப்பட்டதாகவே இருக்கும்.

**சயசீலன்** :— வீரராசேந்திரா, சற்றுப் பொறுத்திருங்கள். இடையிடையே பேசினால் என் மந்திரசக்தி சிறிது குறைய நேரினும் நேரலாம்.

(இந்திராணியின் ஏவலால் பூமாலிகா சென்று நதிகளையும் குடியானவர்களையும் அழைத்து வருகிறாள்)

**கூலலட்சுமி** :— காவேரி, வைகை, பொருநை, சிந்து, கோதாவரி, கங்கா, யமுனா, யாவரும் வாருங்கள். இந்திராணியம்மாளின் உத்தரவு ஒப்பற்ற காதலின் சேர்க்கை—இக்காதலர்களின் தெய்வ வாழ்வுக்கு நீங்கள் ஒவ்வொருவரும் வாழ்த்துக் கூறிவிட்டுச் செல்லுங்கள். (ஒவ்வொருவரும் வாழ்த்துக் கூறிவிட்டுச் செல்கின்றனர்.)

குடியானவர்களே வைக்கோல் தொப்பியை மகிழ்வின் அடையாளமாகத் தலையில் மாட்டிக்கொண்டு பள்ளுப் பாடுங்கள். சிறிது கைகோத்தாடுங்கள். இவர்களின் தெய்வக் காதலின் எதிர்ப் பலனாக நாடு செழிக்கும் நீங்கள் மலைமலையாகக் கூலக் குவியல் பெறுவீர்கள். (யாவரும் ஆடுகின்றனர்)

**சயசீலன்** :— (திடுமென ஒரு ஒலி கேட்டுச் சிறிது நடுக்கத்துடன்) நிறுத்துங்கள், இப்போது நீங்கள் அனைவரும் செல்லலாம். உங்கள் காரியம் முடிந்தது. (அனைவரும் விடைபெற்றுச் செல்லுகின்றனர்) எனது சக்தியின் பெருமையில் என்னையே மறந்துவிட்டேன். அக்கலியன் இரண்டு ஊதாரிகளைக் கொண்டு என்னைக் கொல்ல எண்ணியிருக்கிறான். அவர்கள் குறித்த நேரமும் வந்துவிட்டது. அதைக் கவனிக்கவேண்டும்.

**வீரராசேந்திரன் :—** மாலினி, உன் தந்தையாருக்குத் திடுமென ஏதோ மாறுதல் தோன்றிவிட்டது. சற்றுக் கோபம் கூடக் காணப்படுகிறது. வந்தவர்களுக்கு நல்ல வரவேற்புமில்லை. மரியாதையுமில்லை. பிரிவிலும் இனிமையில்லை. 'ஊதாரிகளைக்கொண்டு கொல்ல' என்று எண்ணவோ தன்னைப்பற்றியும் கூறிக்கொண்டார். சக்தி நிறைந்த இவர் இவ்வாறு கூறிக்கொள்வதின் பொருள் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

**மாலினி :—** இதுகாறும் என் தந்தையாரை இந்த நிலையில் கண்டதே இல்லை. கோபமாகத்தான் இருக்கிறார்.

**சயசீலன் :—** மருகரே, நீங்கள் ஏன் கவல்கின்றீர்கள். நீங்கள் எதுபற்றியும் குழப்பம் அடையவேண்டுவதில்லை. மகிழ்ச்சியுடனே இருங்கள். இங்கு வாழ்த்துக் கூறியவர்களும், கைகோத்தாடியவர்களும் யாவரும் எனது மந்திர சக்தியால் தோற்றம்கொண்டு வந்த காத்தவராயர்களின் கூட்டமேயாம். எனது ஒரு நினைப்பில் உருவத்துடன் வந்தவை மற்றொரு நினைப்பில் காற்றுடன் கலந்தன. எனது முன்னேற்பாடான சில திட்டத்தை நடத்திக் காட்டினேன். இவை எல்லாம் உங்களுக்குக் கனவுபோல் தோன்றுகின்றனவா? அப்படியானால் விண்ணளாவும் கோபுரங்களும் கண்கவரும் விசாலமான அரண்மனைகளும், எண்ணற்ற மாளிகைகளும், ஏன், மலைகளும், தீவுகளும், பூமியும் எல்லாம் மறையக்கூடியவைதான். காலன் அறிந்தது. காலம் கூறும் உண்மைதான் இவை. கனவு ஒரு நுண்பொருள். நிலையற்றது. மக்களாகிய நாமும் நுண்பொருள்களின் சேர்க்கைதான். நிலையற்றவர்கள் தாம் நம் வாழ்நாள் ஒரு தூக்கத்தில் தான் முடியவுளது. எனக்கு அயர்ச்சியாக இருக்கிறது. நான் தளர்ந்த வயதினன் அல்லவா? அயர்ச்சி, தளர்ச்சி என்ற எனது வார்த்தைகளைக் கேட்டு நீங்கள் கவலையடைய வேண்டாம். எனது அறையுள் சென்று நீங்கள் இருவரும் சற்று ஓய்வு கொள்ளுங்கள். நான் சற்று உலவி வருவேன்.

**மாலினி :—** அப்பா, எங்களுக்கென்ன ஓய்வு. தாங்கள் சுகமாக இருந்தால் அதுவே எங்களுக்கு அமைதி இன்பம் எல்லாமாகும். தாங்கள் எங்கு உலவப்போகிறீர்கள்? இங்கேயே சற்றுத் தங்கி இளைப்பாறுங்கள்.

**சயசீலன் ;—** என்னைப்பற்றிய பொறுப்பு உங்களிடம் நான் கொடுக்கவில்லையே. நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் எனது அறைக்குச் செல்லுங்கள்.

(அவர்கள் சென்றதும்—அறைக்கு வெளியில்)



**சயசீலன் :—** காத்தவா, கலியனைக் காணவேண்டாமா?

**காத்தவன் :—** ஐயா, வாழ்த்து நடந்தபோதே இதுபற்றிச் சொல்ல வெண்ணி யெண்ணி. வாய்ப்புக் கருதியே வாளா இருந்துவிட்டேன் கலியன், திருக்கு, கணேசன் மூவரையுமே எனது இசையொலியால் இழுத்து வந்தேன். காதை விரைத்து, மூக்கைத் தூக்கி, கண்கொட்டாது தொடரும் மிருகங்கள் போல் கல்லிலும் முள்ளிலும் ஒலியைத் தொடர்ந்து வந்தனர். உடை கிழிந்து, உடம்பெல்லாம் கீறல்கொண்டு நமது அறைக்கும் பின்னால் உள்ள கும்பியில் பாசி படர்ந்த குட்டையில் நிற்கின்றார்கள். ஆனால் நாற்றம் பொறுக்காமல் அதினின்றும் இப்போதுதான் கரையேறுகிறார்கள்.

**சயசீலன் :—** சரி, அவர்கள் கண்ணில் படும்படி இங்கு ஒரு கொடி கட்டி அதில் நல்ல உடைகளைப் போட்டுவை. தவறுதல் காணாமல் தண்டனை கொடுக்கக் கூடாதல்லவா?

**காத்தவ :—** கணத்தில் செய்துவைப்பேன். ஆனால் கலியன் அவர்கள் மூலம் தங்களைக் கொலை செய்வதற்குப் 'பகீரதப் பிரயத்தனம்' செய்கிறான்.

**சயசீலன் :—** அவனை நல்வழிக்குக் கொண்டுவர எவ்வளவோ முயன்றேன். அவனை ஒரு மனிதனாக்கத் திட்டமிட்டேன். எல்லாம் வீண். அவனைத் திருத்தும் அளவில் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆண்டு முதிர முதிர அவன் உடலில் தடிப்பு ஏறஏற அவனது குணமும் முரண்பட்ட வழியிலேயே வளர்கின்றது. பாவம் அவனும் அவனுடன் சேர்ந்தவரும் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவித்துத்தானே ஆகவேண்டும். விரைவில் சென்று உடைகளை மாட்டிவை

(உடைகள் தொங்கவிடப்பட்டுள்ளன — அதற்கு முன்னால் கலியன், திருக்கு, கணேசன் மூவரும் பழுதுபட்ட உடைகளுடன் வருகின்றனர்)

**கலியன் :—** மெதுவாக நடவுங்கள். சுண்டெலிக்குக் கூடக் காதில் விழக்கூடாது. அவர் தூங்கும் அறைக்கும் பக்கத்துக்கு வந்துவிட்டோம். கத்தியைத் தயாராக வைத்துக்கொள்ளுங்கள்.

**கணேசன் :—** கலியா, என்னடா எவ்வளவு தொல்லைடா. உடம்பெல்லாம் ஈரம்; நாற்றம். உடையெல்லாம் கிழிஞ்சுபோயி எவ்வளவு துன்பமடா?

**திருக்கு:**— ஏய், இருபிறப்பு, கலியா உன் பேச்சைக் கேட்டு ஒருவனும் உருப்பிடப்போவதில்லை. எனக்கு நன்றாகத் தெரியுதடா?

**கலியன் :**— ஐயா, தயவுசெய்து கொஞ்சம் பொறுமையாக இருங்கள், உங்களுக்காக நான் கொடுக்க இருக்கும் இலாபம் உங்கள் கையில் கிடைத்துவிட்டால் இத்தொல்லையெல்லாம் உடனே மறைந்துபோம். தயவுசெய்து அமைதியாக இருங்கள். நடுநிசி எல்லாம் அமைதியாக இருக்கிறது நமது காரியத்தை விரைவில் முடிக்கவேண்டும்.

**திருக்கு :**— சேற்றிலே நினைந்தது பெரிதல்ல. காய்ந்து போகும். உடைகள் கிழிந்துவிட்டன. அது போனாலும் போகட்டும். எனது கையிலிருந்த சாராயப் புட்டியை இழந்து விட்டேனே, அதைத் தேடியெடுத்துக்கொண்டு வரப்போகின்றேன் நான்.

**கணேசன் :**— கிடைக்கப்போகும் பலாக்காயை நம்பிக் கிடைத்திருந்த களாக்காயை விட்டது மூடத்தனம். அதைத் தேடியெடுக்கத்தான் வேண்டும்.

**கலியன் :**— எனது இராசக்களா, பெரிய ராசனே இது தான் வழி. இக்குகைவழியாக அமைதியாக உள்ளே போனால் கொஞ்சம் பின்னால்தான் அவர் அறை உளது; அவர் தூங்குவார். கத்தியால் கழுத்தை வெட்டவேண்டியதுதான்; அவர் மந்திரமெல்லாம் தொலைந்துபோகும். அப்புரம் அரசாங்கம் உங்களுடையதுதான். யாருக்கும் நீங்கள்தான் ராசா. இந்தக் கலியன் அப்புரம் உங்கள் ஆள்தான். உயிர் உள்ளவரை கலியன் உங்கள் காலடியில்தான் இருப்பான். இது சத்தியம்.

**கணேசன் :**— எங்கே கலியா உன் கையைக்கொடு. எனது எண்ணத்தில் இரத்தக் கறை படிந்துவிட்டது. இனிமேல் காரியம் பெரிதல்ல.

**திருக்கு :**— கணேச மகாராசா, தும்பிக்கை ஆள்வாரே, இதைப் பாருங்கள். புதிய ஆடைகள் தொங்குகின்றன. இதில் ஒன்றைக் கட்டிக்கொண்டுதான் நான் புட்டியைத் தேட எண்ணுகிறேன். புதிதாக அரசான நீங்கள் கட்டாயமாக நல்ல உடைகளைக் கட்டிக்கொள்ளுங்கள். ஆடையில்லா மனிதன் அரை மனிதன். மனிதனுக்கே குறைந்துவிட்டால் ராசா ஆவது எப்படி?

(தொடரும்)

# வேண்டுகோள்.

அன்பரீர்!

நலம். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் திங்கள் வெளியீடாகிய 'தமிழ்ப் பொழில்' தமிழ்த்தாயின் தவமக்களும் தமிழறிஞரும், புரவலருமான தமிழவேள். த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களின் உள்ளத்தெழுந்த உயர்ந்த தமிழ்த் தாளாகும் என்பதனை அறியாதார், யார். அன்னாரின் தளரா உழைப்பால் தனித்தமிழ் நடைக்கும் இயலிசை ஆராய்வோருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிவந்த இந்த இதழ் எதிர்காலத்தில் இந்திய நிலப்பரப்பன்றி எங்கணும் சென்று தமிழ் மணம் வீசவேண்டும் என்பது அவர்களின் பேரவா. தமிழரின் போகூழ் அவரைப் புகழுடம்படையச்செய்து சங்கத்தையும் இதழையும் இடுக்கணுறச் செய்தது. இது நிற்க.

இனி இவ்விதழின் எதிர்கால வாழ்வும் சிறப்பும் கட்டுரை வழங்குவோர் பொழில் அன்பர் (உறுப்பினர்) என இருதிறத் தமிழன்பர் கையிலிருக்கின்றன.

குறைந்த உறுப்பினர்களைக் கொண்டிருத்தலாலும் முன்னையிலும் செலவுகள் கூடுவதனாலும் மேலும் வளம்படுத்த இயலாமல், சங்கம் கைப்பொருளை இழந்து வருகிறது. என்றாலும் சங்கம் தளராமல் பொழிலை வளர்த்து வருதல் போற்றற்குரியதாகும்.

## கட்டுரை வழங்குவோர், நினைவுகூரவேண்டிய செய்திகள்.

1. கட்டுரைகள் தெளிந்த இந்தமிழ் நடையில் விழுமிய பொருளை விளக்கமுற எழுதப்பெற்றனவாதல் வேண்டும். தமிழ்ப் பொழிலிற்பக்கம் நான்கிற்குமேல் தொடராமல் முடிவுபெறுவது நலம். நீண்ட பொருளாயின் இக்கூறிய அளவில் முடியும் சிறுசிறு பிரிவுகளாக வகுத்தெழுதல் வேண்டும்.

2. சிறந்த முறையில் தமிழ்மொழி, இலக்கியம், இலக்கணம், புலவர் வரலாறு, கற்பனைச் சுவைமிகுந்த தனிப்பாடல்கள், பிறமொழியில் உள்ள அரிய நூல்களின் மொழிபெயர்ப்புகள், வெளிவராதிருக்கும் அரிய நூல்கள், கல்வெட்டு, செப்பேடு, புதைபொருள், கலைப்பொருள் ஆயவைகளைப் பற்றிய ஆராய்ச்சியுரைகளும் இவைபோல்வன பிறவும் பொழிலில் வெளிவருவதற்குரிய பொருள்களாகும்.

3. தமிழ்ப் பொழிலில் வெளியிடுதற்கனுப்பப்பெறும் கட்டுரை, கவிதை, செய்யுள், நூல் முதலியவை வேறெந்தத் தாளிலும் வெளிவந்திருக்கவும் வெளிவரவும் கூடாது.

4. இருதிறத்தன்பர்களும் மேலும் பல உறுப்பினர்களைச் சேர்த்துதவுதலோடு மேற்குறிப்பிட்ட வகையில் எழுதவல்ல அறிஞர்களை எழுதுமாறு தூண்டுதல் வேண்டும்.

இவ்வாறான உதவிகள் ஞாலத்தில் மாணப் பெரியனவாகச் சங்கத்தாரால் நன்றியுடன் மதிக்கப்பெறும்.

சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், க. த. சங்கம்.

S. சுயம்பிரகாசம், B. A., B. L.,
பொழில்ரெண்டர்

Regd. No. M. 4192.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

| | | |
|---|---|---|
| யாழ் நூல் (விபுலானந்த அடிகள்) தாள் உறை | ரூ. | 15—0—0 |
| ,, அட்டை உறை | | 18—0—0 |
| தொல்—சொல்—தெய்வச்சிலையார் உரை | ... | 2—8—0 |
| தொல்—பொருள்—புறத்திணையியல் (S. S. பாரதி உரை) | | 1—0—0 |
| ,, ,, மெய்ப்பாட்டியல் | | 1—0—0 |
| சிலப்பதிகாரம் — புகார் காண்டம் | ... | 0—6—0 |
| நெல்லை வருக்கக் கோவை | ... | 0—2—0 |
| சித்தரந்தாதி | ... | 0—2—0 |
| கரந்தைக் கட்டுரைக் கோவை | ... | 1—8—0 |
| சுருதி வீணை | ... | 0—4—0 |
| தமிழரசி குறவஞ்சி | ... | 0—10—0 |
| பரத சாத்திரம் | ... | 1—0—0 |
| கவியரசு நினைவு மலர் | ... | 1—0—0 |
| கச்சிக் கலம்பகம்—(பூண்டி, அரங்கநாத முதலியார்) | ... | 0—8—0 |
| அப்பர் புகழ்மாலை | ... | 0—4—0 |
| சுந்தரர் புகழ்மாலை | ... | 0—4—0 |
| புல்வராற்றுப்படை | ... | 0—4—0 |
| பாரதசார வெண்பா | ... | 1—0— |
| தொல்—பொருட்பாயிரம் உரை | ... | 0—2— |
| யாப்பருங்கலம் & யாப்பருங்கலக் காரிகை மூலம் | ... | 0—3—0 |
| யுவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்) | | 1—8—0 |
| இந்தியத்தல யாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,) | ... | 1—4—0 |
| சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதி (ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம்) | ... | 2—0—0 |
| புல்வராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை) | ... | 0—4—0 |
| திருமும் செந்தமிழும் | ... | 0—4—0 |

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| | | உள்நாடு | | | வெளிநாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| முன்பணம் அறுபுள்வரி | ரூ. | 50 | 0 | 0 | 50 | 0 | 0 |
| ,, ஆண்டு வரி சங்க உறுப்பினருக்கும் மாணவருக்கும் | | 2 | 0 | 0 | 2 | 8 | 0 |
| ,, ,, ஏனையோருக்கு | | 3 | 0 | 0 | 3 | 8 | 0 |

Edited and Published by Rao Sahib S. Swayamprakasam B. A., B. L., M. L. A. Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T. V. M. Mahalingam at Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
25 JUN 1956
MADRAS

வாழ்க தமிழ்!

# தமிழ்ப் பொழில்

துணர் ௩௨. 1563 2-56. மலர் ௩.

துன்முகி — ஆனி.

(1956)

கரந்தைத் தமிழ்ச் சங்கம்,

தஞ்சை.

பொழிற்றொண்டர்:

இராவுசாகேப், S. சுயம்பிரகாசம், B. A., B. L., M. L. A.,

## உள்ளுறை.

துணர் ௩௨. மலர் ௩.

பக்கம்


1. அறமுரைத்த அண்ணல் — 65
   கு. சிவமணி, B. A. (Hons)
2. தமிழுலகில் பொன்னொளி — 72
3. நிகழ்கால வினைவடிவம் — 74
   ஞா. தேவநேயப்பாவாணர்
4. புயல்—புலவர் R. ஏகாம்பரநாதன் — 78
5. கரந்தைக் கோவை — 85
   வித்துவான் ச. பாலசுந்தரம்
6. தமிழ் இலக்கியப் பண்புகள் — 91
   இரா. இளந்திரையன், B. A. (Hons)
7. மதிப்புரை — 96



# தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

| துணர் ௩௨ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௭, துன்முகி, ஆனி, 1956 ஜூன், ஜூலை. | மலர் ௩. |
|---|---|---|


## அறமுரைத்த அண்ணல்.


கு. சிவமணி, B. A. (Hons.)


"எவ்வுடம்பில் எவ்வுயிர்க்கும் யாதொன்றால் இடரெய்தின்
அவ்வுடம்பின் உயிர்க்குயிராய் அருள்பொழியும் திருவுள்ளம்"
"ஒருமைக்கண் ஈர்ஒன்பான் உரைவிரிப்ப உணர்பொருளால்
அருமைக்கண் மலைவின்றி அடைந்ததுநின் திருவார்த்தை"
"மதுஒன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி"

(வீரசோழிய உரை)

வரலாறு காட்டும் முதல் அறமுறைத்த அண்ணலார் கௌதம புத்தர் ஆவார். அவர் நிருவாணமடைந்து 2500 ஆண்டுகள் கழிந்தன. அன்று அவர் எழுப்பிய அருட்குரல், பல்லாண்டுகளையும் கடந்து காலவெள்ளத்திலும் அமிழ்ந்து போகாது இன்றும் உலகெங்கும் ஒலிக்கின்றது. மனிதராகப் பிறந்த ஒருவர், உயிர்க்கிரங்கும் அவரது பண்பினாலும், அருள் நிறைந்த அவரது செயலினாலும் படிப்படியாக மாந்தருக்குள்ளுயர்ந்து தெய்வநிலை அடைந்த வரலாறுதான் கௌதம புத்தரது காதையாகும். அவர், சித்தார்த்தராக உலும்பினியில் பிறந்து, கயையில் அறிவொளி பெற்றுப் புத்தராகி, இசி பட்டணத்தில் (சாரநாத்) உள்ள மான் வனத்தில் முதல் அறிவுரையை அருளியதோடு புத்த சங்கத்தையும் தோற்றுவித்து, இறுதியில் குசிநகரத்தில் முத்திநிலை அடைந்தார்.

புத்தமதம் எழுவதற்குமுன் பிராமண மதம் வடநாட்டில் மிகுதியாகப் பரவி இருந்தது. சாதிக்கொரு நீதிகூறி மக்களுக்குள்ளே உயர்வு தாழ்வுகளைக் கற்பித்தது. இயற்கைக்கும் மேற்பட்ட செயல்களைக் கற்பித்து மக்களை நம்பச்செய்தது; கடவுள் பெயரால் உயிர்க்கொலை முதலிய செயல்களைச் செய்துவந்தது. இந்நிலையில்தான் புத்தமதம் அதற்கெதிராக எழுந்து அறிவுக்குப் பொருத்தமற்ற

தமிழகத்தில் கால்கொண்டன. ஏறக்குறைய கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. மூன்றாம் நூற்றாண்டுவரைப் புத்தமதம் செல்வாக்குடன் திகழ்ந்தது. தமிழகத்தில் புத்தம் செல்வாக்குப் பெற்றிருந்தமை சிலப்பதிகாரம், மணிமேகலை, தேவாரம், நாலாயிரப் பிரபந்தம், பெரிய புராணம், நீலகேசி, குண்டலகேசி, வளையாபதி போன்ற நூல்களினால் தெரியவருகின்றது. கடைச் சங்கத் தொகை நூல்களில் புத்தமதக் கருத்துக்கள் காணப்படவில்லையாயினும் அச்சங்க காலத்து நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களில் அவை காணப்படுகின்றன. இளம்போதியார் என்ற புத்த சமயத்தவரின் பாடலொன்று நற்றிணையில் உள்ளது. புத்த மதக் கொள்கைகள் வளர வளர அவைகட்குத் தொடர்பான காவியங்களும் எழுந்தன. அவற்றுள் தலைசிறந்தது மணிமேகலை. மணிமேகலை முழு வடிவிலும், குண்டலகேசி, வளையாபதி இரண்டும் சிதைந்த நிலையிலும் இன்று பெறப்படுகின்றன. புத்தமித்திரரால் இயற்றப்பட்ட வீரசோழியம், வடமொழி இலக்கணத்தைச் சிறுபான்மை தழுவித் தமிழ் ஐந்திலக்கணத்தைக் கூறும் இலக்கண நூலாகும். கச்சியப்ப முனிவர் கந்த புராணத்தை அரங்கேற்றும்போது " திகட சக்கரம் " என்னும் சொற்புணர்ச்சி இலக்கணத்தை இதைக்கொண்டு காட்டினர் என்பர். இவையன்றி பிம்பிசாரனது கதை கூறும் 'விம்பிசாரக்கதை', புத்தர் புகழ்பாடும் 'திருப்பதிகம்', புத்தரது கொள்கையை விளக்கும் 'சித்தாந்தத் தொகை' முதலிய நூல்களையும் புத்தமதத்தவர் இயற்றினர்.

உலகப் பொதுமறை எனப் புகழப்பெறும் திருக்குறளுக்கும் புத்த மதத்திற்கும் பல இடங்களில் கருத்தொற்றுமை உள்ளது. சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறித்து ஏனையவற்றை விரிவஞ்சி விடுக்கின்றேன்.

1. " மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழுந் தரும் ". —குறள் 457.

" மனிதனை மனோதருமமே உருவாக்குகின்றது; சிந்தனைகளே அதன் அடிப்படை; சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகின்றது. மனிதன் நல்லெண்ணத்துடன் பேசினாலும், செயல் புரிந்தாலும், நிழல் தொடர்ந்து செல்வதுபோல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்" — தம்மபதம் 2.

2. " காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக் கெடும் நோய் " —குறள் 360.

" கலங்கிய சிந்தனைகளும், உணர்ச்சி வெறிகளும், இன்பத்தில் நாட்டமுள்ள மனிதனுக்கு அவா வளர்ந்து கொண்டே இருக்கும்; அவன் தன் கட்டைப் பலப்படுத்திக்கொள்கின்றான் " — தம்மபதம் 349.

3. ' திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று " —குறள் 157



" நான் பிறரால் இகழப்படும்போது, 'அவர்கள் மிகவும் நல்லவர்கள். ஏனெனின் அவர்கள் என்னை அடிக்கவில்லை' என எண்ணிக்கொள்வேன். அவர்கள் என்னைக் கைகளால் அடித்தால், 'அவர்கள் நல்ல தன்மை உடையவர்கள்; ஏனெனில் அவர்கள் தடிகொண்டு என்னைத் தாக்கவில்லை என எண்ணிக்கொள்வேன். அவர்கள் இதைச் செய்ய முற்பட்டால், 'அவர்கள் மிகச் சிறந்தவர்கள். ஏனெனின் என்னை உயிர்போகும்படி அடிக்கவில்லை' என நினைந்துக்கொள்வேன். அவர்கள் என்னைக் கொன்றால், 'இந்தத் துன்பமான உடலிலிருந்து என்னை விடுவித்த அவர்கள் எவ்வளவு நல்லவர்கள்' என்று சொல்லிக்கொண்டே இறப்பேன்"—புத்தர்வாக்கு.

இவைபோன்ற ஒற்றுமைகள் ஏராளமாக உள்ளன. அவைகளைக் கொண்டு திருவள்ளுவரைப் புத்த மதத்தவர் என்று சிலர் கூறுகின்றனர். ஒவ்வொரு மதத்தவருக்கும் ஏற்ற கொள்கைகள் திருக்குறளிலே காணக்கிடக்கின்றன. அதற்குக் காரணம், மனித சமுதாயத்திற்குத் தேவையான அடிப்படை அறவழிகள் எந்நாட்டவருக்கும், எம்மொழியாளருக்கும் ஒரே தன்மையனவே. ஆனால் ஒவ்வொருவரும் கொள்ளும் முறையும் செல்லும் நெறியும் மாறுபட்டிருக்கலாம். ஆகவே, 'எல்லாப் பொருளும் இதன்பாலுள' என்ற பெருமைகொண்ட திருக்குறளை, புத்தமதச் சார்புடைய நூல் என்ற ஒரு சிறு எல்லைக்குள் அடக்குவது சிறப்புடையதாகாது.

கி. பி. 2-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே சமயப் பூசல்கள் தமிழகத்தில் தலைதூக்கின. அகச் சமயங்களும் புறச் சமயங்களும் ஒன்றை ஒன்று தாக்கிக்கொண்டன.

" ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்தில் பாங்கறிந் தேறுமின்
பற்றா மாக்கள் தம்முட னாயினும்
செற்றமுங் கலாமும் செய்யா தகலுமின் "

என்று மணிமேகலை கூறுகின்றது. கி. பி. 7-ம் நூற்றாண்டில் புத்த மதம் வீழ்ச்சி அடையத் தலைப்பட்டது. சமய வாதுகள் நிகழ்ந்தன. வென்றவர் தோற்றவர்களைச் சித்திரவதைக்குள்ளாக்கினர். அந்நாளில் மதப் போராட்டம் தனது முழுவேகத்துடன் தலைவிரித்தாடியது. புத்தம் புறச்சமயம் என்பதாலோ, அல்லது அதன் கொள்கைகளை ஆழ்ந்து உணராததாலோ, அன்றி அகச்சமயமே சிறந்தது என்று தமது சமயங்களுக்கு உயர்வு தேடும் பொருட்டோ புத்தமதத்தைப் பற்பலரும் எதிர்த்தனர். அவர்களது எதிர்ப்புக்கு முன் புத்தமதம் நிற்க முடிவில்லை. நாயன்மார்களும் ஆழ்வாராதிகளும் அதை மிகவும் வன்மையாகக் கண்டித்தனர். அவைகளில் சில வருமாறு :—

" பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடு
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே "

" உடைதுறந் தவர்களு முடைதுவ ருடையரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமினீர் "

" குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு சாக்கியருங்
குணமொன் றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே........
— திருஞானசம்பந்தர் தேவாரம்.

" புத்தன் முதலாய புல்லறிவிற் பல்சமயம் "—திருவாசகம்.

" புலையறமாகி நின்ற புத்தொடு சமண மெல்லாங்
கலையறக் கற்றமாந்தர் காண்பரோ கேட்பரோதான் "
— முதலாயிரம்.

" பொங்கு போதியும் பிண்டியும் முடைப்புத்தர் நோன்பியர்"
— பெரியதிருமொழி.

பிற்காலச் சோழர் வரலாற்றில் பெரும்புகழ்பெற்ற பேரரசன் இராசராசன் காலத்தில் சிற்சில இடங்களில் புத்த விகாரங்களும் பள்ளிகளும் இருந்தன. இராசராசன் சைவனுக இருந்தபோதிலும் சமயப் பொறையுடையவன்.

" உற்றவர்க் குறுப்பறுத் தெரியின்க ணுய்த்தலை யென்ன
தீமை செய்வோர்க்கு மொத்த மனத்ததாய்
நற்றவர்க் கிடமாகின்றது நாகையே "

என்று புகழ்ப்பெற்ற நாகப்பட்டினத்தில், ஸ்ரீ விசயநாட்டு மன்னனை மாரவிசயோத்துங்கன், இந்தோனீசிய அரசன் கடகன் ஆகியோர்கட்டிய சூளாமணி விகாரத்திற்கு, இராசராசன் ஆனைமங்கலம் என்ற சிற்றூரை மானியமாகக் கொடுத்தான் என்று ஒரு செப்பேடு கூறுகின்றது. தென்னிந்தியாவில், புத்தரது உருவச் சிலைகள் அதிகமாகக் கிடைக்கவில்லையாயினும், தஞ்சை மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான வெண்கலச் சிலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை மகாயான வழிப்படி உள்ளவை என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். புத்த மதத்தவரது கூட்டுறவால் சிற்பக்கலை செழித்து வளர்ந்தது. பல இலக்கிய இலக்கண நூல்களும் தோன்றித் தமிழை வளம்படுத்தி இருக்கவேண்டும். மதப் போராட்டத்தில் பிற மதத்தினரால் அழிக்கப்பட்டவைபோக எஞ்சியுள்ள சில நூல்களே இன்று நமக்குக் கிடைக்கின்றன. கி. பி. 15-ஆம் நூற்ருண்டுக்குச் சற்று முன்னரே புத்தமதம் தமிழகத்திலிருந்து முற்றும் விரட்டப்பட்டது.

கடைச்சங்க காலத்தில் வாழ்ந்து நற்றிணையில் 72-ஆம் பாட்டைப் பாடிய இளம்போதியார் சிலம்பு, மணிமேகலை கூறும் அறவண அடிகள், தமிழகத்தின் தவச்செல்வி மணிமேகலை, புத்த



மதப் பெருங்காப்பியமான மணிமேகலையை எழுதியருளிய சீத்தலைச் சாத்தனுர், சிங்களத்தில் புத்தமதத்தைப் பரப்பிய சங்கமித்திரர், குண்டலகேசி ஆசிரியரான நாதருத்தனுர், சோழநாட்டைச் சேர்ந்த புத்ததத்ததேரர், சீனுவில் கொள்கை பரப்பிய போதிதருமர், நாலந்தா பல்கலைக் கழகத் தலைவரும், யுவான் சுவாங்கிற்கு வடமொழி கற்பித்தவருமான தருமபால ஆசாரியார் வீரசோழியம் இயற்றிய புத்தமித்திரனுர், திருஞான சம்பந்தருடன் போதிமங்கையில் வாதம் செய்ததாகக் கூறப்படும் சாரிபுத்தர் முதலியோர் தமிழகத்துக்குப் புத்தப் பெரியார்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். காவிரிப்பூம்பட்டினம், நாகப்பட்டினம், காஞ்சீபுரம், திருப்பாதிரிப்புலியூர், மதுரை, வஞ்சி முதலிய நகரங்கள் பண்டு தலைசிறந்த புத்தப்பதிகளாகத் திகழ்ந்தன.

இவ்வாறு சிறப்பும் பெருமையுங்கொண்ட புத்தமதம், இன்று பிறந்த நாட்டிலே இறந்து, வேறு நாடுகளில் வளர்ந்து வாழ்ந்து உயர்ந்த நிலை அடைந்துள்ளது. அதற்குக் காரணம் " புத்தர் ஆன்மாவைப்பற்றிய கொள்கையைத் தள்ளவில்லை அவரைப் பின்பற்றுவோர் எப்பொழுது பெரும்பிழை செய்யத் தலைப்பட்டாரகளோ அப்பொழுதே இந்தியாவில் புத்தமதம் அழிந்தது " என்று அன்னி பெசண்ட் அம்மையார் கூறுவது ஆராயற்பாலது.

கிறித்துவர்களுக்கு நம்பிக்கையும் அதிசயங்களும், முகமதியர்களுக்கு விதியும் மதப்பற்றும், பிராமணர்களுக்குச் சாதிப் பிரிவும் சடங்குகளும், சைனர்களுக்குக் கடுந்தவமும் நிருவாண நிலையும், கன்பூசியர்களுக்குப் பரம்பரைப் பழக்கமும் வெளிப்படையான அன்பும் எவ்வாறு கொள்கைகளாக இலங்குகின்றனவோ, அவ்வாறே புத்தர்களுக்கு அன்பும் தூய்மையுமே தலையாய கொள்கைகளாக ஒளிர்கின்றன. 'அன்பின் வழியது உயிர்நிலை' என்பதற்கேற்ப, அன்பை உயிர்களுக்கு உணர்த்தி அதன்மூலம் யாவரும் கேளிரென்று உறவை வளர்க்க விழைந்த அறிவியல் மதமே புத்த மதம் எனின் மிகையாகாது. ஆகவேதான் மாக்ஸ் முல்லரும்,

"எல்லாவற்றின் இருப்பு, எல்லாவற்றின் தனிப் பண்பு, எல்லா முயற்சிக்கும் உயர்ந்த பொருளென்னும் தனித்தன்மை ஆகியவைகளின் அழிவைப்பற்றிச் சொல்லிய மதம் நூருயிரக்கணக்கான மனித உயிர்களின் நினைவுகளில் பிடிப்புக்கொண்டிருக்க வேண்டும். அதே சமயத்தில், ஒழுக்கம், அறம், அன்பு, தன்னலத்தியாகம் முதலியவற்றின் கடமைகளை விதித்து, ஒரு குறிப்பிடத்தக்க நலம் மிக்க ஆட்சியை இந்திய மக்களின்மேல் மட்டுமன்றி நடு ஆசியாவின் தாழ்ந்த காட்டுமிராண்டிகளின்மேலும் ஏற்படுத்தியது, ஒருவராலும் விளக்கிக்கூற இயலாத விடுகதையாகும்" என்று வியந்து கூறுகின்ருர்.

# தமிழுலகில் பொன்னொளி.

"உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க — உலகனைத்தும்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான்மாடக் கூடல் நகர்"

என்று, நுண்மாண் நுழைபுலமிக்க புலவர் பெருமக்கள் நிறைந்த மதுரைமாநகர்ச் சிறப்பை வியந்துரைத்தது பரிபாடல். வாழ்வை அகமென்றும் புறமென்றும் இரு கூறுகளாகப் பிரித்தாய்ந்த அருந்தமிழ்ப் புலவர்கள், தம்முள் நெருங்கி நிறைந்த முச்சங்கங்களின் அழிவுக்குப் பின்னர், நான்காவது தமிழ்ச் சங்கம், மதுரையம்பதியிலே, தமிழ்ப் புலவரும், புரவலருமான பாண்டித்துரைத் தேவரவர்களால், 1901-ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 14-ஆம் நாளன்று நிறுவப்பெற்றது. அன்றுதொட்டு இன்றுவரை அது தமிழுலகில் செய்துவரும் பெருந்தொண்டினை இந்நாடு நன்கறியும். செந்தமிழென்னுந் திங்களிதழை வெளியிட்டும், பல்வேறு தமிழ் நூல்களை அச்சிட்டும், தமிழ் மொழியைத் தனியே பயின்று பட்டம்பெற வழிவகுத்துத் தேர்வுகளை நடத்திப் பல பெரும் புலவர்களைத் தோற்றுவித்தும், தமிழ்க் கல்லூரி வைத்து நடத்தியும், தமிழ் மக்களுள்ளத்தே மொழி, நாடு, இனப் பற்றுகளை மிகுவித்துள்ளது.

'ஆண்டநாள் ஆண்டு மாண்ட செந்தமிழ்ப் பாண்டிய மன்னன் மீண்டுவந்து' தமிழவை கூட்டியதுபோல, மே 30-ஆம் நாள் தொட்டு, ஜூன் 5-ஆம் நாள் வரை, மதுரைத் தமிழ்ச் சங்கம் பொன்விழா மாநாடு கூட்டித் தென்னக வரலாற்றில் தனக்கென ஒரு பொன்னேட்டை ஏற்படுத்திக்கொண்டது. இயற்றுறை அறிஞர்களின் தேன்மாரியன்ன சொற்பொழிவும், இசைத்துறைவாணர்களின் இசையமிழ்தும், நாடகக் கலைஞர்களின் நல்விருந்தும், செவிக்கும் காட்சிக்கும் இனிமை நல்கின. சாதி, சமய, கட்சி வேறுபாடுகளை மறந்து, அறிஞர் பெருமக்கள் பலரும் குழுமினர். யாண்டும் தமிழ் முழக்கம்! யாண்டும் தமிழிசை! யாண்டும் தமிழுணர்வு தரும் நாடகங்கள்! இவைகளில் திளைத்த தமிழ் நெஞ்சங்கள்! இவைதாம் எங்கும் நிறைந்தன.



"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பார்;
கள்ளத்தால் நெருங்கொணாதே;
எனவையம் கலங்கக் கண்டு
துள்ளும்நாள் எந்நாள்? உள்ளம்
சொக்கும்நாள் எந்தநாளோ?"

என்ற கவிஞர் திரு. பாரதிதாசனாரின் கனவு அந்த ஏழு நாட்களிலும் நனவாயிற்று. பொன் விழாவின் முடிவுகள், தமிழகத்தில் நிலவும் உணர்வில் தெளிவும், ஊக்கத்தில் முயற்சியும் ஒற்றுமையில் வலுவும் ஏற்படுத்தும் என்பது உறுதி.

தங்குபுகழ்ச் செந்தமிழ்க்கோர் அன்பாகில் 'அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே' என்ற குறிக்கோளுடன் தமிழ்ப் பணியைத் தனது தலையாய பணியாகக்கொண்டு, காலஞ்சென்ற செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், த. வே. உமாமகேசுவரனாரது உழைப்பிலே ஊறி வளர்ந்து, பொன்விழா நோக்கி இயங்கும் கரந்தைத் தமிழ்ச் சங்கம், பொன்விழா கொண்டாடிய மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் சங்கத்தை நோக்கி, 'தொடர்ந்து செந்தமிழ்த் தொண்டு செழிக்க; இடைவிடாத தமிழ்ப் பணியுடன் வைர விழா நோக்கி வளர்க' என்று மனம் நிறைந்து வாழ்த்துகின்றது. பொன் விழாவைச் சிறப்புற நடத்திமுடித்த குழுவினரையும் தலைவரையும் பாராட்டி மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

---

# புத்தர் பொன்மொழி.

"மெலியவர்க் குலகை மிருதுவாக்குவதும்
மேன்மை செல்வமன்ன துறையிலே
வலியவர்க்கு நனிபெருமை யாக்குவதும்
மனதிரக்க மெனும் உணர்வுகாண்"

(ஆசியச்சுடர்)

மூலம்: சர். எட்வின் ஆர்னால்டு.
மொழிபெயர்ப்பு: திரு. மீ. உ. சான்முகமது.

# நிகழ்கால வினைவடிவம்.

[ ஞா. தேவநேயன் ]

தொல்காப்பியர்,

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

"காலந் தாமே மூன்றென மொழிப"

"இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்ற
அம்முக் காலமுங் குறிப்பொடுங் கொள்ளு
மெய்ந்நிலை யுடைய தோன்ற லாறே"

என்னும் நூற்பாக்கள் வாயிலாக (வினையியல், 1, 2, 3,), வினைச் சொற்காலம் மூன்றெனக் கூறியிருப்பினும், நிகழ்கால வினையை முற்று வடிவிலோ எச்ச வடிவிலோ இடைநிலைகாட்டி யாண்டுங் கூறவேயில்லை. அவர்,

"செய்து செய்யூச் செய்பு செய்தெனச்
செய்யியர் செய்யிய செயின்செயச் செயற்கென
அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி" (ஷை 31)

என வினையெச்ச வாய்பாடுகளை, ஒருவாறு நிகழ்காலமும் அடங்க, முக்காலத்திற்கும் தொகுத்துக் கூறினரேனும், பெயரெச்ச வாய்பாடுகளைக் கூறுமிடத்து,

"செய்யும் செய்த என்னுஞ் சொல்லே" (ஷை 37)

என, நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் பொதுப்படச் 'செய்யும்' என்னும் ஒரே வாய்பாட்டை ஆண்டாரேயன்றி,

"செய்த செய்கின்ற செய்யுமென் பாட்டின்"

என நன்னூலாரைப் போல (          ) நிகழ் காலத்திற்கெனத் தனிப்பட ஒன்றையுங் கூறிற்றிலர்.

சேனாவரையர் உள்ளிட்ட உரையாசிரியன்மாரும், முக்கால வினை முற்றிற்கும், "உண்டான், உண்ணா நின்றான், உண்பான்" என எடுத்துக்காட்டினரேனும், நிகழ்கால வினையைத் தொல்காப்பியர் விதந்து குறிப்பிடும் நூற்பாக்களின்கீழ் செய்யா நின்றான் என்னும் வாய் பாட்டு வினைமுற்றைக் காட்டாவிடத்தெல்லாம் 'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினையையே எடுத்தாண்டுள்ளனர். 'ஆநின்று' என்னும் இடைநிலை 'கின்று' என்பதுபோல் அத்துணைச் சிறந்ததன்று. ஆயினும், அதுவும் தொல்காப்பியத்துக் காணப்பெறவில்லை.

கிறு கின்று ஆநின்று என நிகழ்கால இடைநிலை மூன்றென்பர் நன்னூலார். இவற்றுள், கிறு என்பது கின்று என்பதன் தொகுத்தலே. இவற்றை இரண்டாகக்கொள்ளினும் மூன்றாகக் கொள்ளினும், இழுக்கன்றாம். ஆயின், இவற்றுள் ஒன்றைக்கூடத்



தொல்காப்பியர் தனியாகவோ வினைச்சொல்லில் வைத்தோ குறியாதது மிகவும் வியத்தற்குரியதே.

இனி, நிகழ்கால வினைபற்றிய தொல்காப்பிய நூற்பாக்களும், அவற்றிற்குச் சேனாவரையர் தந்த எடுத்துக்காட்டும், வருமாறு:—

"நிகழூஉ நின்ற பலர்வரை கிளவியின்
உயர்திணை யொருமை தோன்றலு முரித்தே
அன்ன மரபின் வினைவயி னான" (பெயரியல், 19)

எ. டு: சாத்தன் யாழெழூஉம், சாத்தி சாந்தரைக்கும்.

"பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னும் கிளவியொடு கொள்ளா" (வினையியல் 30)

(இதற்கு எடுத்துக்காட்டு நூற்பாவிலேயே உள்ளது)

"நிலனும் பொருளுங் காலமுங் கருவியும்
வினைமுதற் கிளவியும் வினையு முளப்பட
அவ்வறு பொருட்குமோ ரன்ன வுரிமைய
செய்யுஞ் செய்த வென்னுஞ் சொல்லே" (ஷை 37)

எ. டு: வாழுமில், கற்குநூல், துயிலுங்காலம், வனையுங்கோல், ஓதும் பார்ப்பான், உண்ணுமூண்......... (புக்கவில், உண்ட சோறு, வந்தநாள், வென்றவேல், ஆடிய கூத்தன், போயின போக்கு)

"அவற்றொடு வருவழிச் செய்யுமென் கிளவி
முதற்கண் வரைந்த மூவீற்று முரித்தே" (ஷை 38)

(இதற்கும் எடுத்துக்காட்டு நூற்பாவிலேயே உள்ளது)

"முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை
எம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து
மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" (ஷை 43)

எ. டு: "மலைநிற்கும், ஞாயிறியங்கும், திங்களியங்கும் எனவும்; 'தவங்கதிர்க் கனலியொடு மதிவலந் திரிதருந் தண்கடல் வையத்து' எனவும், வரும்".

"மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுதற் கிளவி
செய்வ தில்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டா கும்மே" (ஷை 45)

எ. டு: "......ஒருவன் றவஞ்செய்யிற் சுவர்க்கம் புகும், தாயைக் கொல்லின் நிரயம் புகும், எனவும், மிக்க தன் வினைச்சொ ஞேக்கி அம்மிக்கதன் றிரிபில் பண்பு குறித்த வினைமுதற் கிளவி நிகழ்காலத்தான் வந்தவாறு கண்டுகொள்க".

"வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினு நிகழ்வினுஞ் சிறப்பத் தோன்றும்
இயற்கையுந் தெளிவுங் கிளக்குங் காலை" (ஷை. 48)

எ. டு: "......கூறை கோட்படா முன்னும், இக்காட்டுட் போகிற் கூறை கோட்பட்டான், கூறை கோட்படும் என்னும்......... மழைபெய்யா முன்னும், மழை பெய்தது, மழை பெய்யும், என்னும். ஆண்டு எதிர்காலத்திற்குரிய பொருள் இறந்த காலந்தானும் நிகழ்காலத்தானும் தோன்றியவாறு கண்டுகொள்க".

இதுகாறும் கூறியவற்ருல், தொல்காப்பியர் 'செய்யும்' என்னும் எதிர்கால வினை வாய்பாட்டையே நிகழ்காலத்திற்குள் கொண்டமை தெளியலாம். ஆயின் அவர் காலத்துச் 'செய்கின்ருன்' என்னும் வாய்பாட்டு வினை வழக்கில் இலதோவெனின், உண்டு, அதனை அவர் செவ்வையாய் ஆராய்ந்திலர் என்றே கொள்ளல்வேண்டும். அஃதெங்ஙனமெனின், கூறுவல் :—

'செய்கின்று' என்னும் பாலீறற்ற நிகழ்கால வினை, பழஞ் சேர நாடாகிய மலையாள நாட்டில், செய்யுந்நு எனத் திரிந்து இருவகை வழக்கிலும் வழங்குகின்றது. இத்திரிபின்படியே, செய்கின்ருன் என்னும் பாலீறேற்ற வடிவும், முறையே, செய்குந்நான்—செய்குநன் என்றும், செய்குந்நான்—செய்யுந்நான்—செய்யுநன்—செய்நன் என்றும், திரிந்து, தமிழிலக்கியத்தில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது. இங்ஙனமே, செய்குநர் செய்நர் எனப் பலர்பாற் சொல்லும், செய்குந, செய்ந எனப் பலவின்பாற் சொல் லும், வழங்கி வருகின்றன. இவையெல்லாம் தமிழில் நிகழ்காலங் குறித்த வினையாலணையும் பெயர்களாம். மகிழ்நன், வாழ்நன் (வாணன்) முதலியனவும் இத்தகையனவே. செய்யுந்நு என்னும் மலையாள வடிவம் நிகழ்கால வினைமுற்ரும்.

'செய்குந', 'செய்ந' என்னும் வாய்பாட்டுப் பலவின்பால் வினையாலணையும் பெயர்கள், தொல்காப்பியத்திற் பலவிடத்தும் பயின்று வருகின்றன.

எ. டு: எழுத்ததிகாரம் (1) தொகைமரபு.

"இயல்பா குநவும் உறழா குநவும்" (9)
"இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்"
உறழா குநவும்" (16)
'வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்" (17)



(2) குற்றியலுகரப்புணரியல்.

"கிளந்த வல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கில் மருவொடு திரிநவும்" (78)

சொல்லதிகாரம் (1) இடையியல்.

"புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதநவும்
வினைசெயல் மருங்கிற் காலமொடு வருநவும்
வேற்றுமைப் பொருள்வயின் உருபா குநவும்
அசைநிலைக் கிளவி ஆகி வருநவும்
தத்தம் குறிப்பிற் பொருள்செய் குநவும்
ஒப்பில் வழியாற் பொருள்செய் குநவும்" (2)

(2) எச்சவியல்.

"பெயர்நிலைக் கிளவியின் ஆஅ குநவும்
திசைநிலைக் கிளவியின் ஆஅ குநவும்
தொன்னெறி மொழிவயின் ஆஅ குநவும்
மெய்ந்நிலை மயக்கின் ஆஅ குநவும்
மந்திரப் பொருள்வயின் ஆஅ குநவும்" (53)

பொருளதிகாரம் பொருளியல்.

"அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்" (37)

இஃதேல், தொல்காப்பியர் தம் நூலுள் தாம் கூறியதையே ஏன் ஆராய்ந்திலர் எனின்,

"தொண்டுதலை யிட்ட பத்துக்குறை எழுநூற்று"

என அவர் செய்யுளியலில் (100) தாம் கூறியதையும் நோக்காதே.

"ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்"

எனக் குற்றிய லுகரப் புணரியலிற் கூறியதுபோன்றே எனக்கூறி விடுக்க. (தொண்டு=9. தொண்டு+பத்து=தொண்பது (90) தொன்பது—ஒன்பது. தொண்டு+நூறு=தொண்ணூறு (90) தொண்டு+ஆயிரம்=தொள்ளாயிரம்=900)

அற்றேல், கின்று என்பது றன்னகரங் கொண்டிருக்கவும் அதன் திரிவில் தந்நகரம் வந்த தெங்ஙனமெனின், தந்து—தந்நு, வந்து—வந்நு, எனத் தந்நகரம் பயின்றுவரும் சேரநாட்டு வழக்குப் பின்பற்றி யென்க. செய்நன் என்னும் வடிவு தோன்றியதே மூக் கொலிமிக்குப் பயிலும் சேரநாட்டில்தான்.

இதுகாறும் கூறியவற்ருல், 'கின்று' என்னும் நிகழ்கால இடைநிலை திரிந்தோ திரியாதோ தொல்காப்பியர் காலத்திலும் வழங்கிற்றென்றும், அவர் நிகழ்காலத்திற்குத் தனி வினை வடிவு கூருதது குன்றக் கூறலாமென்றும் அறிந்துகொள்க.

சென்ற இதழின் தொடர்ச்சி.

# புயல்.

ஆசிரியர் : செகப்பிரியர்.
மொழிபெயர்ப்பாளர் : புலவர். R. ஏகாம்பரநாதன்.

---

## அங்கம்—5. களம்—1.

**இராசேந்திரன் :—** ஐயோ, தாங்களும் என்னைப்போலவா? இருவரும் ஓரே நிலைக்கு ஆளாகிவிட்டோமா? அவர்கள் இருவரும் இருந்தால் வஞ்சி, நாகை இரண்டிற்குமே உரிமையாளர்களாகி நல்லாட்சி செய்ய நாம் கண்டின்புறலாமே? நமது வாழ்வின் முடிவில் நமது உயிர்கள் துன்பச் சுமையுடன் பிரிவதா? நமது பிரிவில் நமது பிள்ளைகள் கண்ணீர்விட அவர்கள் இனிய முகத்தைப் பார்த்துக்கொண்டு அமைதியாகப் பிரிவதல்லவா பெற்றோர்களுக்கு இயற்கையான வழி. அவ்வழிக்கு மாறாக நமது நிலைமை அமைவதா? எனக்கு மிகவும் வருத்தம் தருவதாகவன்றோ உளது உங்கள் நிலைமை. உங்கள் மகளும் எனது மகனும் உயிர் பிழைத்து வருவதாக இருந்தால் நான் இக்கடலின் அடியில் சிப்பியாக இருக்கவும் உடன்படுவேன். நமது விருப்பத்தை நிறைவேற்றிவைக்க இத்தீவில் யார் உள்ளார்கள்?

**இராசசிம்மன் :—** அரசே, தாங்கள் கடலிலிருந்து இத்தீவுக்கு எப்படி வந்தீர்கள்? இத்தீவில் எப்படியெல்லாம் வாழ்ந்தீர்கள்? புயலிலிருந்து நாங்கள் எப்படிப் பிழைத்தோம்? இவையெல்லாம் விளங்கச் சொன்னால்தான் எங்கள் மனம் அமைதிபெறும். தங்களை யாவரும் வஞ்சி மன்னன் என்று உண்மையாக நம்பி மதிப்புக்காட்ட வழியுண்டாகும்.

**சயசீலன் :—** இந்த விந்தையான தீவில் நீவிர் இந்த அளவுக்குத்தான் அமைதிபெறலாம். நான்தான் வஞ்சி மன்னன். நீங்கள் மூவரும் சேர்ந்து என்னைத்தான் வெளியேற்றினீர்கள். நான் இங்கு வந்தது—இங்கு தலைவனானது—நீங்கள் இங்குவந்து சேர்ந்தது முதலிய நிகழ்ச்சிகளையெல்லாம் மற்றொரு நாளைக்கு யாவரும் ஒன்றாகக் கூடியிருக்கும்போது விளக்கமாகக் கூறுவேன். ஆனால் தாங்கள் யாவரும் சேர்ந்து எனக்கு வஞ்சி அரசினைத் தந்தமையான் உங்களுக்குக் கைம்மாறு காட்டுதலும் இன்பத்தை ஊட்டுதலும் எனக்குரிய கடமையாகவும் நீதியாகவும் நான் எண்ணுகிறேன். இத்தீவின் குடிகளற்ற அரசனுக்கு



கொலு மண்டபம் இல்லாத அரண்மனை இதுதான். இங்கேதான் நான் தங்கி இருப்பது. அருள்கூர்ந்து யாவரும் இக்குகைக்குள்ளே வாருங்கள். உங்களால் அங்கே காணப்படுவன உங்களுக்கு எவ்விதப் பயனைத் தரும் என்பதனை நான் கூற விரும்பிலன். அது முடிந்ததொன்றுமன்று.

(குகைக்குள்—வீரராசேந்திரனும்—மாலினியும் யாழை மீழற்றிக்கொண்டுள்ளனர்.)

**இராசசிம்மன் :—** இது என்ன விந்தை? வீரராசேந்திரனேதான். இளவரசே நீ இங்கு எப்படி வந்தாய்?

**வீரராசேந்திரன் :—** புயல் பயமுறுத்தியது. யாருக்கும் கெடுதல் விளையவில்லை. கடல் அலைகள் உங்களையெல்லாம் விழுங்கி — எதற்காக நடக்காதவற்றைச் சொல்லவேண்டும்? (முழங்கால் படியில் தந்தை முன்நின்று) அப்பா, வணக்கம். உங்கள் மனம் என்னபாடுபட்டிருக்குமோ ?

**இராசேந்திரன் :—** அப்பா, எழுந்திரு, நீடூழி வாழ்வாயாக (அணைத்துக்கொள்ளுதல்).

**மாலினி :—** ஆ, என்ன விந்தை. நான் காண்பது ஒரு புது உலகம். அழகிய உலகம். மக்கள் இனமே அழகு நிறைந்தது என்பதைக் காண்கின்றேன்.

**சயசீலன் :—** உனக்கு எல்லாம் அழகாகத்தான் தோன்றும். நீ பார்ப்பது அழகுக் கண்ணாடி வழியாதலின் தோன்றுவதில் விந்தையில்லை.

**இராசேந்திரன் :—** வீரராசேந்திரா, உன்னோடிருந்த தெய்வத்தின் பெயர் என்ன? இத்தீவின் காவல் தெய்வமா? இத்தெய்வத்தின் அருளால்தான் நாம் உயிருடன் ஒன்றுசேர முடிந்ததா?

**வீரராசேந்திரன் :—** தந்தையே நீங்கள் ஐயுறும் உருவம் தெய்வம் அல்ல. நம்மைப்போன்ற மானிடப் பிறவியே. ஆனால் இப்பெண் தெய்வத்தின் அருளால் என் வாழ்க்கைத் துணைவியானாள். நான் தங்களை இழந்துவிட்டதாகவே கருதியிருந்தமையால் தங்களின் உடன்பாடின்றி இவளைத் துணைவியாக்கிக் கொண்டேன். இப்பெண்ணின் தந்தையார்தான் இவர்.

இவரது (சயசீலன்) பெருமையையும் மற்றவற்றையும் நான் இளைஞனாக இருந்தபோதே எனக்குத் தாங்கள் கூறியிருந்தீர்கள் அல்லவா? அவர்களை நான் பார்க்குமுன் எனக்கு அவர்கள் உயிர்ப்பிச்சை தந்து இத்தெய்வப் பெண்ணையும் தந்தார்கள். இறந்தவரை மீட்டுத் தருதல்போல தங்களையும் தந்தார்கள். தங்கள் உடன்பாடின்றி யாங்கள் கணவனும் மனைவியுமானதற்கு எங்களை மன்னிப்பீர்களல்லவா?

இராசேந்திரன் :— அப்பா, நம்மிருவர் உடலினும் ஓடுவது ஒரே இரத்தம்தான். நீ செய்த காரியத்தில் எனக்கு முழுதும் உடன்பாடுதான்.

கோவிந்த மாறர் :— இறைவனின் அளவிலாக் கருணைதான் என்னென்ன செய்கின்றன—சயசீலன் வஞ்சியிலிருந்து இத்தீவுக்கு வந்ததும்— இத்தீவிலிருந்தே நாகைக்குக் கூட அவள் அரசியானதும் — இறந்தவர்கள் பிழைத்ததுபோல் நாம் இங்கு ஒன்றுகூடியுள்ளதும் எண்ணும்போது இராங்கோன் கமலத்தின் வாழ்வும் நன்கு அமையும் என்பதில் என்ன தடை? இறைவனது வழிகளை நாம் எவ்வாறு அறிய முடியும்? இறைவனே! காதலர்கள் வாழ்வைச் செம்மைப்படுத்துவாயாக.

இராசேந்திரன் :— மாலினி, வீரராசேந்திரா, உங்கள் இருவர் கைகளையும் நீட்டுங்கள். (பிடித்துக்கொண்டு) நீங்கள் இருவிரும் இல்லறமாகிய சகடத்துக்கு நீதியும் அன்புமாகிய கால்களாக இருந்துகொண்டு வாழ்வினை நடாத்துங்கள். உங்களின் சிறந்த வாழ்வினைக் கண்டு மனம் புழுங்கும் வீணர்கள் உலகில் உள்ள கேட்டுக்கும் துன்பத்துக்கும் வாரிசுகளாக அமையட்டும்.

(காத்தவன் — மீகாமனையும், மாலுமிகளையும் அங்கு அழைத்து வருகிறான்)

மாலுமி :— இது நனவா கனவா என்பதில் எனக்கு இப்போதும் ஐயம் உண்டு. என்னை—ஏன் எங்கள் யாவரையும் கப்பல் வேலையை நிறுத்தச்செய்து அழைத்துக்கொண்டுபோய் யாரோ படுக்கவைத்ததும் இப்போது எழுப்பி அழைத்துக் கொண்டு இங்கே கொண்டுவந்ததும் நினைத்தால் தெளிவு எங்கே வரும்? யாருடைய வாழ்விலும் நிகழாத ஒன்றாகவே தோன்றுகிறது எனக்கு.



மீகாமன் :— நீ சரியாகக் கூறினாய், கப்பலும் நம்மைப் போல் தூங்கி விழித்துச் சுறுசுறுப்பாகவே நிற்கின்றது. ஒரு கொடிகூடக் கெடவில்லை. பளபளப்பு மிகுந்தே காணப்படுகின்றது.

இராசேந்திரன் :— எல்லாம் புதுமையாகத்தான் இருக்கின்றது. நாம் நம்மைப்பற்றி அறிந்துகொண்டுள்ளதாக எண்ண ஒன்றுமே இல்லை. எல்லாம் மறைவுதான். மறைவுக்குள்ளே தான் நாம் ஏதோ நடமாடுகின்றோம். எல்லாம் இருள்தான். நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அறிவு பெயரளவில்தான் அறிவு போலும். வெளியிலிருந்து வேறு சிறந்த அறிவென்னும் பொருள் நம் அறிவில் கலந்தால்தான் ஏதேனும் விளங்கிக் கொள்ள முடியும் என்று எண்ணும் அளவுக்குத்தான் இப்போதுள்ள அறிவு பயன்படுகிறது.

சயசீலன் :— அரசரே, தாங்கள் ஏன் குழப்பிக்கொள்கின்றீர்கள். அமைதியாக இருங்கள். ஒன்றும் மறைவானதல்ல. எல்லாம் தெளிவாக அறியக்கூடியனவும் உணரக்கூடியனவும்தான். அதற்குரிய பொழுது வரும்போது — விரைவில் வரும் — எல்லாம் தெளிவுபடுத்துவேன். அறியக்கூடாதன ஒன்றுமில்லை. பேரொளிமுன் மறையக்கூடியது ஒன்றுமேயில்லையென்பது உறுதி. (காத்தவன், கணேசன், திருக்கு, கலியன் மூவரையும் அழைத்துவரல்)

கணேசன் :— அடே, திருக்கு, கலியா இனி நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்காக உழைக்கக்கூடாது. தன்னைத் தவிர பிறர் நன்மைக்காகவே உழைக்கவேண்டும். காலம்போல் உங்களுக்கு எல்லாம் கிடைக்கும். ஆகையால் காலத்தைப் பாருங்கள் பிறருக்காக உழையுங்கடா.

திருக்கு :— ஏ, கணேசா, எனக்கு ஒருமுகம்—அதிலே இரண்டு கண்—அந்தக் கண்ணும் பார்க்கின்றது என்பதெல்லாம் உண்மையானால் இங்கே ஒரு கூட்டம் தெரிகிறதே அதுவும் உண்மைதாண்டா.

கலியன் :— அடே, அப்பா எல்லாரும் பார்க்க நன்றாகத் தான் இருக்கிறார்கள். இன்றைக்கு எனக்கு உடம்பு புண்ணாய் விடும்.

இராசசிம்மன் :— (அமணனைப் பார்த்து) இந்த மீன் உருவம் நாம் கண்ட அதிசயங்களில் எல்லாம் மிகச் சிறந்ததாக

உளது. இதைக் கொண்டுபோனால் நம் ஊர்ப்பக்கம் நல்ல வேடிக்கையாக இருக்கும். நல்ல இலாபம்கூடச் சம்பாதிக்கலாம்.

**சயசீலன் :—** இவனை உங்களுக்குத் தெரியாது. இவன் கலியன். இவன் தாய் கூனி பெரிய மந்திரக்காரி. அறிவு வேலை செய்வதில் நிறைந்த சக்தியுடையவள். அவள் மகன் இவன். எனது ஆள். உங்கள் ஆட்கள் இருவரையும்கொண்டு என்னைக்கொல்ல ஏற்பாடு செய்தான். இவர்கள் உங்களுடன் வந்தவர்கள் தானே? இவர்கள் உடையைக்கொண்டு ஐயுறுகிறீர்கள். அவைகள் இங்கிருந்து எடுத்தவை.

**இராசேந்திரன் :—** நமது அடைப்பைக்காரன் கணேசன், கட்டியக்காரன் திருக்கு—எங்கேயப்பா தங்கியிருந்தீர்கள்?

**திருக்கு :—** என்னால் பேசமுடியாது. பேசினால் உடம்பெல்லாம் வலிக்கும். கணேசா நீ பேசு.

**கணேசன் :—** என் பெயர் படுகாயமடா, கணேசா என்று சொல்லாதே. நான் பட்டது போதும்.

**சயசீலன் :—** நீ இத்தீவுக்கு அரசனல்லவா?

**திருக்கு :—** இல்லை, இவன் இத்தீவுக்கு அரசப்பிள்ளை.

**கணேசன் :—** அப்படியில்லை. நாங்கள் இனிக் கலியனுடன் சேர்ந்து உங்கள் வேலைகளைச் செய்கிறோம். எங்களை மன்னியுங்கள்.

**சயசீலன் :—** கலியா, இவர்களை அழைத்துக்கொண்டு போய் யாவருக்கும் இரவுக்கு வேண்டிய உணவு முதலியவற்றை ஒழுங்குபடுத்து. அவர்கள் உனக்குத் துணையாக இருந்து ஆவன செய்வர்.

**கலியன் :—** இப்போது நானும் ஒரு மனிதனாப்போனேன். இரவுக்கு வேண்டியவற்றையெல்லாம் உடனே ஒழுங்கு செய்வேன். (போகின்றனர்)

**சயசீலன் :—** அவையினரே, இன்று இரவு இங்கு உணவு உண்டபின் எனது நிகழ்ச்சிகள் அனைத்தையும் உங்களுக்குத் தெளிவுபடுத்துவேன். அப்போது பொழுது புலரும். உடனே கப்பலிடம் அழைத்துச்சென்று கப்பலேற்றுவேன். நானும் உங்களுடன் வருவேன். நாகைக்குச் சென்று நாகையில்



இவர்கள் திருமணத்தை முன்னிட்டு பெரிய விருந்து நடத்தலாம். பின்னர் நான் வஞ்சி சென்று எனது பிறப்பிடத்தில் அமைதியாக உயிர் நீப்பேன். இதுவே எனது விருப்பம்.

**இராசேந்திரன் :—** அரசரே, தங்கள் வரலாற்றினை முதலில் கேட்கப் பெரிதும் விரும்புகிறேன் நான்.

**சயசீலன் :—** உணவுக்குப் பின்னர்தான் நிகழ்ச்சிகள் நடைபெறும். காத்தவா, நீ விடுதலை பெறலாம் நான் மந்திரக் கருவிகளை விலக்கிவிட்டேன். பெரிய சக்திகள் இப்போது என்னிடம் இல்லை. ஆதலால் கப்பலை அமைதியாகக் கொண்டு நாகை சேர்ப்பித்துவிட்டு உன் விருப்பம்போல் திரிவாய், முழு விடுதலை.

**காத்தவன் :—** தங்கள் குறிப்பறிந்து எதுவும் இயற்றிவந்த நான் தாங்கள் பணித்தவையை உறுதியாக நிறைவேற்றுவேன். பிரியா விடைபெறுகிறேன் வணக்கம்.

வண்டுதே னுண்ணும் பூக்களில் நானும்
வளமுறக் கூடி மணங்களிப் பேனே
மண்டுறு மலர்களே என்னரும் பாயலாய்
மாபெருஞ் சோலையில் மகிழ்ந்திருப்பேனே
நண்ணுறு வேனிலில் நான்கலந் தோடி
நாளும் பறந்து சிரித்திருப்பேனே
உளமகிழ் கொண்டே உலகொரு பூவாய்
உவந்தாடி நாளும் உயிர்சிறப்பேனே.

**சயசீலன் :—** அவையோர்களே, எனக்குத் துடுமென ஒரு எண்ணம் உண்டாகின்றது. அது சரியானதா தவறானதா என்று முடிவுசெய்யும் சக்திகூட என்னிடம் இல்லை. எனது வாழ்நாளில் அறிவு நிறைந்த பகுதியை நான் இத்தீவில்தான் கழித்தேன். எனது புதிய சக்தியையும் இங்கேயே விட்டுவிட்டேன் இந்த நிலையில் நான் இங்கேயே தங்குவது சிறந்ததா, உங்களுடன் நாகை வருவது சிறந்ததா என்பதனை என்னால் முடிவுசெய்ய முடியவில்லை. முதலில் உங்களுடன் நாகை வருவதாகக் கூறினேன். எனினும் பிறகு தோன்றிய இவ்

வெண்ணம் எனது சொல்லைக்கூட மாற்றிக்கொள்ளுமாறு என்னை வற்புறுத்திக்கொண்டிருக்கின்றது. ஆனால் என் தம்பி வஞ்சியரசை என்னிடம் தந்ததும் நான் தம்பியை மன்னித்தேன். வஞ்சி மன்னன் என்ற நிலையில் உங்களுடன் எனக்கு ஒரு புதுக் கட்டு ஏற்பட்டுவிட்டது. அதுகொண்டு நோக்கின் எனது நிலையை நான் முடிவு செய்வதைக்காட்டினும் நீங்கள் முடிவு செய்வதே பொருத்தமாகின்றது. நான் உங்களை எனது சக்தியால் மகிழ வைக்கலாம் என்பதிலோ அல்லது மயங்கவைக்கலாம் என்பதிலோ எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் நீங்கள் விரும்பினால் என்னை மகிழ வைக்கலாம். இனி எனது வாழ்நாட் கப்பலைச் செலுத்தும் காற்று உங்கள் மூச்சாகத்தான் இருக்க முடியும். எனது எதிர்காலம் மிகவும் சிக்கலானதாக இருக்கும் போல் தோன்றுகின்றது. ஆகையால் நான் உங்களுடைய ஒத்துழைப்பைத் தயவைக்கூட விரும்புகிறேன். எனது விண்ணப்பம் இதுவேயாகும். கடவுளை நோக்கி முட்டாள் செய்யும் விண்ணப்பம் தவறாது கடவுளை அணுகும் என்பார்கள். எதிரிலே உள்ள தங்கள்முன் நின்று நான் செய்யும் விண்ணப்பம் உங்கள் மனத்துள் நன்றாகப் பதியும் என்பதில் ஐயமேது? ஆகவே எனது செயலில் குற்றங்கள் தோன்றின் அவற்றை மன்னித்து உம் மனத்தை என் பக்கம் அணிவகுத்துத் திருப்புமாறு என் சார்பில் வேண்டிக்கொள்கின்றேன். இறைவன் அனைவரையும் காப்பாராக.

முற்றும்.

## புத்தர் பொன்மொழி.

" கொலைபுரிந்து வேள்விசெய்த கொடியசெய்கை நீங்குமின்
புலைநினைப்பில் உயிர்செகுத்தல் புலையருந்தல் போக்குமின்
சுரந்துநின்ற தறிவுபன்மை தோன்றுமாவி ஒன்றுகாண்
இரங்குவார்க்கு வானிரக்க மெய்துமென்ப தியல்புகாண்"

(ஆசியச்சுடர்)

மூலம்: சர். எட்வின் ஆர்னல்டு.

மொழிபெயர்ப்பு: திரு. மீ. உ. கான்முகமது.

சென்ற இதழின் தொடர்ச்சி

# கரந்தைக் கோவை.

[வித்துவான், ச. பாலசுந்தரம்.]

*பாங்கி தமர் வரைவெதிர்ந்தமை தலைவிக்குச் சாற்றல்.*

283 புத்தர் இயேசு புகழ்நபி போற்றிப் புரிநெறியும்
சித்தர் உரைநெறி யுந்திகழ் செந்தமிழ் தேர்கரந்தை
அத்தர் அனுப்பிய ஆர்வலர் பால்நம் அகமகிழ
ஒத்ததி யற்றுதற் கோர்ந்தனர் நங்கை! உறவினரே.

*தலைமகள் உவகை யாற்றுதுளத்தொடு சொல்லல்.*

284 அரும்புசொற் றேறும் அணியுஞ் சுவையும் அறிவுடனே
நிரம்புசெந் தீந்தமிழ் நேருங் கரந்தையை நேயமிக
விரும்புநெஞ் சே! நமை விட்டன துன்பும் மெலிவுமினிச்
சுரும்புளர் சோலை,தென் றல்மதி எல்லாந் துணைசெயுமே.

*தலைவனைப் பாங்கி வாழ்த்தல்.*

285 துறையா னுலவுதொல் நற்றமிழ்க் காவியம் சூழ்கரந்தை
இறையோ னிலவுக ஊழி! எந் தோழிக் கினிதளித்த
மறையா மலரையம் மன்றல் மலர்கொடு மாற்றிமணப்
பறையா லுரைசெயும் பாங்கினைக் கூறசொற் பார்க்குதுமே.

*தலைவி மணப்பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல்.*

286 மெய்வந் திறைநிலை மேவயிப் பூவில் விளக்கமுறச்
செய்வந் தமிழைமன் சிந்தையென் பார்கரந் தைத்தலைவ!
பொய்வந் துறுமிடைப் பூவைமுப் போதும் புதுமலரால்
தெய்வம் பரவுதல் காண்க மணந்துணைச் சேர்வதற்கே.

*பராநிலை கண்ட தலைவன் மகிழ்தல்.*

287 தொல்லோர் கவிநயந் தோன்றும் கரந்தையிற் றோகையரை
நல்லார் எனுமொழி தேறினன் நெஞ்சே! நமக்குமுனர்
அல்லார் குழலிநம் ஆக்கங் கருதி அருளணங்கைச்
சொல்லார் தொடைபுரிந் தேத்திப் பரவுமித் தூய்மைகண்டே.

---

283 அத்தர்-தலைவர். ஆர்வலர்-அன்புச் சுற்றத்தார். அகம்-இல்லம் உள்ளம். ஒத்தது-திருமணம். 284 பிரிந்தாரைத் துன்புறுத்திய தென்றல் முதலியன, மணம் நேர்தலின் துணையாகும் என்றாள் தலைவி. 285 துறையான்—துறைதோறும். 'பகுதியான்' என் புழிப்போல. இறை-தலைவன். மறையாம் அலர்-களவாலாகிய பழிச்சொல். மன்றல்மலர்-திருமணமாலை. பறை-மணமுரசு 286 மெய்-மெய்ஞ்ஞானம். பூவை-தலைவி. 287 அல்-இருள் (கருமை) சொல்லார்தொடை-பாமாலை.

## 20. அறத்தொடு நின்றல்.

*கையறு தோழி கண்ணீர் துடைத்தல்.*

288 எத்துந் திரைக்கடல் ஞாலமொன் றாக இயல்நெறியை
வித்துந் தமிழை விளைக்குங் கரந்தையை வேண்டலர்போல்
சித்தங் கலங்கித் திருக்கவின் போய்விழிச் செங்கயல்நீர்
முத்தம் பொழியுமோர் மூலமென் னேயுரை மொய்குழலே?

*தலைமகள் கலுழ்தற்குக் காரணங் கூறல்.*

289 பகையைத் திருத்திநற் பண்பை வளர்த்திடும் பைந்தமிழ்நூற்
றொகையைப்பெருக்கிடுந் தொல்கரந்தைப்பதிதோகையொப்பாய்
முகையைக் குழைத்துவண் டுண்டோடு சோலையில் முன்கலந்தார்
நகையைப் பறித்தகன் றாரினிச் செய்வதென் நானிலத்தே.

*தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல்.*

290 நாளும் நவில்நவக் கோளும் கணிக்குநன் னாவலரை
ஆளும் கரந்தையில் ஐங்குறு நூற்றினை ஆய்ந்துணர்ந்தார்
சூளும் உரைத்தணங் கின்கழல் சூழ்ந்து துணிவுறுத்தென்
தோளும் மணந்துமுன் சொன்னசொல் நம்பிய துன்பமிதே.

*இறைவி தலைவன் இகந்தமையியம்பல்.*

291 பொழுதுசென் றோடினும் பூத்தசொல் நிற்குமிப் பூவிலெனும்
பழுதகன் றோரை யேபழு தாயதிப் பைங்கரந்தைத் [நாம்
தொழுதுநின் றோதிய தோன்றல்முன் சொல்லியும் தோன்றலர்
அழுதுநின் றேங்கலல் லாற்கரி யாவதற் காருளரே?

*பாங்கியியற் பழித்தல்.*

292 வான்மாறி னும்மொழி மாறாக் கரந்தை வளர்தமிழ்ப்பாத்
தேன்மாரி யோடுநின் செவ்வாய் அமுதம் திளைத்தவர்சொல்
தான்மாறி னாலது தங்கங் களிம்புறும் தன்மையதாம்
மீன்மாறு கண்ணிமே லோரெனச் சொல்வது வெற்றுரையே.

*தலைமகளியற் படமொழிதல்.*

293 சினையீன்ற யாமைதன் சிந்தனை யாலருள் செய்யுமென்பார்
சுனையீன்ற தேமலர்ச் சூட்டிய காதற் றுணைவரன்றி
எனையீன்ற தெய்வமும் என்துயர் நீக்குதற் கில்லைதமிழ்
அனையீன்ற பாவலர் ஆர்கரந் தைப்பதி அன்னவளே.

---

288 ஞாலமொன்றாக—உலகமக்கள் ஓர் உறவினராக. 289 முகையைக்குழைத்து வண்டுண்டோடுசோலை—உள்ளுறை. நகை—மகிழ்ச்சியால் விளையும் சிரிப்பு. 290 நாள்—நட்சத்திரம். கோள்—நவக்கிரகம். சூள்—சத்தியம். 291 கரி—சான்றுபகர்வோர், 292 வான்—மழைபெய்யும் பருவம். மொழி—வாய்மை. மேலவர்—மேலாய பண்புடையோர். 293 சினை—கரு. தமிழன்னை தொகுத்தல் விகாரம். 294 தாழ்குவம்—வணங்குவோம்.



*தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல்.*

294 வண்டமிழ்ப் பாக்கொடு வையினும் தெய்வம் மகிழுமெனக்
கண்டநற் சீரடி யார்கழல் போற்றுங் கரந்தையர்கோன் [முன்
விண்டசொற் பொய்த்தலின் வெந்துயர் தெய்வம் வினைப்பதன்
தண்டனிட் டாய்மலர் தூய்பொறுப் பாயெனத் தாழ்குவமே.

*இல்வயிற் செறித்தமை யியம்பல்.*

295 தோற்றந் தெரிதலில் லாத்தமிழ் மூன்றையும் துங்கமுறச்
சாற்றுங் கரந்தைத் தமிழ்ச்சங்க மன்ன தகவுடையாய் !
காற்றுங் கதிரவன் வெம்மையும் என்றன் கவினுருவை
மாற்றும் எனநினைந் தோசெறித் தாரெனை வாழ்மனைக்கே.

*செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை பகர்தல்.*

296 உள்ளும் புறமும் ஒழியாத போர்கள் ஒழியநெறி
விள்ளுந் தமிழை விதியா லுணர்த்தும் வியன்கரந்தை
வள்ளல் குறிவரக் கண்டுநம் அன்னை வரைமுருகன்
நள்ளென் இருள்வரக் கண்டனன் என்று நவின்றனளே.

*செவிலி தலைமகள் வேற்றுமைகண்டு பாங்கியை வினாதல்.*

297 வித்தி விளைவுசெய் துண்ணாமல் வாழும் வியன்நெறியைச்
சித்தி பெறவுரை செய்யுங் கரந்தைநற் செந்தமிழை
நத்தி உணரகில் லாரென நங்கை நலிவதற்குக்
கொத்து மலர்க்குழ லாயென்ன காரணங் கூறுகவே?

*பாங்கி வெறி விலக்கல்.*

298 அலைமேவு நீர்ப்புவி அல்லல் உறாமல் அருள்கரந்தைக்
கலைமேவு செந்தமிழ்க் காதலித் தேத்துங் கவினிறையே !
மலைமே விருந்துமிம் மான்துயர் நோக்கலை மைம்மறியின்
கொலைமேவ நின்றஉன் கொள்கையென் னேயதைக் கூறுகவே

*செவிலி பாங்கியை வினாதல்.*

299 மருந்துங் கருவியும் இல்லா மருத்துவம் வாய்ப்பதற்குப்
பொருந்தும் வழியுரைக் குந்தமிழ் போற்றிப் புகழ்கரந்தை
விருந்துண் கடவுளை வேண்டாம லிங்கு விலக்கியதேன்?
வருந்தும் எனக்கதன் வாய்மைஎல் லாமுரை வாள்விழியே.

---

295 துங்கம்—சிறப்பு. மனைக்கு வேற்றுமை மயக்கம். 296 உட்போர்—காமம், வெகுளி மயக்கம் முதலாயின. புறப்போர்—பொருள் நிலை ஏற்றத்தாழ்வுகளாலும் செருக்காலும் விளைவன. 297 யோகநெறி காயகற்பங்களாகிய விஞ்ஞான நெறிளால் உயிர் வாழ்தல். (நத்தி) நச்சி விரும்பி நங்கை—தலைவி. 298 அல்லல் உறாமல் வாழுங் கலையைத் தருந்தமிழ் என்க. மைம்மறி—ஆட்டுக் குட்டி 299 மருந்து—பூசுதல், உண்ணுதல், நுகர்தற்காவன. கருவி—அறுத்தல் துளைத்தற்காவன. வழி—உணவு, ஒழுக்கம், யோகம் முதலிய வழிகள். விருந்து—புதிய இலக்கியங்கள்.

*தோழி பூத்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.*

300 மாலை தொடுத்திட வான்மலர் தேடி மனம்வருந்திக்
கோலை எடுத்தொரு கொம்பை வளைத்தனள் கோல்வளையக்
காலை புகுந்தொரு கானை கரந்தைக் கவிமணக்கும்
சோலை மலரளித் தான்துணிந் தேற்றனள் தூமொழியே.

*புனல்தரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.*

301 தீம்புன லாடித் திளைக்கின்ற போதுநம் தீவினையால்
காம்பன தோளியைக் காவிரி வவ்வக் கரந்தைவளர்
தேம்படு செந்தமிழ் தேர்ந்தவோர் வீரன் திடுமெனவார்
பூம்புனல் நீந்திநம் பூவையைக் காத்துபின் போயினனே.

*இதுவுமது.*

இழுக்கம் உறும்வழி ஊன்றிடுங் கோலென இவ்வுலகோர்க்
கொழுக்கம் தருங்குறள் ஓதுங் கரந்தையில் ஓரிளைஞன்
முழக்கம் புரிமணி முத்தாறு நீந்திநம் மொய்குழல்தான்
வழுக்கும் படியறி யாதமிழ் போதினில் வவ்வினனே.

*களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்.*

302 தலைவந்த செந்தமிழ்த் தாங்குங் கரந்தைநற் சாரலிலே
மலைவந்த தென்னுமோர் மாவரக் கண்டு மனநடுங்கும்
சிலைவந்த கண்ணியைத் தென்பா லிருத்தியோர் சேயனையான்
கொலைவந்தவேல்கொடுகொன்றுபின்கொண்டான்குறுநகையே.

*தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினாதல்.*

303 பாலூட்ட சோறிடத் தாயர் படுக்கநற் பஞ்சணைதென்
காலூட்ட மாளிகை காமகிழ் தாடநற் கன்னியர்கள்
தாலூட்ட நீயிருந் துங்கரந் தைத்தமிழ் தன்னையொப்பாள்
நீலூட்டு மெய்யையு நீரோட்டு கண்ணையு நேர்ந்ததென்னே?

*செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியாலறத்தொடு நிற்றல்.*

304 பார்வேண்டு செந்தமிழ்ப் பண்பார் கரந்தைப் பதியினின்றும்
நீர்வேண்டு மென்றுநம் நீள்மனை வந்துமுன் நின்றசிலைப்
போர்வேண்டு தோளவன்பொன்வேண்ட நம்முயிர்பூவையவன்
தார்வேண்டு மென்றனள்தாய்வேண்டு மோவினித்தாழ்குழலே?

---

*300 வான்மலர்–புதிய சிறந்த வெள்ளிய மலர்கள். கவிமணக்கும் என்பது உவமைத்தொகை. பிறனென்றெண்ணாது எற்றலின் துணிந்தென்றாள். 301 காம்பு–மூங்கில், வார்பூம்புனல்–ஆற்று நீர், மணிமுத்தாறு–கரந்தையைச் சார்ந்துசெல்லும் வடவாற்றின் பெயர். 302 மா–யானை. சிலை–விற்போலும் புருவம். சேய்—முருகன். 303 தென்கால்–தென்றற்காற்று. கா–சோலை. தால்–தாலாட்டு. நீல்–நீலம், அஃதாவது பசலை. நீர்–கண்ணீர். 304 சிலைத்தோள்–போர்வேண்டுதோள் எனக்கூட்டுக (சிலை-மலை) பொன்-திருமகளை ஒத்த தலைவியைக்குறித்தது. தார்-(மண)மாலை*



## 21. உடன் போக்கு.

*பாங்கி தலைவற்கு உடன் போக்குரைத்தல்.*

305 மலைதொட்டு நீர்வேட்கை மாற்றுவ தொக்குமெம் மானைமணம்
விலையிட்டு மேற்கொள்வ தென்பது வேலவ! விம்முமுயிர்
நிலைகெட்டு நீங்குமுன் னேயக் கரந்தைக்கு நீங்குக,தீ
உலையிட்ட புன்மெழு கொத்தவள் தன்னை உடனழைத்தே.

*தலைமகன் மறுத்தல்.*

306 மானம் வழங்கலில் லாதிடை யூறுறின் வல்லுயிரைத்
தானம் புரிதமிழ்த் தாங்குங் கரந்தைத் தமிழிசைபோற்
கானம் புரிமொழிக் காரிகை யாள்,கொடுங் காட்டினையும்
வானம் வழக்கறு கானையுந் தாண்டிமுன் வந்திடுமே?

*இதுவுமது.*

பரிக்குந் தமிழ்க்கரந் தைப்பதி சேய்மையைப் பார்க்கிலன்,கோ
ளரிக்கும் கரிக்கும் பகையாகுங் காட்டினை அஞ்சிலன்,தீ
எரிக்குஞ் சுடரைஎண் ணேன்,மலர்ப்பாதம் இருஞ்சுரத்தில்
தரிக்குந் தகவுடைத் தோவெனும் ஐயந் தடைசெய்யுமே.

*அவள் உடன் படுத்தல்.*

307 இயலும் மொழிதனை ஏற்பவர் ஞானம் எழுமளவிற்
பயிலும் எனத்தெரிப் பார்கரந் தைத்தமிழ்ப் பாவல! நின்
அயிலும் அருளுமன் னுண்மைத் துணையும் அவட்கிருக்க
வெயிலும் கொடுஞ்சுர வெம்மையுமென்செயும் மெல்லியற்கே.

*தலைவன் போக்குடன் படுத்தல்.*

308 மணந்தோனை யன்றிமற்றோர்தெய்வமில்லையிம் மண்ணிலெனும்
குணத்தோய் தமிழ்க்கரந் தைப்பதி ஒக்குங் குலக்கொடிக்குப்
பணந்தோய்ந் திருப்பவர் பாழ்மணம் போற்சுடும் பாலைஎளி
தணந்தேகு நெஞ்சம்!நீ எவ்வா றவள்துயர் ஆற்றுவையே?

*இதுவுமது*

ஊக்கம் உணர்ச்சி ஒளிதரு சிந்தனை உண்மைநெறி
ஆக்கம் புரிதலில் லாவகப் பட்டிகள்; ஆய்கரந்தை
நோக்குந் தமிழ்வளம் இல்லைஎன் பாரவர் நோயுளம்போல்
தாக்குஞ் சுரத்தினில் தையல் உடன்செலச் சார்ந்தனமே.

---

*305 மலைதொட்டு–பாறையைத் தோண்டி. விலை – பரிசப்பொருள், உலையிட்ட புன்மெழுகொத்தவள் விம்முமுயிர் நிலைகெட்டு நீங்குமுன் எனக்கூட்டுக. 306 தானம்–ஈகை. காடு–பாலை நிலம். சேய்மை–நெடுந்தூரம். கோளரி–சிங்கம். கரி–யானை. சுடர்–கதிரவன், சுரம்–பாலை, தரித்தல்–தங்கிநடத்தல். 307 பயிலும்–வளமிக்கு வளரும். அயில்–முகவேல். 308 பட்டிகள்–அறிவிலாரும், கயவரும். நோயுளம்–பிறரைத் துன்புறுத்தும் உள்ளம்.*

*தலைவிக் குடன்போக் குரைத்தல்.*

309 காடும் மலையும் கடுஞ்சுர் மும்போய்க் கவிக்குயில்கள்
பாடுந் தடங்கரந் தைப்பதி சேரப் பதமலர்கள்
கூடுங் கொலோவெனக் கூறுவர் ஆறுவர் கோன்தனியே
வாடும் அவர்கருத் தென்னவென் றோர்ந்திலன் வாள்விழியே.

*தலைவி நாணழிவிரங்கல்.*

310 நிலத்திற் சிறந்தவர் நேருங் கரந்தை நிறைதமிழ்நூல்
புலத்திற் சிறந்தவென் பூங்குழ லாய்!தமிழ்ப் பூவையர்க்கு
நலத்திற் சிறப்பெனும் நாணம் நலிவுசெய் நாகரிகக்
குலத்திற் பிறப்பதைக் காட்டிலும் வேறு கொடுமையின்றே.

*கற்பு மேம்பாடு பாங்கி கூறல்.*

311 கண்ணிற் சிறந்த துயிருயி ரின்மிகுங் காட்சியதை
மண்ணிற் தருந்தமிழ் வாழ்கரந் தைப்பதி வான்புலவோர்
பெண்ணிற் சிறந்தது நாணமென் றுலும் பிறங்குகற்பை
எண்ணிற் சிறியதென் பாரினி ஏந்திழை ஏதனன்றே.

*தலைவி யொருப்பட்டெழுதல்.*

312 படிமைசெய் பாவலர் போற்றுங் கரந்தையின் பண்பறியார்
அடிமைசெய் தைம்பொறிக் கச்சமுற் றென்றும் அடுத்தவர்க்கு
மிடிமைசெய் வாரென வெவ்வுரைத் தாயரும் மேவலரும்
குடிமைசெய் பாவை! குளிர்சுரத் தும்பின் குறுகிடுமே?

*பாங்கி சுரத்தியல் புரைத்துழித் தலைமகள் சொல்லல்.*

313 ஐம்பொறி வாயி லவித்தெண் குணமறி வாரி றைவன்
செம்பதம் சேரசித் தார்த்த குரைத்தநற் றெய்வநெறி
நம்புதென் சீர்கரந் தைத்தமிழ் நன்னூல் நயந்திலர்போல்
வம்புரை தாயுறை இல்லினும் செல்சுரம் வாட்டிடுமே?

*பாங்கி கையடை கொடுத்தல்.*

314 காருங் கதிருமவ் வான்மறந் தாலும் கரந்தையர்சொற்
சீருந் தளையுநற் செய்யுள் மறப்பினும் செந்திருவை
ஏரும் இளமையுந் தாமறந்தாலும் இனிமறவேல்
தாருங் கழலும் புனைமார னே!யுயிர்த் தையலையே.

---

*309 தனியே என்பது தாப்பிசை. 310 சிறந்தவர் சிறப்பென்னும் என இயையும். 311 காட்சி–அறிவு. 312 படிமைசெய்பாவலர்–தவ உருத்தாங்கி அதற்குரிய பணிபுரியும் புலவர்கள். மிடிமை–வறுமை. குடிமை–குடிப்பிறப்பிற்குரிய பண்புகள். மேவு அலரும்–பொருந்திய அலர்மொழியும் 313 எண் குணம் அறிவு ஆர் இறைவன். செம்பதம்—செம்மையைத்தரும் பாதம். சித்தார்த்தர்—புத்தர். நம்புதென்சிர்—நம்பி ஒழுகும் அழகு வம்பு—புதுமை. உறை—தங்கியுள்ள. 314 ஏர்—(எழுச்சி) அழகு. (தொடரும்)*

# தமிழ் இலக்கியப் பண்புகள்.

இரா. இளந்திரையன், B. A., (Hons.)

இலக்கியம் சமூகத்தில் தோன்றுவது; சமூகத்திலுள்ள ஒருவனாலோ பலராலோ படைக்கப்படுவது; அதனைக் கற்போரும் பெரிதும், அம்மொழிக்குரிய சமூகத்தினரே. ஆதலின் சமூகத்திற்கான சில பொதுப் பண்புகளை அது கொண்டிருக்கவேண்டுவது இன்றியமையாத தொன்றாகும். இன்றேல் அது படிக்கப்படுவதுமில்லை; பயன்படுவதுமில்லை. எந்தச் சமூகமும் தனக்கெனச் சில பண்புகளைப் பெற்றே இருக்கும் பலரின் கருத்து ஒற்றுமையால் ஒரு மொழி தோன்றுகின்றது. பலரின் கூட்டியக்கத்தால் ஒரு பொது வாழ்வு அமைகின்றது. அவ் வாழ்வில் பலர் பொதுவாக ஏற்கும் பழக்க வழக்கங்களினால் ஒன்று அல்லது சில பண்புகள் அச்சமூக மக்களுக்கே உரிய இயல்புகளாக அமைந்துவிடுவதுண்டு. இப்பண்புப் பாத்திகளிலேயே அம் மொழியாளரின் இலக்கியப் பூம்பயிர்கள் செழித்து வளருகின்றன.

தமிழ்ச் சமூகம் மிக நீண்ட வாழ்க்கை வரலாற்றை உடையது. முதல் மாந்தர் தோற்றம் முதல் இன்றுவரை இடையறவுபடாத வளர்ச்சியை உடையது இச்சமூகம். மேலும் வெளிச் சமூகப் பண்புகளை எதிர்த்து நிற்கும் தடந்தோள் படைத்தது இதன் பண்பு; ஆதலினால் தமிழ்ப் பண்பு என்றழைக்கத் தக்க வாழ்க்கை இயல்புகள் சில இளமையறாது வளர்ந்து வருகின்றன. இவற்றை இன்று வாழும் சமூகத்திலும் காணுகிறோம்; வாழ்ந்த சமூகத்தின் படியெடுப்பாக விளங்கும் இலக்கியங்களிலும் காணுகிறோம். இவற்றை நன்கு தெரிந்துகொண்டபின்னரே தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் இறங்கவேண்டும். இன்றேல் மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வு விதிமுறைகளை அறிந்திருக்கும் நாம் நம் இலக்கியங்களின் உயர்வுகளைத் தவறாகக் கணிக்க முனைந்து விடுவோம். அல்லது நம் இலக்கியங்களின் கை கால்களை ஒடித்து மேலைநாட்டு விதிமுறைச் சட்டத்துட் செருகவும் முனைந்துவிடுவோம். இவ்வாறு சிலர் செய்தும் வருகின்றார்கள். இலக்கியத்திற்கான பொது இயல்புகளை எந்த நாட்டிலிருந்தும் நாம் ஏற்றுக்கொள்ளலாம். சிறப்பு இயல்புகளை மற்றவர்களிடமிருந்து ஏற்று இடர்ப்படுதல் ஆகாது. மனிதனுக்கு இலக்கணமாக மேலை நாட்டார் கூறிய இயல்புகளை வைத்துக்கொண்டு — அதன்படி

இருந்தால்தான் சிறப்பு என்னும் தப்பான எண்ணத்தால் — " இந்திய மக்களும் **வெள்ளை நிறத்தினரே** –, மேலே கறுப்பாக இருந்தாலும் உள்ளே வெள்ளைதான் என்று கூறுதல் எத்துணை இழிவானது! வெளிநாட்டு இலக்கியங்களின் சிறப்பியல்புகளை — அவ்விலக்கியம் தோன்றிய சமூகத்தின் பண்புகளை நம் இலக்கியத்திலும் சாற்றிக் காண முனைவது இத்தகையதேயாம். அன்றியும் நம் சமூகத்துக்கென உள்ள தனி இயல்புகளை நாம் மறைப்பதாகவும் அது முடிந்துவிடும். ஆதலின் நமது பண்புகளைப் பின்னணியாகக் கொண்டே நமது இலக்கியங்களை ஆராய்தல் வேண்டும். அது நமது உயர்வைக் காட்டுவதோடு உலகுக்குப் புதியவற்றைக் காட்டித் தரும் ஆக்கவேலையாகவும் அமையும்.

சமூகப் பண்புகள் இலக்கியக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இருப்பதோடு, இலக்கிய அமைப்பு முறைகளுக்கும் வழிகாட்டியாக இருக்கின்றன.

" யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா "

என்னும் செய்தி இலக்கியக் கருத்துக்களின் உயிர்ப்புக்கு அடிப்படையாக அமைகின்றது. இதேபோல் இயல், இசை, நாடகங்களை வாழ்க்கையில் மிகுதியாகக் கொள்ளுதலாகிய இயல்பு அம்முறைகளிலேயே இலக்கியங்கள் அமைவதற்கு அடிப்படையாகின்றது. முற்காலத் தமிழ் வாழ்வு மூன்றாகக் கிளைத்திருந்ததையும், இடைக் காலத்தில் இயல்வாழ்வாக மாத்திரமே அது மாறியிருந்ததையும், இன்றைய வாழ்வு பழைய மூன்று பகுதிகளையும் நாடி வளர்வதையும் அவ்வக் காலத்திய இலக்கியங்களின் அமைப்பு முறைகளே நமக்குக் காட்டுகின்றன. இந்தக் கண்ணோட்டத்தில் இலக்கியங்களை ஆராய்ந்தால் துலக்கமற்றுக்கிடக்கும் நமது சமூக வரலாறு ஒருவாறு தெளிவுபடக்கூடும்.

தமிழ் வாழ்வின் அடிப்படைப் பண்புகளை, இன்பமும், பொருளும், அறமும் என்னும் மூன்றனுள் அடக்கி, அவற்றை 'ஊழ், நம்பிக்கை' என்னும் இயல்பால் பொதிந்துவிடலாம். தமிழரின் பொருள் முயற்சி இன்பத் திளைப்பாகி அற நாட்டமாகக் கனியும் இயல்பு உடையது. இவை யாவற்றிடையேயும் ஊழ்வினையைத் தமிழர் மறந்துவிடுதலில்லை; ஊழ்வினையை எண்ணி அவர் சோம்பிக் கிடப்பதுமில்லை. உலக வாழ்க்கையை அடியோடு வெறுத்து ஒதுக்குவதோ அதிலேயே ஆழ்ந்து மயங்கிக் கிடப்பதோ தமிழர்க்கு உடன்பாடன்று.



" யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ (து) அன்றே; வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னா (து) என்றலும் இலமே. மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொரு (து) இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தனம். ஆகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

(புறம் 192)

என்னும் **கணியன் பூங்குன்றனாரின்** பாடல் தமிழ்ப் பண்புகளைத் தன்னுள் அடக்கிய ஒரு சூத்திரமாகும். இதில் கூறப்பட்டுள்ள இணை இணையான கருத்துக்களுக்குள் இயங்கி வந்ததே தமிழ் வாழ்க்கை,, இப்பெரும் பண்புகள் திடீரென ஒருநாள் தமிழ் வாழ்வில் நுழைந்தவை அல்ல; பன்னூறாயிரம் ஆண்டுகளாக வந்த வாழ்வில் தோன்றிப் படிப்படியே மலர்ந்தவை. எனவே அவை எளிதில் மாறிவிடவும் முடியாது; அவற்றை எளிதில் மாற்றிவிடவும் முடியாது. இந்த உண்மையை உணர்ந்தால்தான் இப்பண்புகள் பழமையான தமிழ் இலக்கியம் முதல் இன்றைய தமிழ் இலக்கியம் வரை ஊடுருவி நிற்கும் என்பது புலனாகும்.

தலைசிறந்த பண்புகளில் வளர்ந்தவனாதலால்தான் தமிழன், 'வெங்கொடுமைச் சாக்காட்டைப் போர்க்களத்தில் விளைவிக்க எழும்போதும்,

" ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யீரும், பேணித்
தென்புல வாழ்நர்க்(கு) அருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும் —
எம்மம்பு கடிவிடுதும் — நும்மரண் சேர்மின் என
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திற் "

(புறம் 9)

சிறந்து விளங்குகின்றான் தமிழன். தேடும் புகழும், அதைத் தரும் வீரமும், அது நிகழ்த்தும் போரும் அறத்தை அடிப்படையாகக் கொண்டே நிகழ்கின்றன.

இன்பத்தை நுகர இல்லம் புகும் தமிழன் காதல் இன்பம் ஒன்றினையே கருதுவதில்லை. ஈத்துவக்கும் இன்பத்தை அவன் இணையற்றதாகக் கருதினான். 'அல்லல் நீத்த உவகை' தரும் காதல் இன்பத்தை இழந்த ஒரு பெண், அதற்காக வருந்தாது

"அறவோர்க் களித்தலும் அந்தணரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த......" மைக்காகவே (சிலம்பு)

வருந்துகிறாள். இன்பமும் அறத்தின் வழிப்பெறவிழைகின்ற பண்பை இதில் காணுகிறோமல்லவா ?

நெறிமுறைகளும் எத்தனை எத்தனையோ கிளைத்து வளர்ந்தாலும், அவை அத்தனையும் அறத்தை நோக்கியே குவிந்தியங்குவது தமிழ்ப் பண்பு. அப்பண்பு உயிர்த்த தமிழ் இலக்கியத்தின் பண்பும் அதுவாகத்தானே இருக்க இயலும்? இதுதான் இலக்கியத்தின் அடிப்படைப் பண்பாயிற்றே; இதைத் தமிழ் இலக்கியப் பண்பு என்று மட்டும் கொள்ள என்ன இருக்கின்றது. என்று சிலர் எண்ணக்கூடும். அறங்கூறுவது இலக்கியத்தின் இயல்பு என்பதற்கும், தமிழ் வாழ்விலும் இலக்கியத்திலும் காணும் அத்தனை நிகழ்ச்சி முயற்சிகளும் அறத்தின் பொன்னடிகளை நோக்கியே நகர்கின்றன என்பதற்கும் வேறுபாடு உண்டு முன் எடுத்துக்காட்டிய போர் நிகழ்ச்சியே இதனை விளக்கும். போரில் வெற்றியும் அதன் பயனாகப் புகழும் கிடைக்க வேண்டுமென்பதே அதை மேற்கொள்வோரின் நோக்கம். அந்த நோக்கத்தினிடையே, 'ஆவும் பார்ப்பன மாக்களும்' ஆகியோரைப் பாதுகாத்து வீரர்க்கு வீரர் போர் நிகழ்த்தி வெற்றி பெறுதலாகிய அறநெறி எல்லாவிடங்களிலும் காண இயலாத ஒரு பண்பு, இவைபோலவே பிறவும்.

ஈதல் எல்லா நாட்டிலுமே இருக்கலாம். ஆயினும் மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று; 'ஈதல் இயலாதபோது சாதல் இனிது' 'ஈத்துவக்கும் இன்பம் இணையற்றது' என அச்செயலைத் தமது பண்பாகிய இன்பத்துக்கு வாயிலாக்கிக்கொள்ளுதல் தமிழர்க்குரியது. 'அறத்தான் வருவதே இன்பம்' என அவ்வின்பத்தையும் அறத்தினுட்படுத்திக்கொள்ளுதலும் இவர் பண்பே. இப்பண்பினைக் கருத்தாக்கிய தமிழ் இலக்கியத்தின் எந்த ஒரு நிகழ்ச்சியும் இதனையே தழுவி இயங்கும் என்னும்



உண்மையை நினைவிற்கொள்ளுதல் வேண்டும். அதற்கேற்பவே இலக்கியத் திறனாய்வு விதிகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, அமைப்பு முறைகளிலும் தமிழ் இலக்கியம் தனக்கெனச் சில பண்புகளைப் பெற்றுள்ளது. அரிசியும் துணியும் நமக்குப் பயன்படும் பொருட்களே. எனினும் அரிசியை அளக்கும் நாழியைக்கொண்டு நாம் துணியை அளப்பதில்லை. இதுபோல்தான் இலக்கியத்திலும் இசைக்கும், இயலுக்கும் நாடகத்துக்கும் ஒரே படித்தான திறனாய்வு விதிகள் கைக்கொள்ளப்படுதலில்லை. சங்க இலக்கியம் என்றவுடனேயே அகநானூறு, புறநானூறு, கலி, பரிபாடல் ஆகிய யாவற்றுக்கும் ஒரே முறையான ஆராய்ச்சியை நிகழ்த்திவிடுதலாகாது. இலக்கியம் என்பது ஏட்டிலிருக்கும் வெறும் எழுத்துக் குவியலன்று; அது மனித வாழ்க்கையின் பண்புகளைத் தாங்கி இயங்கும் உயிரோவியமாகும். ஆதலினால் எந்த இலக்கியம் எந்தப் பண்பைத் தனது அமைப்பு முறையில் அதிகமாகக் கொண்டுள்ளது என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும். அப்பண்புக்கூறு வாழ்க்கையின் எந்த இயல்பினால் தோன்றியிருக்கவேண்டும் என்று காணவேண்டும். அப்போதுதான் இலக்கியம் காட்டும் வாழ்வை முழுவதுமாகக் கண்டு இன்புற இயலும்.

தமிழ் இலக்கிய அமைப்பு முறையில் நாம் மிகுதியாகக் காண்பது நாடகப் பண்பேயாகும். நாடகப் பண்பு என்னும் போது, கூற்றுமுறையில் தரப்படும் செய்திகளைத் தவிர ஏனைய சூழ்நிலைகள் நிகழ்ச்சிகளெல்லாம் படிப்போரின் கற்பனைக்கு விடப்பட்டுவிடுகின்றன என்பதே பொருள். சிற்சில இடங்களில் சூழ்நிலை முதலியனவும் பேசும் பாத்திரத்தாலேயே விளக்கப்பட்டாலும், எப்போதும் அவ்வாறு அமைவதில்லை. சிலபோது ஒரு சில குறிப்புக்களால் சூழ்நிலை விவரிக்கப்படுவது உண்டு. எனினும் பொதுவாக நமது தொகை நூல்களில் மிகப் பல நாடகத் துணுக்கு உரையாடல்களே.

குறுந்தொகையில், 'தோழி கையுறை மறுத்தது' என்னும் துறையில் வரும் பாட்டு ஒன்று பின்வருமாறு:

"செங்களம்படக் கொன்றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட்டியானைக்
கழல்தொடிச் சேஎய் குன்றம்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே" (குறுந். 1)

(அடுத்த இதழில் முடியும்,)

209457
008

# மதிப்புரை.

## செந்தமிழ்ப் பூம்பொழில்.

தருமபுர ஆதீன வெளியீடு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன 24 ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசை விழா மலராக 25 ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீ லஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் பல இடங்களில் அருளிச் செய்த எண்ணக் குவியலாக இந்நூல் வெளிவந்துள்ளது. அவ்வப்போது உடனிருந்து கேட்டார்க்கேயன்றிக் கேளாதோரும் பயின்று பயன்பெற, இச் செந்தமிழ்ப் பூம்பொழில் பெரிதும் துணைபுரியும். முழுமுதற் கடவுளோடு மக்கட்குத் தொடர்புண்டாக்க சமய குரவர்களும் ஏனைய அடியார்களும் அருளிச்செய்த பாடல்களின் தெளிந்த கருத்துக்களே மிக எளிய முறையில் காணப்படுகின்றன. "குருவருள்" முதலாக "எங்கள் கல்லூரியிலே" என்பது வரை ஐம்பத்திரண்டு தலைப்புக்களில் சமயத்திற்குத் தொடர்பான கருத்துக்களோடு சமுதாயத்திற்கு வேண்டிய அரசியல், மொழி, இலக்கியம் ஆயவற்றைப்பற்றிய செய்திகளும் அருளிச் செய்யப்பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 191 பக்கம் 'திருவருள் துணை' என்ற தலைப்பின்கீழ் "கல்வி வெறும் மொழியறிவு பெருக்குவதாகமட்டும் இருந்தால் அது பயன் தருவதாக அமையாது. நாம் தமிழர்கள், என்றுமே வீண் நினைப்பு வீண் பொழுதுபோக்கு இவைகளில் ஈடுபடுபவர் அல்லர். தமிழன் யாருக்கும் தலைகுனியான். சிறந்து நிற்பவன். ஆகவே திருக்குறளின் இலட்சிய வாழ்க்கை வாழ விரும்புவான். திருக்குறள் கல்வியினாலாயபயன், வாலறிவன் நற்றாள் தொழுதல் என்று நமக்கு வலியுறுத்துகிறது" என்று கூறப்பட்டுள்ளது. தமிழ் நடைக்கும் இவ்வெடுத்துக்காட்டே அமையும். இதுபோன்றே தெளிவாக அரிய கருத்துக்கள் உணர்த்தப்படுகின்றன. மற்றும் ஆங்காங்கே நிகழ்ந்த நிகழ்ச்சிகளை விளக்கும் நிழற்படங்களும் அழகிய அட்டைப் படமும் நூலை அழகுசெய்கின்றன. விலை குறிக்கப்படவில்லை.

## திருக்குறளும் காலமும்.

வித்துவான் வை. சுப்பிரமணியாச்சாரியார்.

பச்சையப்பன் கல்லூரி சேத்துப்பட்டு சென்னை. விலை 0—8—0

இந்நூல் திருக்குறளின் காலத்தை ஆராய்கின்றது. எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களையும், கபிலர், ஔவை, பரணர் போன்ற பெரும் புலவர்களின் வாயுரைகளையும் கொண்டு அக்கால அரசர்களின் காலத்தைத் துணிந்து சங்கநூற் பாக்களில் பயின்று வரும் திருக்குறட் கருத்துக்களை பிற இலக்கியச் செய்திகளோடு எடுத்துக்காட்டி ஏறக்குறைய கி. பி. 505 க்கு முற்பட்டது திருக்குறளின் காலமென முடிவுசெய்கிறார் நூலாசிரியர். வரலாற்றாராய்ச்சி புரிவோருக்கும் மாணவர்களுக்கும் இந்நூல் பயன் தரக்கூடும்.

வித்துவான் ந. இராமநாதன்.

தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்.

[கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு]

## வேண்டுகோள்.

சிறப்பும் செழுமையும் சான்ற நம் தாய்மொழியாகிய செந்தமிழின் சீர்த்தியைச் செவ்வையாக அறியப் பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கணப் பரப்பையும் செறிவையும் பண்புற ஆய்ந்து பரப்பவும், இசை, கூத்து, சிற்பம், ஓவியம், நாடகம் முதலிய கலைகளின் பண்டை மரபையும் யாழ் குழல் முழவு முதலாய கருவிகளின் மாண்பையும், முச்சங்கம், முடிவேந்தர், குறுநில மன்னர், புலவர், புரவலர், முதலியோரின் வரலாறுகளைத் திறமுற ஆய்ந்து தெரிவிக்கவும் அவாவுற்ற திருவாளர் செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள் த. வே. உமாமகேசுவர பிள்ளை அவர்கள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சிறந்த பணிகளில் ஒன்றாகத் தொடங்கிய 'தமிழ்ப் பொழில்' என்னும் இத் திங்களிதழ் இன்றைக்கு முப்பத்திரண்டு ஆண்டுகளாகத் தனித் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழின் பண்பாடு, நாகரிகம், சமயம் முதலியவற்றிற்கும் பல்லாற்றானும் தொண்டாற்றி வந்துள்ளது.

இவ்விதழ் தமிழ் இலக்கிய இலக்கண வரலாறுகளேயன்றிச் சிறந்த மொழிபெயர்ப்புக்களும், நாடகக் காப்பியங்களும், மொழியாராய்ச்சிக் கட்டுரைகளும், கல்வெட்டு, செப்பேடு, கலைப்பொருள்கள் பற்றிய ஆராய்ச்சிகளும் சிறந்த அறிஞர்களைக் கொண்டு வெளியிட்டு வருகிறது. தமிழர் தமிழ்நாட்டு வளர்ச்சியில் ஆர்வமுடைய பெருமக்கள் பலர் இதனை மேன்மேலும் வளர்ப்பது சிறந்த தமிழ்ப்பணியாகும்.

அன்பர்கள் அனைவரும் தமிழ்ப் பொழில் உறுப்பினராய்ச் சேர்ந்து தம் நண்பர்களைச் சேர்ப்பித்தும் இத்தொண்டில் எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டுகிறோம்.

### தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

| | உள்நாடு. | வெளிநாடு. |
|---|---|---|
| முன்பணம் ஆயுள் வரி | ரூ. 50—0—0 | 50—0—0 |
| ,, ஆண்டுவரி சங்க உறுப்பினருக்கும் மாணவர்களுக்கும் | 2—0—0 | 2—8—0 |
| ,, ,, ஏனையோருக்கு | 3—0—0 | 3—8—0 |

C. வேதாசலம் B.A., B.L., அமைச்சர், க. த. சங்கம்.

S. சுயம்பிரகாசம் B.A. B.L., M.L.A. தலைவர். க. த. சங்கம்; பொழிற்றொண்டர்.

தமிழ்ப் பொழில் சேர்க்கை விண்ணப்பம் தமிழ்ச் சங்கத்திற் பெறவும்.